பக்கங்கள்: இருபது

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 08 புதன்கிழமை (21.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 146

# கண்டி மாவட்டத்தில் ஐ.ம.சு. கூட்டமைப்பு அமோக வெற்றி!

# ஐ.ம.சு.கூ: 8, ஐ.தே.க.: 4, ஐ.தே.மு.: எதுவுமில்லை!!

கண்டி, ஏப்.21

கண்டி தேர்தல் மாவட்டத்தின் இறுதித் தேர்தல் முடிவுகள் இன்று அதிகாலை வெளியாகின. இந்த முடிவுகளின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 339,819 வாக்குகளைப் பெற்று எட்டு ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 192,798 வாக்குகளைப்பெற்று நான்கு ஆசனங்களையும் கைப்பற்றின. ஜனநாயக தேசிய முன்னணி 23,728 வாக்குகளைப் பெற்ற போதும் ஆசனங்கள் எதனையும் கைப்பற்றவில்லை. (20 பக்கம் பார்க்க)

# திருமலை மாவட்டத் தேர்தல் முடிவுகள்

# ஐ.ம.சு.கூ. – 2, ஐ.தே.க. – 1, த.கூ. – 1

## 24,448 விருப்புவாக்குகளைப் பெற்று சம்பந்தன் முன்னிலை

கொழும்பு, ஏப். 21

நேற்று வெளியிடப்பட்ட திருகோணமலை மாவட்டத்திற்கான தேர்தல் இறுதி முடிவுகளின்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 59 ஆயிரத்து 784 வாக்கு களைப் பெற்று இரண்டு ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 39 ஆயிரத்து 691 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், இலங்கைத் தமிழரசுக்கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) 33 ஆயிரத்து 268 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் இரா. சம்பந்தன் 24 ஆயிரத்து 448 விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடத்திலும், (20 பக்கம் பார்க்க)

## பஸில், விமல் இரு புதிய முகங்கள்

# 35 பேர் கொண்ட அமைச்சரவை

# வெள்ளியன்று பதவியேற்கும்

## டி. எம். ஜயரட்ண புதிய பிரதமராகிறார்



கொழும்பு, ஏப்ரல் 21

இலங்கையின் புதிய நாடாளுமன்றம் நாளை கூடிய பின்னர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 35 பேர் கொண்ட புதிய அமைச்சரவை பதவி ஏற்கும் எனத் தெரியவருகின்றது.

புதிய அமைச்சரவையில் பிரதமர் பதவி ஆளும் தரப்பின் சிரேஷ்ட உறுப்பினரான டி.எம்.ஜயரட்ணவுக்கு வழங்கப்படும் எனத் தெரிகிறது.

சுமார் முப்பத்தைந்து பேர் கொண்ட புதிய அமைச்சரவையில் ஆக இரண்டே இரண்டு புதிய முகங்களே இடம்பெறும் என்றும், ஏனைய அமைச்சர்கள் பழைய முகங்களாக இருப்பர் என்றும் கூறப்படுகின்றது. (20 பக்கம் பார்க்க)





# பொன்சேகா நாடாளுமன்றுக்கு வருவதற்கு தடை ஏதுமில்லை என்கிறாராம் ஜனாதிபதி

## ரணிலிடம் அவரே கூறினார் என்று தகவல்

கொழும்பு, ஏப்.21

நாளைய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதுவித தடையுமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியிருக்கின்றார் என்று எதிர்க்கட்சித் தலை (20 பக்கம் பார்க்க)

# நாளை நாடாளுமன்றம் கூடினாலும் ஜனாதிபதியின் உரை மே 4 ஆம் திகதியே!

## சபாநாயகராக ஜோன் செனிவிரத்ன?

கொழும்பு, ஏப்.21

அடுத்த மாதம் 4ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போதே அங்கு ஜனாதிபதி பிரசன்னமாகி உரையாற்றுவார் என்று நாடாளுமன்றச் செயற்குழு தெரிவித்துள்ளது.

நாளைய நாடாளுமன்ற அமர்வில் ஜனாதிபதி உரை (20 பக்கம் பார்க்க)

# புதிய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தையும் பயங்கரவாதச் சட்டத்தையும் நீக்க வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்துகிறது

வாஷிங்ரன், ஏப். 21

இலங்கையின் போர் முடிவுற்ற பின்னர் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்றம் அந்த நாட்டில் பலவருட காலங்களாக நடைமுறையில் உள்ள கொடுமை மிகுந்த அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும். அவசரகாலச் சட்டத்தின் கீழேயே அந்த நாட்டில் பரவலாக மனித உரிமைகள் மீறப்பட்டும், நசுக்கப்பட்டும் வந்துள்ளன.

போர் முடிவுற்ற பின்னரான முதலாவது நாடாளுமன்றம் நாளை 22ஆம் திகதி (வியாழக்கிழமை) கூடவுள்ள வேளையில் சர்வதேச மன்னிப்புச் சபை இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது; ஓங்கி ஒலித்துள்ளது.

1971ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக, (20 பக்கம் பார்க்க)

இன்று 21.04.2010 யாழ்.நகரின் மத்தியில் சுபநேரம்10.45 மணி அளவில்



‘மெகா ஹொட்டல்’ Mega Hotel

(குளிரூட்டப்பட்டது)



எனும் உணவகத்தை ஆரம்பிக்கின்றோம்.

164, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஏமெக்ஸ் ஹொட்டல் அருகில்) தங்கள் வரவை நாடும்: உரிமையாளர், ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் தேவை

தரம் 11இல் கல்வி கற்கும் மாணவர் ஒருவருக்கு (கோப்பாய் பிரதேச செயலர் பணிமனைக்கு அருகில்) விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தனிப்பட்ட வகுப்புக்கள் எடுப்பதற்கு ஆசிரியர்கள் உடன் தேவை.

உடன் தொடர்பு: 0773618728, 0770712075, 0213002129 (97224)

## கட்டாயக் கல்வி ஆவணப்பட வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 21

வலிகாமம் கல்விவலய பாடசாலை அதிபர்களுக்கான கட்டாயக்கல்வியை வலுவூட்டும் செயலமர்வும் இறுவட்டு வெளியீடும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் கல்விவலயத்தில் உருவாக்கப்பட்ட கட்டாயக்கல்வி தொடர்பான ஆவணப்படமும் வெளியிடப்படவுள்ளது.

நிகழ்வில் அனர்த்தப் பாதுகாப்புவிழிப்புணர்வுச் செயற்திட்டம் மற்றும் செயலமர்வும் கருத்தரங்கும் நடைபெறவுள்ளன. இதில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களைத்தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் கல்விவலயத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உலகப்பிரசித்தி பெற்ற G-TEC கணனிக்கல்வி நிறுவனத்திற்கு கிளை இணைப்பாளர் (centre - coordinator)தேவை.

தகைமை

கணனித் துறையில் பட்டம் பெற்றவர்/5வருட அனுபவமுள்ளவர்கள் உடனடியாகத்தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு: இன்று(21.04.2010)புதன்கிழமை நாவலர் மணிமண்டபத்தில்பி.ப 2.00 மணிமுதல் நேர்முகத் தேர்வு இடம்பெறும்.

தொடர்பு: 0773585576-0777315262

## தவறிவிட்டது

இல 46, முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணையைச் சேர்ந்த தி.மதனமோகன் ஆகிய எனது தேசிய அ.அ.இல (781372838V) மற்றும் விசேட அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவை தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல 46, முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ அல்லது 0774210080 என்ற இலக்க தொலைபேசியுடனோ தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (97228)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். (NGOS மற்றும் தங்கி நின்று பணி புரியும் பெண்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 0775581490 (சி/566994)

## புதிய இடத்தில் புதிய தலைமையில் எமது சேவைகள்

பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா
பிறீ இங்க் றபர் ஸ்ராம் 500ரூபா
வரிக்கணக்கோ, அளவோ இல்லை.
உங்கள் விருப்பம் போல் இக் கட்டணத்தில் செய்து கொள்ள யாழ். நகரில்.
S.S.மகேந்திரன் ஆட்ஸ், 381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோவில் அருகில்) (சி/566993)

## வேலையாள் தேவை

தகுதியும் திறமையும் வாய்ந்த ஆங்கில அறிவு நிறைவு கொண்ட உதவி முகாமையாளர் (Assistant Manager) தேவை. சகோதர மொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுதியுடையோர் நேர்முகப்பரீட்சைக்குத் தங்களை அறிமுகம் செய்து கொள்ள:

Hotel Etoiles,
No: 34 செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
21.04.2010 நேரம் பிற்பகல் 2-5மணிவரை (97222)

## BARATHY

சித்தன்கேணி

**O/L DAY CLASS**

புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 8 - 1மணிவரை எமது
தனித்துவமும் அதி திறமையும்
கொண்ட ஆசிரியர்குழுவினால்

| | |
|---|---|
| ★விஞ்ஞானம் N. தேவா | ★கணிதம் S. சிவரூபன் |
| ★தமிழ் N. பாலா குகபரன் | ★வரலாறு K. சுதன் R.S.சந்திரன் |
| ★ஆங்கிலம் விஜயபாஸ்கர் மனோகரன் | ★சமயம் N.T.தரன் |
| ★வணிகக்கல்வி, முகாமைத்துவம் T. குமரன் | ★புவியியல் சர்வேஸ்வரன் |

Note:

★ சென்ற ஆண்டு போல் இவ்வாண்டும் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்.

★ நாளுக்கு நாள் மாணவர் தொகை அதிகரித்து வருவதால் உங்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

★ மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் மட்டும்தான் கற்பிப்பார்கள். (சி/561704)

## நன்றியுடன் பணிதொடர வாழ்த்துகின்றோம்



தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல பணிகளை ஆற்றுகின்ற தங்களின் பணியில் ஓர் அங்கமாக எமது பிரதேச மாணவர்களின் கணனிக்கல்வி வளர்ச்சிக்காக கணனிக்கல்வி நிலையம் அமைக்க ஐந்து லட்சம் ரூபா நிதிஉதவியும்,கம்பன் சனசமூக நிலைய மதில்கட்டுவதற்காக ஒரு லட்சம் ரூபா நிதிஉதவியும் வழங்கி உதவிய அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தாஅவர்களையும்,அதற்கு உறுதுணையாகநின்ற நல்லூர் பிரதேச அமைப்பாளர்தோழர் அம்பலம்ரவீந்திரராசா (J,P) அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

கம்பன் வாழ் மக்கள்
திருநெல்வேலி

## மரண அறிவித்தல்

### சின்னப்பிள்ளை பாலசிங்கம்



(ஓய்வு பெற்ற அதிபர், எக்காளத்தொனி விசுவாசி)

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை பாலசிங்கம் ஞாயிற்றுக்கிழமை (18.04.2010) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை- நாகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து- கனகமணி தம்பதியரின் மருமகனும், தேவமலரின் அன்புக் கணவரும், மோகனரஞ்சன், பாமினி, மோகனராஜன், மோகனரங்கன், தர்மினி, சியாமினி, பிறேமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், நேசமணி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், நிர்மலதேவி, வசந்தன், சாந்தி, சாருமதி, ஸ்ரீ, சுதா, டேவிற் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.04.2010) வியாழக்கிழமை காலை 9மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இராசவீதி, கோப்பாய், கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

74/9, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு.
(97227)
தகவல்:
குடும்பத்தினர்.




ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
An ISO 9001:2000 Certified Company
Spoken English பயிற்சி மையம்
veta
Experts in English Training
April 24 முதல் யாழ் நகரில் பிரிவுகள் ஆரம்பம்

Batch I - Sat,Sun 9.30 a.m.
Batch II - Sat,Sun 3.30 p.m.
Batch III - Mon,Wed,Fri 9.30 a.m.
Batch IV - Mon,Wed,Fri 5.00 p.m.

நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.

Come let's speak fluent English

DMI COMPUTER EDUCATION
No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்பாணம்.Tel. : 021-222 4403


## கண்ணீர் அஞ்சலி



எமது மைத்துனர்

### தில்லையம்பலம் செல்வராசா

அவர்களின் (20.04.2010 செவ்வாய்க்கிழமை) திடீர் மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மைத்துனர் வே.பரமசிவம்,
(97226) (சிறிமதனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்) மற்றும் பணியாளர்கள்.




இலவச தொழில்சார் கணனிக் கல்வி

★பக்கவடிவமைப்பு (Page Making), கணனி வரைகலை (Graphic Designing) துறைகளை உள்ளடக்கி, தொழில்தேடிக் காத்திருப்பவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

★பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

★ஆர்வமுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

கிராமசேவையாளர் மற்றும் உறவினர் அல்லாத இருவரது நற்சான்றுப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பிப்பதற்கும்:

முகாமையாளர்,
கேற்வே மொழி மற்றும் தகவல் தொ... நிலையம்
347, கஸ்தூரியார் வீதி, யா... ணம்.
தொ.பே : 02156... (சி/566997)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நாகம்மா

இணுவில் தெற்கு, துரை வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகம்மா நேற்று (20.04.2010) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2010) புதன் கிழமை முற்பகல் 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரைவீதி,
இணுவில் தெற்கு.
(சி/567006)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தீர்வு முயற்சிக்கான முதல் சமிக்ஞை அரசிடமிருந்துதான் வரவேண்டும்

ஈழத் தமிழர்களின் அரசியல் தலைமை தொடர்பான விடயம் கேள்விக்கு உள்ளான சமயத்தில் இடம்பெற்ற இந்தப் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிப் பெரும் சக்தியாக வெளிப்பட்டு, தன்னுடைய பொறுப்பை யும் தனித்துவத்தையும் உரித்தையும் கூட நிரூபித்திருக் கின்றது எனலாம். தேர்தல் முடிவுகள் அந்த உறுதிப்பாட்டைத் தந்து நிற்கின்றன என்பது வாஸ்தவம்தான்.

இந்த இடத்திலிருந்து தமிழ்க் கூட்டமைப்பு அதற்கு அப்பால் எப்படி முன்நகரப் போகின்றது என்பதை உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு அவதானித்தபடி இருக்கின்றார்கள். இச்சமயத்தில் கூட்டமைப்புத் தலைவர்களின் ஒவ்வொரு நகர்வும் - நகர்த்தலும் - ஊன்றிக் கவனிக்கப்படுகின்றது.

இந்தச் சமயத்தில், அமைதித் தீர்வுகாணும் விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முந்திக்கொண்டு முதல் சமிக்ஞையை வெளியிட்டிருக்கின்றது.

"ஒருமித்த நாட்டுக்குள், தமிழ் மக்களின் நியாயமான - சட்டபூர்வமான - நிலைத்து நிற்கவல்ல - அவர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றவல்ல - தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது." - என்ற அறிவிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு பொதுத் தேர்தல் பற்றிய முடிவு உத்தியோகபூர்வமாக இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்பட முன்னரே அவசர அவசரமாக வெளியிட்டு விட்டது.

இந்த அதீத அவசரமும், இணக்கத் தீர்வுக்குத் தயார் என்ற தமிழர் தரப்பின் தாரண்மை பற்றிய அறிவிப்பும் தென்னிலங்கையிலும் புகலிடத் தமிழர்கள் மத்தியிலும் தவறான அபிப்பிராயத்தை வளர்த்துவிடுவதற்கு வாய்ப்பாகிவிடலாம் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பின் இந்த அறிவிப்புத் தொடர்பில் அரசுத் தரப்பிலிருந்து சாதகமான பிரதிபலிப்பு வந்திருப்பது உண்மைதான்.

"எதிர்காலத்தில் செயற்படும் விதம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரோக்கியமான சமிக்ஞையை வெளியிட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது." - என அரசுத் தரப்பின் முக்கிய பிரமுகரும், அரசுத் தலைவரான ஜனாதிபதிக்கு மிகவும் நெருங்கியவரும், ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும கூறியிருக்கின்றார்.

ஆனாலும் இவையெல்லாவற்றையும் கடந்து சில யதார்த்தப் புற விடயங்கள் இந்த விவகாரத்தில் உள்ளன. அவற்றை இந்தச் சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சுட்டிக்காட்டுவது அத்தியாவசியமானதாகும்.

அதில் முதலாவது விடயம் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் இப்போது பந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் களத்தில்தான் உள்ளது என்பதாகும்.

அமைதித் தீர்வுக்கு விடுதலைப் புலிகளே முட்டுக்கட்டை என்று முன்னர் அறிவித்தார் அவர். ஆகவே, புலிகளை அழித்துவிட்டுத் தீர்வு என்றார். விடுதலைப் புலிகளைத் தாங்கள் அழித்துவிட்டனர் என அவர் அறிவித்ததும், தமது அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்திவிட்டுத் தீர்வு என்றார். அந்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, அடுத்த ஏழு வருடங்களுக்குத் தமது ஆட்சியை உறுதிப்படுத்தியதும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்திய பின்னர் தீர்வு என்றார். இப்போது நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட்டாகிவிட்டது. அதில் பெரு வெற்றியை அவரும், அவரது அரசும் சம்பாதித்துமாகிவிட்டது.

இனிமேல், தீர்வுக்கான முன்முயற்சியை ஆரம்பிக்க வேண்டியவர் அவரும் அவரது அரசும்தான். அப்படி ஆரம்பிப்பதற்கு தமிழர் தரப்பில் தங்களுடைய பிரதிநிதிகள் யார் என்பதைத் தமிழர்கள் காட்டியுள்ளனர்; வெளிப்படுத்தியுள்ளனர்.

அந்த ஆக்கபூர்வமான முயற்சிக்கான சமிக்ஞை இனி முதலில் அரசுத் தரப்பிடமிருந்துதான் வரவேண்டும்.

அதைவிடுத்து, ஏற்கனவே யுத்தத்தில் நொந்து, நொடிந்து, துவண்டு, வலுவிழந்து போயிருக்கும் தமிழர் தரப்பு, முந்திக்கொண்டு ஆக்கபூர்வமான சமிக்ஞையை வெளியிட முயன்றால், அதனைத் தமிழர் தரப்பின் பலவீனமாகத் தென்னிலங்கை கருதிவிடக் கூடிய ஆபத்து உண்டு.

அடுத்தது - இன்னொரு முக்கியமான விடயம். அதனை ஏற்கனவே ஒரு தடவை சுட்டிக்காட்டியும் உள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வெறுமனே அந்தக் கட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் மட்டுமே என்ற கருத்து நிலைப்பாட்டிலிருந்து கூட்டமைப்புத் தலைவர்கள் வெளியே வரவேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில், கீழ் மட்டத்திலிருந்து - கிராம மட்டத்திலிருந்து - கிளைகள் ரீதியாகவும், கட்சிகள் ரீதியாகவும் கிளம்பும் சிந்தனை எழுச்சியின் வெளிப்பாடே தமிழ்க் கூட்டமைப்பின் வழிகாட்டலாகவும், செயற்பாடாகவும் அமையவேண்டும். அதைவிடுத்து முன்னர் 22 எம்.பிக்கள், இப்போது வேறு பதினான்கு எம்.பிக்கள் மட்டுமே கூட்டமைப்பு என்ற தவறான சிந்தனை வடிவத்திலிருந்து வெளியே வந்து, பரவலாக்கப்பட்ட செயலாக்கம் மூலம் அடிநிலை மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி, பரந்துபட்ட முறையில் செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக வேண்டும்.

அப்போதுதான் தமிழ் மக்களின் எண்ணவோட்டத்தைப் புரிந்த தீர்வை நோக்கி கூட்டமைப்பு நகர முடியும்.

அந்தத் திசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நகரப்போவது எப்போது............?

# சுற்றுலா மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரும் தபாலகப் பணியாளர்களுக்குத் தங்குமிட வசதி

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.குடாநாட்டுக்கான சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்ளும் தபாலகப் பணியாளர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

காரைநகர்,சுழிபுரம் ஆகிய தபால் நிலையங்களில் இந்தத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு மேற்கொண்டுள்ளார்.

சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு யாழ். குடாநாட்டை பார்வையிட வரும் தென்பகுதித் தபால் பணியாளர்கள் மேற்குறித்த தபால் நிலைய கட்டடங்களில் தங்கி செல்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. (50-224)

# சுற்றுலாப் பயணிகளிடையே மோதல்; கைதான ஒன்பது பேருக்கு அபராதம்!

யாழ்ப்பாணம்,ஏப்.21

சுற்றுலாப் பயணிகள் தங்கும் இடத்திற்கு ஏற்பட்ட போட்டி இரு பகுதியினரை மோதல்வரை கொண்டு சென்றது.

இந்தச் சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட 9 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் அபராதம் விதித்தது.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து சுற்றுலாப் பயணிகளுடன் வந்த இரு வாகனங்கள் இந்த இடத்தைப் பிடிப்பதற்காக ஒன்றையொன்று முந்திக் கொண்டு முதலில் வந்த வாகனம் இந்த இடத்தைப் பிடித்ததாகவும் அதன் பின்னர் வந்த வாகனத்தில் வந்தோர் அது தமது இடமெனக் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

பின்னர் வாக்குவாதம் முற்றிக் கைகலப்பாக மாறியதில் ஒருவர் காயமடைந்ததாகவும், இப்பகுதிக்குச் சென்ற படையினர் இரு பகுதியினரையும் சமாதானப்படுத்தினர். அப்பகுதிக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் சிலரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஒன்பது பேருக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கினை விசாரித்த நீதிவான் ஒன்பது பேருக்கும் தலா 100 ரூபா வீதம் அபராதம் விதித்தார். (50-207)

## குமார் ரூபசிங்கவின் கருத்துரை இன்று

'தகவல் தொழில்நுட்ப புரட்சி மூலம் இலங்கையின் வளமான எதிர்காலம்' என்னும் தலைப்பிலான கருத்துரை நிகழ்வு ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 'நொலேஜ் சிற்றி' என்னும் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்துரை நிகழ்வில் கலாநிதி குமார் ரூபசிங்க கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார். ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## மோசமான வீதிகளால் அவலப்படும் பிரயாணிகள்

யாழ்ப்பாணம், ஏப்.21

வலிகாமத்தின் சில பகுதிகளிலுள்ள வீதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அவற்றில் வாகனங்களில் பிரயாணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரியவருகிறது.

புத்தூர் நிலாவரையிலிருந்து சுன்னாகம் சந்திவரையான வீதியும், சுன்னாகம் சந்தியிருந்து கந்தரோடை செல்லும் வீதியும், மருதனார்மடத்திலிருந்து சுன்னாகம் வரையான வீதியுமே வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாமல் காணப்படுகின்றன. இவற்றில் பிரயாணம் செய்யும் வாகனங்கள் மோசமாகக் குலுங்கிய வாறு செல்வதால் வாகனங்களும் அதில் பயணிப்பவர்களும் பாதிப்படைவதாகக் கூறப்படுகிறது. இந்த வீதிகள் உரிய முறையில் பராமரிக்கப்படாமையே இந்த நிலைக்கு காரணமென பாதிக்கப்படுபவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க)

# நல்லூர்ப் பகுதி வீடுகளுக்குள் பகலில் நுழையும் திருடர்கள்

கொழும்புத்துறை,ஏப்.21

நல்லூர்ப் பகுதியில் பகல் வேளைகளில் வீடுகளுக்குள் நுழையும் திருடர்கள் அங்குள்ள பொருள்களை களவாடிச் செல்லும் சம்பவங்கள் அண்மையில் அதிகரித்துள்ளன.

நல்லூர் வடக்கு, விநாயகர் வீதியில் உள்ள வீடொன்றில் அண்மையில் பட்டப்பகலில் நுழைந்த திருடர்கள் 45 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றையும் களவாடிச் சென்றுள்ளனர்.

வீட்டிலுள்ளோர் ஆலய தீர்த்தத் திருவிழாவுக்குச் சென்றிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்துடன் நல்லூர், செட்டித் தெருவில் ஒரு வீட்டிற்குக் கடந்த வாரம் சென்ற ஒருவர் "வீட்டில் வேலை செய்ய ஐயா வரச்சொன்னார்" என்று கூறி உள்நுழைந்து திருட முயன்றுள்ளார். வீட்டிலுள்ளவர்கள் சந்தேகம் கொண்டு சத்தமிடவே தப்பியோடி விட்டார்.

சென்றவாரம் அத்தியடிப் பிள்ளையார் கோயில் தீர்த்தத் திருவிழாவில் பக்தர்களின் பெறுமதி மிக்க பல தங்க நகைகள் திருட்டுப்போனமையும் குறிப்பிடத்தக்கது. (50-135)

# மாவட்ட தமிழ்த் தினப் போட்டி நாளை மறுதினம் ஆரம்பம்

வடமராட்சி,ஏப்.21

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை ஆகியவற்றில் இடம்பெறும். கடந்த வருடத்தைப் போல இம்முறையும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிக்கு பொறுப்பாளராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா நியமிக்கப்பட்டுள்ளார். (50-236)

# யுவதிகளிடம் சேட்டைவிட்ட ஆசாமிகள் மன்னிப்புக் கேட்ட பின்னர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.21

வீதியால் சென்று கொண்டிருந்த யுவதிகளிடம் சேட்டைவிட முயன்றவர்கள் சமூக அக்கறை கொண்ட இளைஞரால் பிடிக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

யுவதிகள் இருவர் யாழ்.கஸ்தூரியார் வீதியூடாகச் சென்ற கொண்டிருந்த போது அவர்களைப் பின்தொடர்ந்த இருவர் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்ததுடன் சேட்டையிலும் ஈடுபட்டனர். இதனால் அச்சமடைந்த யுவதிகள் இருவரும் அருகிலுள்ள நகைக்கடை ஒன்றினுள் நுழைந்து அங்கிருந்தவர்களிடம் நடந்த சம்பவத்தைக் கூறினர். இதனை அந்தக் கடைக்கருகில் நின்ற ஓர் இளைஞர் அவதானித்துள்ளார். அத்துடன் துரிதமாகச் செயற்பட்ட அவர் குறித்த ஆசாமிகள் இருவரையும் மடக்கிப்பிடித்து விசாரித்த போது அவர்கள் அவரோடு சண்டித்தனம் செய்ய முயற்சி செய்துள்ளனர். ஆனால் அவ்விடத்திற்கு மேலும் பலர் வந்ததை அவதானித்த அந்த ஆசாமிகள் தாம் செய்த தவறுகளை ஒத்துக்கொண்டதுடன் காலில் வீழ்ந்து மன்னிப்பும் கேட்டனர். இறுதியில் கடுமையான எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (க-288)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 09 | 22.04.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : அட்டமி |
| | மு.இ. 09.13வரை |
| நட்சத்திரம் : | பூசம் |
| | பி.ப.01.44 வரை |
| சுபநேரம் | : 07.31-09.01 வரை |
| ராகுகாலம் | : 01.31-03.01 வரை |

# யாழ்.-குப்பிளான் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

வலி. வடக்கு,ஏப்21

யாழ்ப்பாணத்திற்கும் குப்பிளானுக்குமிடையே நடைபெற்று வந்த அரச பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் குப்பிளான் பிரதேச மக்கள் அதிக பிரயாணக் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 770 ஆம் இலக்க பஸ் சேவை கடந்த பல வருடங்களாக தினமும் மூன்று முறை நடத்தப்பட்டு வந்து இடைக் காலத்தில் காலையில் ஒரு சேவையாகக் குறைக்கப்பட்டு, தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளது.

தனியார் மினிபஸ்சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறுகின்றது.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரம் கால் நடையாகச் சென்று பலாலி வீதியிலோ அல்லது காங்கேசன்துறை வீதியிலோ தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

அத்துடன் நோயாளர்கள், பெண்கள், சிறுவர்கள்,பாடசாலை மாணவர்கள், முதியோர் ஆகியோர் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

எனவே இப்பிரதேச மக்களின் பிரயாணக் கஷ்டங்களைப் போக்கும் முகமாக நிறுத்தப்பட்டுள்ள அரச பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரி ஏழாலை மேற்கு உதய சூரியன் அறிவகமும், சனசமூக நிலையமும் அரச அதிபர், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் ஆகியோருக்குக் கோரிக்கை மனுக்களை அனுப்பி வைத்துள்ளனர். (க-86)

## வன்னி,தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் காட்டு மரங்கள்

கொழும்புத்துறை,ஏப்.21

தென்னிலங்கை, வன்னிப் பகுதிகளில் இருந்து பெருமளவு காட்டு மரங்கள் மற்றும் பலகைகள் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படுவதால் மரவேலைப் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளதாக தச்சுத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 பாதையால் தினமும், பாலை, முதிரை, தேக்கு போன்ற பாரிய காட்டு மரங்களும் சப்பு, கொஹா, மலைவேம்பு போன்ற அரிந்த தீராந்தி, பலகைகளும் எடுத்துவரப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதனால் மரங்கள், பலகைகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், தொழிலாளர்களும், புதிதாக கட்டடங்களை அமைப்போரும் தொழில் வாய்ப்புகள் பெருகி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (50-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



A.O.M.A கராத்தே கழக மாணவனும்
கராத்தே ஆசிரியருமான
**சிங்கராசா கலின்ரஸ் யூட்** (ராசா)
அவர்கள் இந்தியாவில் காலமாகிய செய்தி அறிந்து A.O.M.A கராத்தே கழகம் ஆழ்ந்த துயரில் மூழ்கியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்த்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

A.O.M.A, கராத்தே கழக ஆசிரியர்கள், மாணவர்கள்.

## நன்றி செலுத்தும் ஆராதனை

தோற்றம்
24 ★ 06 ★ 1934



மறைவு
14 ★ 03 ★ 2010

(சி/566992)

**அமரர் சின்னையா தேவராஜா**
(ஓய்வுபெற்ற அதிபர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை)

சின்னையா தேவராஜா அவர்களின் நன்றி செலுத்தும் ஆராதனை 24.04.2010 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறும். இவ்வழிபாட்டில் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றிச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

'பெத்தேல்'
பழைய தபாற்கந்தோர் வீதி, பருத்தித்துறை.

திருமதி ஜெ.தேவராஜா
(மனைவி).

## மரண அறிவித்தல்



**தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற கட்டட மேற்பார்வையாளர், இலங்கை மின்சாரசபை)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மடத்தடி, மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் இல.33A விமலசார வீதி தெஹிவளையில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் 16.04.2010 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - மகாலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - சிவபாக்கியம் (திருநெல்வேலி) தம்பதியினரின் மருமகனும் மயில்வாகனத்தின் (குஞ்சர்) அருமைச் சகோதரரும் கமலவேணியின் அன்புக் கணவரும் முருகதாசன் (அமரர்), றஞ்சினி, லதாறஞ்சினி (அமரர்), சிவதாசன், சண்முகதாசன், தயாளினி, கிருபாகரன் (அமரர்), ஹரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பகீதரன், சுரேந்திரன், அனுஷியா, சிவப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்தில்நாதன், விமலாதேவி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் மகிந்தா, சுரேந்தா, ரம்மியன், துர்ஷிகா, அஷ்விதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2010) வியாழக்கிழமை ந.ப. 12 மணியளவில் மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் பி.ப. 2 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.
33A, விமலசார வீதி, களுபோவில, தெஹிவளை.

## கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பணியாற்றிய ச.கிருபாகரனின் (முகாமைத்துவ உதவியாளர்) அன்புத் தந்தையும், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பணியாற்றிய நேசமணி (ஓய்வு பெற்ற குடும்பநல உத்தியோகத்தர்) அவர்களின் அன்புக் கணவருமான

**சரவணமுத்து சபாரட்ணம்** (குமரபுரம், பரந்தன்)

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கிளிநொச்சி.

(97229)

## மரண அறிவித்தல்

*தில்லையம்பலம் செல்வராசா*



வேலணையைப் பிறப்பிடமாகவும், காரைநகரை வசிப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் செல்வராசா (இளைப்பாறிய அதிபர், யாழ்ற்ரன் கல்லூரி - ஆரம்ப பாடசாலை, காரைநகர்) நேற்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காரைநகரைச் சேர்ந்த சீவரத்தினம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லீலாவதியின் (இளைப்பாறிய ஆசிரியை, சுப்பிரமணிய வித்தியாசாலை, காரைநகர்) அன்புக் கணவரும், அமரர் இரத்தினம் (பாலசிங்கம் - கனடா) பராசக்தி (பிரான்ஸ்), இராசமணி (பிரான்ஸ்), அமரர் குமாரசாமி, தவமணி (டென்மார்க்), புவனேஸ்வரி (கொழும்பு), கமலாம்பிகை (வவுனியா), செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வரூபி, காலஞ்சென்ற செல்வஅருளினி மற்றும் செல்வஜெயந்தினி (தாபனக்கிளை, யாழ்.பல்கலைக்கழகம்), செல்வசுதர்சினி (லண்டன்), செல்வகலாஜோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா, செல்வராஜா (பாதுகாப்புப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்), தர்மரட்ணம், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷிகா, நிருஷா, தாரணி, நிமலன் (வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்), நிரோசன் (உயர்தரப்பிரிவு மாணவன்-2010, யாழ். இந்துக்கல்லூரி), அபினா, ஆதித்தன், சா... ராஜ், சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனும், இராசபூபதி, அமரர் செ...லத்துரை, அமரர் வீரப்பமோறா சிவபாக்கியம், பொன் தியாகராசா, நடராசா, குமாரசாமி, மங்கையற்கரசி, காலஞ்சென்ற ஜீவமணி மற்றும் ஜெயமணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ச.செல்வராசா
*214/23, இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி. 021-222-3116*

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

*சின்னத்துரை சற்குணம்*



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சற்குணம் நேற்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-லட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான சின்னப்பு-தங்கமுத்து தம்பதியரின் மருமகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் ஜெயமலர், ரதிகா, காலஞ்சென்றவர்களான ரேணுகா, கண்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விவேகானந்தராசா, கோமளேஸ்வரன் (ஈசன்-சவுதி) ஆகியோரின் மாமனாரும் நிரோசன், நிசாந்தன், நிசாந்தினி, நிசங்கர், நிவானி, டிலக்ஷி, டயானா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சத்தியநாதன், குணரத்தினம், விஜயன் மற்றும் வடிவாம்பிகை, நவமணி ஜெயராஜா, ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் உரும்பிராய் தெற்கு வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*செல்லத்துரை வீதி,*
*உரும்பிராய் தெற்கு.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(சி/567103)

*கனகசபாபதி சிவசுப்பிரமணியம்*
(அச்சுவேலி மகாவித்தியாலய முன்னாள் கொத்தணி அதிபர்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி சிவசுப்பிரமணியம் நேற்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - இராசமணியம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், யோகநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியர், அச்சுவேலி புனிததிரேசா மகளிர் வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - நல்லமுத்து தம்பதியினரின் மருமகனும், சிவஞானசுந்தரம் (கனடா), சிவபாலசுந்தரம் (அவுஸ்திரேலியா), சிவஈஸ்வரி அமரர் சிவஞானேஸ்வரியின் சகோதரரும், முகுந்தன் (நோர்வே), நிரூபன் (கனடா), பிரதீபா (அவுஸ் திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வமணி, ஜெகதாம்பிகை, நவரத்தினம், இராசகுலவீரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சுபாசினி, செந்தூரன் ஆகியோரின் மாமனாரும், சுவேகா, கவிசான் ஆகியோரின் பாசமிகு பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு முன்பாக,
அச்சுவேலி தெற்கு.
தொ.பே.இல. : 0217903040, 0777111417

தகவல்:
வே. நவரத்தினம்
(மைத்துனர்)

## சனசமூக நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

உலக வங்கியின் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி கோயில் குடியிருப்பு பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட உதயசூரியன் சனசமூக நிலையக் கட்டடம் நேற்றுமுன்தினம் யாழ்.அரச அதிபர் க.கணேஷினால் திறந்து வைக்கப்பட்டது.

கோயில் குடியிருப்பு மீள் எழுச்சிக் கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மீள் எழுச்சித் திட்டத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கமும் கலந்து கொண்டார்.

(ஒ-207)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 21

மீசாலை வடக்கு, வேம்பிராய் கலட்டியிற் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

(ஒ-207)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கிருஷ்ணபிள்ளை சிவக்கொழுந்து**

அன்னை மடியில்
20★11★1930

அமலன் அடியில்
22★03★2010

திதி: ஸப்தமி

ஆண்டுயர் விரோதி ஆயதாம் பங்குனியிற்
காண்புறு ஸப்தமி கரபூர்வம் - காண் நல்ல
மங்கை சிவக்கொழுந்து மண்ணுலகு விட்டே
சங்கரனார் தாள் சேர்தினம்

கடந்த 22.03.2010 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு திருமதி கிருஷ்ணபிள்ளை சிவக்கொழுந்து அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (21.04.2010) புதன்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் மகனது உடுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிரியைகளும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழவிருக்கின்ற மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் மரணச்சடங்கில் கலந்து கொண்டும் தொலைபேசியில் துக்கம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உதவி புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கி.பாலச்சந்திரன் (கிராமஅலுவலர்),
*சிவனடியான் வளவு,*
*வெள்ளை றோட்,*
*இலந்தைவனன் மேற்கு, உடுப்பிட்டி.*
*தொ.பே. இல. 021 320 6257*

அன்னாரின்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்களை ஆர்வத்துடன் பார்வையிடும் தென்பகுதி மக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.குடாநாட்டின் இந்து ஆலயங்கள் சிலவற்றில் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வரும் வருடாந்த மகோற்சவங்களைத் தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வத்துடன் கண்டுகளிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஊரங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டதால் ஆலய மகோற்சவ திருவிழாக்கள் நள்ளிரவு வரை நடைபெற்று வருகின்றன.

சில ஆலயங்களில் இசைக் கச்சேரிகள் சொற்பொழிவுகள் நாதஸ்வரக் கச்சேரிகள் போன்றன நடைபெற்று பின்னர் வர்ண மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் சுவாமி வீதிவலம் வருவதற்கு இரவு 10 முதல் 11 மணிவரை செல்கின்றன.

இவ்வாறான அற்புதமான காட்சிகளைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் தற்போது தமக்குக் கிடைத்திருப்பதாக சுற்றுலாப் பயணி ஒருவர் மகிழ்ச்சியுடன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்து ஆலயங்களில் நடைபெறும் இந்தத் திருவிழாக்களைத் தாம் அதிக ஆவலுடன் கண்டுகழிப்பததாகவும் அவர் மேலும் கூறினார்.

வீதிகளில் சுவாமி வீதியுலாவரும் போது சுற்றுலாப் பயணிகள் தமது வாகனங்களை நிறுத்தி வழிபாட்டில் ஈடுபடுவதையும் காணமுடிகின்றது. (50-224)

# வடமராட்சி வெங்காயத்துக்கு வலிகாமத்தில் மவுசு

வடமராட்சி,ஏப்.21

வடமராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தைக் கொள்வனவு செய்து விதை வெங்காயமாகப் பயன்படுத்துவதற்கு வலிகாமம் பிரதேச விவசாயிகள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தினமும் பெருந்தொகையான வலிகாமப் பிரதேச விவசாயிகள் வடமராட்சிக்கு வந்து ஒரு அந்தர் இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் வெங்காயத்தை வடமராட்சி விவசாயிகளிடம் கொள்வனவு செய்து எடுத்துச் செல்கின்றனர்.

கொள்வனவு செய்யப்படும் வெங்காயம் அடுத்து வரும் போகத்தில் பயிரிட விதை வெங்காயமாகப் பயன்படுத்தப்படவுள்ளதாக அவ்விவசாயிகள் தெரிவித்தனர். (50-236)

# பனை அபிவிருத்திச் சபையின் கைதடி கட்டடத்தைப் புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.21

கைதடியில் உள்ள பனை அபிவிருத்தி சபையின் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பெரிய கட்டடத்தை நவீன வசதிகள் கொண்டதாகப் புனரமைப்புச் செய்து பனை அபிவிருத்திச் சபையை அங்கு இயங்க வைப்பதற்குத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டட வளாகத்தில் முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.(50-224)

# கால் கடுக்க.... தோள் வலிக்க...



கொழுத்தும் வெயிலினால் தமது அன்றாடப் பணிகளைக் கூடக் கவனிக்க முடியாமல் குடாநாட்டு மக்கள் அவதிப்படுகின்றார்கள். அந்த அளவுக்கு வெயிலின் தாக்கம் இம்முறை அகோரமாவுள்ளது. மதிய வேளைகளில் வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகவே உள்ளது. இந்தக் கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தனது கட்டில் வியாபாரத்தில் கவனமாக இருக்கிறார் இந்தத் தென்னிலங்கை வியாபாரி. கால் கடுக்க - தோள் வலிக்க அவர் கட்டில் ஒன்றைச் சுமந்து செல்வதையே படத்தில் காண்கிறீர்கள். *(படம்: நந்தன்)*

# அதிக வெப்பமான கால நிலையினால் சாட்டிக் கடற்கரையை நாடும் மக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.21

வேலணை சாட்டி கடற்கரைக்கு நீராடச் செல்லும் மக்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகின்றது.

தற்போது குடாநாட்டில் நிலவும் அதிக வெப்பமான காலநிலையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

சனி, ஞாயிறு, மற்றும் விடுமுறை நாள்களில் இக்கடற்கரைப் பிரதேசத்தில் நீராடும் மக்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதிக வெப்பமான காலநிலை நிலவுவதால் மக்கள் கடலில் நீராடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதேவேளை, இந்தக் கடற்கரைப் பிரதேசத்தில் பெரிய அளவிலான மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு வேலணை பிரதேச சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

(50-224)

# இடம்பெயர்ந்த மக்களுக்கான ஏப்ரல் மாத உலருணவு நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட 11.08.2006 இன் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஏப்ரல் மாதத்திற்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரிசி, கோதுமை மா, பருப்பு, சீனி சமையல் எண்ணெய் போன்றவை இந்த நிவாரணத்திற்கு விநியோகிக்கப் படவுள்ளன.

இந்த நிவாரணத்திற்கு அங்கத்தவர் ரீதியாக விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு-

| பொருள் | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1அங். | 2அங். | 3அங். | 4அங். | 5அங். | 6அங். | 7அங். | 8அங். | 9அங். |
| அரிசி(கி.கிராம்) | 6.000 | 12.000 | 18.00 | 24.000 | 30.000 | 36.000 | 42.000 | 48.000 | 54.000 |
| மா (கி.கிராம்) | 6.000 | 12.000 | 18.00 | 24.000 | 30.000 | 36.000 | 42.000 | 48.000 | 54.000 |
| பருப்பு (கி.கிராம்) | 1.800 | 3.600 | 5.400 | 7.200 | 9.000 | 10.800 | 12.600 | 14.400 | 16.200 |
| சீனி(கி.கிராம்) | 0.600 | 1.200 | 1.800 | 2.400 | 3.000 | 3.600 | 4.200 | 4.800 | 5.400 |
| எண்ணை(லீற்றர்) | 0.654 | 1.308 | 1.962 | 2.616 | 3.270 | 3.924 | 4.578 | 5.232 | 5.886 |

# பளைப் பிரதேச அரச அலுவலகங்கள் மே மாதம் முதல் முழுமையாக இயங்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.21

பளைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகம், பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியன மே மாத முதல் வாரம் தொடக்கம் முழுமையாக இயங்கவுள்ளன.

இந்த அலுவலகக் கட்டடங்களின் ஒரு பகுதியில் தங்கியுள்ள படையினர் வெளியேறியுள்ளதால் இவை இந்த வாரமளவில் உரிய திணைக்கள அதிகாரிகளிடம் படையினரால் கையளிக்கப் படவுள்ளன. இதனால் மே மாத முதல் வாரம் தொடக்கம் இவை முழுமையாக இயங்கத் தொடங்கும் சாத்தியக் கூறு காணப்படுகின்றது.




தற்போது பளைப் பிரதேச சபை தனது கட்டடத்தின் ஒரு பகுதியிலும்,சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு இயங்கும் கட்டடத்தின் ஒரு பகுதியிலும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (50-207)

# கனகரத்தினம் ம.வி அதிபருக்கு நாளை மணி விழா



யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வி.மாணிக்கத்தின் மணி விழா நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, முதுதத்துவமாணி பட்டங்களைப் பெற்றதுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

1972 ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்து கொண்ட இவர் பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றியுள்ளார். இறுதியில் ஆசிரியர் சேவையில் இணைந்த இவர் மேற்படி பாடசாலை அதிபராக 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-201)

# திடீரெனப் பெய்த மழையில் நனைந்து புகையிலைகள் நாசம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

வலிகாமம் கிழக்கு பகுதியை அண்டிய இடங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரெனப் பெய்த கனத்த மழையினால் அறுவடை செய்த புகையிலைகள் நனைந்து சேதமடைந்தன.

உரும்பிராய், கோண்டாவில், கோப்பாய் போன்ற இடங்களில் அறுவடை செய்து உலரவிடப்பட்ட புகையிலைகளே கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரெனப் பெய்த மழையினால் நனைந்து சேதமடைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

புகையிலைகள் நனைந்தமையால் அவற்றில் இருந்த பாணி கழுவிச் செல்லப்பட்டு அவை பழுதடைந்துள்ளன. (50-224)

# விண்ணப்பம் கோரல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கணனி ஓட்டுநர் அனுமதிப் பத்திரம், கணனி வன்பொருள் தொழில் நுட்பவியலாளர் ஆகிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை நடத்தப் படவுள்ளது.

எனவே மேற்குறித்த துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உதவியாளரிடம் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (50-201)

# தொடர் சொற்பொழிவு

வடமராட்சி,ஏப்.21

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தேவிபாகவதம்'' என்னும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் இச்சொற்பொழிவை நிகழ்த்துவார். (50-236)

# கைதடி - மட்டுவில் வீதி மிக மோசமான நிலையில்



கைதடி,ஏப்21

கைதடியையும் மட்டுவிலையும் இணைக்கும் கைதடி - மட்டுவில் வீதி பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில் இருப்பதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியைப் பயன்படுத்தும் வலிகாமத்திலிருந்து நீர்வேலி ஊடாகப் பிரயாணம் செய்யும் மக்களும், கைதடிப் பிரதேச மக்களும் தென்மராட்சியின் ஏனைய பிரதேசங்களுக்கு இலகுவாகச் செல்ல முடிகின்றது. ஆனால் தற்போது இந்த வீதி மிக மோசமாகப் பாதிப்படைந்த நிலையில் உள்ளதால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதோடு பலர் மாற்றுப் பாதைகளையும் நாடிச் செல்கின்றனர். இந்த வீதியின் தற்போதைய நிலைக்குச் சட்ட விரோத மணல் அகழ்வும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த வீதியை இனியும் தாமதிக்காது புனரமைப்புச் செய்து தருவதோடு, சட்டவிரோத மணல் அகழ்வையும் நிறுத்த வேண்டுமென்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோள். (க-288)

# துடுப்பாட்ட மத்தியஸ்தர் செயலமர்வும் பரீட்சையும்

இலங்கை கிரிக்கெட்டின் ஏற்பாட்டிலும் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஒழுங்கமைப்பிலும் நாளை முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியில் துடுப்பாட்ட மத்தியஸ்தர் செயலமர்வும் பரீட்சையும் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்துகொள்வதற்கென 32 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ன.

இச்செயமர்வினை இலங்கை கிரிக் கெட்டின் துடுப்பாட்ட மத்தியஸ்தர்களின் முகாமையாளர் றொனி குணரட்ண தலைமையில் கே.ரி.பிரான்ஸிஸ் எஸ்.புஸ்பராஜா ஆகியோர் இணைந்து நடத்துவர்.

இச்செயலமர்வின் ஆரம்ப நிகழ்வுகள் நாளை காலை 8.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி பிரதான மண்டபத்தில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத் தலைவர் சி.என்.மதிவதனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்றோர் விவரம்

## நியமனக் கடிதங்களை 24 ஆம் திகதி பெறுமாறு அறிவிப்பு

மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவால் கடந்தாண்டு நடத்தப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகளுக்கும் அதன்பின் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கும் அமைவாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை என்னும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி அமைச்சின் செயலாளர் ர.விஜயலட்சுமி கேட்டுள்ளார்.

மேற்படி பதவிக்கு நியமனம் பெற்றோரின் விவரம் வருமாறு:-

ஸ்ரீகாந்தா குகதீப்- கரணவாய் கிழக்கு, கரவெட்டி, சிவகுருநாதன் மாலினி- கரவெட்டி மத்தி, கரவெட்டி, வின்சன்ட் குணாளன் வின்சன்ட் ஞானதயாளன், பண்டத்தரிப்பு, சிவலிங்கம் சிவகௌரி- கரணவாய் கிழக்கு, கரவெட்டி, வடிவேல் கிருஷாந்-வரோதயநகர், திருகோணமலை, சின்னையா காயத்திரி- இடைக் குறிச்சி, வரணி, சீவரத்தினம் தினேசன்- அல்லாரை வடக்கு, கொடிகாமம், சிதம்பரநாதன் ஆரதி- சங்கரத்தை, வட்டுக்கோட்டை, சுரேரஞ்சன் சஜித்தா- நெல்லியடி, கரவெட்டி, இரத்தினசிங்கம் கஜேந்திரன்-அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம், தமோதரம்பிள்ளை தவமன்னம்- தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், இளையதம்பி இலங்கேஸ்வரன்- ஆரையம்பதி- மட்டக்களப்பு, சின்னத்துரை திலீபன்-மாரியம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி, நவரெட்ணம் நவதாசன்- வரோதயநகர், திருகோணமலை, கணேசராஜா பரணிரூபன்-நீர்வேலி வடக்கு, நீர்வேலி, மயில்வாகனம் கபிலன்- இணுவில் மேற்கு, சுன்னாகம், சாம்பசிவம் ரட்சிகா -திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம், சந்திரலிங்கம் சுவர்ணன்-புலோலி தெற்கு, புலோலி, தேவராசா வேணுகோபாலன்- வண்ணார் பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம், சோதிலிங்கம் அருட்செல்வன்- கெருடாவில் தெற்கு,தொண்டைமானாறு,

சின்னத்துரை சுதர்ஜன்- கரவெட்டி கிழக்கு, கரவெட்டி, கனகலிங்கம் கோபிகா- மருதடி மேற்கு, சாவகச்சேரி, பத்மநாதன் சஞ்சீலன் -கோப்பாய் வடக்கு, கோப்பாய், சுந்தரலிங்கம் சதீசன்-சரசாலை வடக்கு, சாவகச்சேரி, தேவராசா லக்சன்- கொக்குவில் கிழக்கு, கொக்குவில், வைத்தியானந்த ஐயர் சரவணன்-கொக்குவில் கிழக்கு, கொக்குவில், இரவீந்திரகுமரன் சங்கீதா-சொய்சாபுர பிளட்ஸ், மொறட்டுவ, இம்மானுவேல் யேசுரட்ணம் ஒஸ்மன் ஜெரி-தவசிகுளம், மிருசுவில்,

தங்கராஜா பிரபாகரன்- கல்வியங்காடு, வல்லிபுரம் நிதர்சன்- உரும்பிராய் மேற்கு, உரும்பிராய், இராஜரட்ணம் வேல்குமார்-இணுவில் வீதி, மானிப்பாய், செபஸ்தியாம்பிள்ளை ருக்சாலினி- சுண்டுக்குழி, யாழ்ப்பாணம், நிசாந்தன் கிரிஜா - சங்கரத்தை, வட்டுக்கோட்டை, தங்கராசா கண்ணதாசன்-சுழிபுரம், யாழ்ப்பாணம், தம்பிராஜா தனுஷன்- நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு,

துரைக்கிளி இந்திரவதனா- வல் வெட்டி, வல்வெட்டித்துறை, சற்குணசிங்கம் பிரேமிலன்-மிலானை, சுன்னாகம், பாலேந்திரன் வாகீசன்- வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, வன்னியசிங்கம் சுகிதரன்- வரோதயநகர், திருகோணமலை, கந்தசாமி துளசி-நீர்வேலி மத்தி, நீர்வேலி, சதானந்தன் குமாரதாஸ்- திருநெல்வேலி, கோப்பாய், பற்றிக் துரைராஜா ரோய்டனிஸ்டன்- பண்டத்தரிப்பு, துரைராசா சிபரூபன்- கரவெட்டி மத்தி, கரவெட்டி, யோகராசா நித்தியா- மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், நாகலிங்கம் குமணதாசன்- அரியாலை மேற்கு , யாழ்ப்பாணம், சிவனந்தன் அருணோதயன்- நல் லூர், யாழ்ப்பாணம்,

சங்கரலிங்கம் பிருந்தாமலர்-கோப்பாய் மத்தி, கோப்பாய், கணேஸ் சுரேஸ்பாபா- நிச்சாமம், சங்கானை, தங்கராசா கஸ்தூரி- புத்தூர், யாழ்ப்பாணம், குணரெட்ணம் நிசாந்தன்- கோயில் வீதி, நல்லூர், பாவா முகைதீன் முகமட் நஸ்ரின்- பிரதான வீதி, கல்பிட்டி, குணரட்ணம் சஜீவன்- உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். செல்வராசா புளோரந்திபா- நீதிமன்ற வீதி, மல்லாகம், நாகமுத்து ஜெகவதணன் - தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை, லோகேஸ்வரன் சாதனா - தாவடி, கொக்குவில், லோகேஸ்வரன் செந்தூரன் - சுதுமலை தெற்கு, மானிப்பாய், சிவபாதம் தனிஸ்குமார் - கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மேலதிகமாகத் தெரிவானோர் விவரம்

ஐயாத்துரை மயூரன் - அரசடி ஒழுங்கை, தாவடி, ஜெயரஞ்சன் சஞ்சீவ் - நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம், சற்குணநேசன் முகுந்தவேல் - ஆனந்தகுமாரசுவாமி நலன்புரி நிலையம், வெங்கல செட்டிக்குளம்,

சிவலிங்கம் பிரதீபன் - வித்தகபுரம், தெல்லிப்பழை, பரமசிவம் தவப்பிரியன் - பண்ணாகம் தெற்கு, சுழிபுரம், அரியரத்தினம் வசீகரன் - சாவற்காடு, மானிப்பாய், செகராசா பகீரதன் - ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை, இராமசாமி ரஜீவ்ரதன் - வாரியபுலம் வடக்கு, சுன்னாகம், கனகலிங்கம் கார்த்திகா - மட்டுவில் தெற்கு சாவகச்சேரி, ஜெயபாலன் சதீஸ் - துறையூர், வேலணை-06, திருஞானசுந்தரம் பிரதீப் - ஆலடி, வல்வெட்டித்துறை, இராஜசிவம் தனுசன் - தொல்புரம், சுழிபுரம், நாகேஸ்வரசர்மா சிவமனோகர் - மயிலணி, சுன்னாகம்,

தர்மபாலன் ஜாபிரதாப் - கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், குலேந்திரன் பிருந்தா - தும்பளை, பருத்தித்துறை, உதயகுமார் சுபாசினி-கீரிமலை வீதி, சித்தங்கேணி, சோமசுந்தரம் தங்கேஸ்வரன் - ஆத்தியடி, பருத்தித்துறை, பாலச்சந்திரன் பாலரவி-3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், இராஜதுரை கிருசாந்தன் - கரணவாய், கரவெட்டி, சுபாரத்தினம் அருள்நாதன் - துர்க்காபுரம் மல்லாகம், கந்தையா கலைவாணி - நெடுந் தீவு மேற்கு, நெடுந்தீவு, சத்தியசீலன் லாவண்யா - நுணாவில், சாவகச்சேரி,

இராஜரட்ணம் சுகிர்தா - இமையாணன், உடுப்பிட்டி, சிவபாதம் சுரேந்திரா - பொலிகண்டி, வல்வெட்டித்துறை, சிங்கராசா சியந்தன் - இல.14, வைத்தியசாலை வீதி, வவுனியா, வல்லிபுரம் விபுலன் - தும்பளை, பருத்தித்துறை,

(50-201-224)


### விற்பனைக்கு

LJ XXXX தொடரிலக்கமுடைய TUSKER SUPER லொறி விற்பனைக் குண்டு. (1613)
றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே: 0215213952

### கூலித்தொழிலாளர் தேவை

எமது நிறுவனத்தில் தொழில் புரிவதற்கு கூலித்தொழிலாளர் தேவை.
தொடர்பு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
368 பி, முஸ்லிம் கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம். தொ:பே: 0212225595

### தேவை

லங்கோ கிளினிக்
இல. 14. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தாதிய பயிலுநர், மருந்து பயிலுநர் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். விரும்பியவர்கள் சனி, ஞாயிறு 9-1 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும். தொ.பே: 0777220721
நிர்வாகம்.

### விநியோகத்தர்கள் தேவை




எமது நிறுவனம் Premier என்ற பெயரில் குடிநீர் / பழரசம் /அயடின் கலந்த உப்பு/ சோயாமீட்/ சோஸ்/ நூடில்ஸ்/ டின்மீன் என்பன சந்தைக்கு விடப்பட்டுள்ளன. இது ISO/SLS/HACCP மற்றும் சுகாதார அமைச்சின் சான்றிதழ் பெற்ற உற்பத்திகளின் முன்னணி நிறுவனமாகும் எமது சந்தைப்படுத்தல் துறையை நாடு பூராகவும் பரவச் செய்வதற்காக வடக்கு / கிழக்கின் எல்லா பிரதேசங்களிலும் விநியோகத்தர்கள் தேவை.

தேவைப்படுவது :
பிணைக் கட்டணம் செலுத்தக்கூடிய வசதி
சொந்தமான வாகனம்/ களஞ்சிய வசதி
பிரதேசம் பற்றிய அறிவு

உயர்ந்த பிரதிபலன் மற்றும் விசேட சலுகைகள்
மேலதிக விபரங்களுக்கு இன்றே
தொடர்புகொள்ளுங்கள் அல்லது
விண்ணப்பியுங்கள்

Premier Water Market (Pvt) Ltd
1067, 3ம் மாடி, பன்னிப்பிட்டிய வீதி,
பெலவத்தை, பத்தரமுல்லை.
Tel : 0713 461493. Fax : 011 - 2774125
STANDARDS CERTIFIED COMPANY
SLS 894

### நோர்த் சீ லிமிடெட் கட்டட இடிபாடுகள் மற்றும் பழைய இரும்புச் சாமான்கள் விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல்

நிறுவனத்தின் காரைநகர் தொழிற்சாலை கட்டட இடிபாடுகள் மற்றும் பழைய இரும்புச் சாமான்கள் மற்றும் குருநகர் தொழிற்சாலையின் பழைய இரும்புச் சாமான்கள் என்பன விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி பொருள்களை 26.04.2010 ஆம் திகதி தொடக்கம் 30.04.2010 ஆம் திகதி வரை காரியாலய நேரங்களில் பார்வையிட முடியும். இவற்றிற்கான கூறுவிலை படிவங்கள் யாவும் 10.05.2010 ஆம் திகதி பி.ப.4.30 மணிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்,
வலைத் தொழிற்சாலை,
(97214) குருநகர், யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்



கோப்பாயில் வசிக்கும் அன்னைதெரெசா மடக் கன்னியர்கள் அல்லது அன்புபரப்புசபை கன்னியர்கள் என அழைக்கப்படும் நாங்கள், எங்கள் பெயரிலோ அல்லது அனாதைகள், ஏழைகளின் பெயரிலோ நன்கொடை வசூலிக்க யாரையும் நாங்கள் அனுப்பவில்லை;அனுப்புவதுமில்லை எனவே எங்கள் பெயரில் எந்த உதவியும் செய்யவேண்டாம். என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். அப்படி யாராவது வசூலித்தால் அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவும்.

021 222 3702

அன்னை தெரெசா,
மடக் கன்னியர்கள், கோப்பாய்.


## யாழ்.முற்றவெளியில் குடிதண்ணீர் வசதி

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.முற்ற வெளிப்பிரதேசத்தில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முனீஸ்வரன் வீதி, தந்தை செல்வநாயகம் நினைவுத் தூபி, துரையப்பா விளையாட்டு அரங்கு, மற்றும் கோட்டை நுழைவாயில் போன்ற இடங்களில் தண்ணீர் தாங்கி வைக்கப்பட்டு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீர் தாங்கிகளில் யாழ்.மாநகராட்சி மன்றத்தினால் காலையும் மாலையும் குடிதண்ணீர் [illegible]

(50-224)

## மானிப்பாயில் கொமர்ஷல் வங்கி

யாழ்ப்பாணம்,ஏப்.21

கொமர்ஷல் வங்கிக் கிளை ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.வீதி, மானிப்பாயில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் தலைவர் எம்.ஜெ.சி.அமரசூரிய இந்த வங்கிக் கிளையை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.07 மணிக்கு திறந்து வைப்பார்.

இந்த நிகழ்வில் வங்கியின் உயரதிகாரிகள், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(50-14)


Slat ACADEMY
Lead, Create, Animate.

### Animation துறையில் ஓர் உதயம்

இந்தியாவில் சிலிக்கன் சிற்றி பெங்களூர் மாநிலத்திலிருந்து யாழ். நகரில் முதன் முறையாக Animation இல் விரிவான கற்கைநெறி Slat Academy இனால் வழங்கப்பட இருக்கின்றன.

Slat Academy தமது கல்வி நிறுவனத்தை யாழ்.நகரில் Mag net Academy உடன் இணைந்து ஆரம்பிக்கின்றது.

*Slat Academy* இனால் வழங்கப்படும் கற்கை நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

- ★Multimedia
- ★Web Design
- ★Game Design
- ★Graphics
- ★Digital art and 2 D Animation
- ★Digital art and 3 D Animation
- ★Animation Film making



இவற்றிற்கான கற்பித்தலை இத்துறையில் தேர்ச்சியும் அனுபவமுமிக்க இந்திய வல்லுநர்கள், யாழ்.நகரில் உங்களுக்காக வழங்க இருக்கிறார்கள்.

இதற்கு முன்னோடியாக Animation துறைசம்பந்தமான கற்கை நெறிகளும், செயற்பாடுகளும் பயன்களும் உள்ளடக்கிய

கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் 9-5 மணி வரை அதே சிறப்புமிக்க இந்திய வல்லுநர்களால் நடத்தப்படவுள்ளன.

பயிற்சி முடிவில் பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

- ★O/L, A/L மாணவர்கள்,
- ★பட்டதாரி மாணவர்கள்,
- ★கற்பனைத்திறன், ஆக்கத்திறன் கொண்ட ஆர்வலர்கள்

இத்துறை சார்ந்த அனைவரும் பங்குபற்றிப் பயனடையுங்கள்.



அனுமதிச் சீட்டு ரூபா 500/-

தொடர்புகளுக்கு:
0213214756, 0777497186.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது 'பாண்ட்' வாத்தியக் குழுத் தலைவி கல்லூரி அதிபர் இ.குணநாதனுக்குக் கைலாகு கொடுத்து வரவேற்பதையும், அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், துணைவியார் திருமதி ஜக்குலின் மோகன்றாஸ் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

பாடசாலைக்கொடி, இல்லக்கொடிகளுடன் அணிவகுப்பு மரியாதை இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும், வெற்றிபெற்ற அஜந்தா இல்லத்திற்கான வெற்றிக் கிண்ணத்தை பிரதம விருந்தினர் தம்பதியர் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள்: குமரசிறி)

# பாடசாலைகளின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விசேட பயிற்சிகள்

## நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்கிறார் டக்ளஸ்



வலி வடக்கு,ஏப்21

யாழ்.மாவட்டத்தில் கல்வித் துறையுடன் விளையாட்டுத் துறையும் வளர்ச்சி அடைய வேண்டும். இதற்காக பாடசாலைகளின் விளையாட்டுத் துறைபயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்டவாறு முன்னாள் சமூக சேவைகள் சமுக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் பெரு விளையாட்டுக்கள்,மெய்வன்மைப் போட்டிகளில் 2009 ஆம் ஆண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா உடுவில் மகளிர் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் பா. விக்னேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த இருபது வருட யுத்தம் காரணமாக பல்வேறு வழிகளிலும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மிகவும் பின் தங்கியுள்ளோம். மீண்டும் நாம் எமது பழைய நிலைமைக்குச் செல்ல வேண்டியது அவசியமாகும். இதற்காக நான் என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றேன்.

தமிழ் மக்கள் இன்று அனுபவிக்கும் துன்ப, துயரங்களுக்குக் கடந்த காலத்தில் நானும் ஒரு காரணம். இந்த வகையில் இந்த மக்களைத் துன்ப, துயரங்களில் இருந்து மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எனக்கு உண்டு. அதற்காகவே நானும் என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன்.

அரசியல் பலத்துடன் மக்களுக்கு மீண்டும் சேவையாற்ற வேண்டும் என்ற பெரும் விருப்பத்துடன்தான் நான் இருக்கின்றேன். கடந்த காலங்களில் காணப்பட்ட பிழையான வழிகாட்டல்க்ள்தான் நாம் இத்தகையதொரு நெருக்கடிக்குள் செல்லக் காரணமாக அமைந்தன.

இன்று காணப்படும் அமைதியான சூழ்நிலையைத் தொடர்ந்து பேண நடவடிக்கையெடுக்க வேண்டும். விரைவில் எம்மால் அமைதியான, பொலிவான ஒரு வாழ்க்கையை மக்களுக்குப் பெற்றுத்தர முடியும்- என்றார். (50-86)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.21

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது.

மத்தியஸ்தர் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தை யாழ்.மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் மு.பிரான்சிஸ்ஸிடம் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-23)




## மேசைப்பந்தாட்ட அணியில் 15 வயது பாடசாலை மாணவன்



வலி.வடக்கு,ஏப். 21

யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டத் தெரிவு அணியில் 15 வயது நிரம்பிய பாடசாலை மாணவன் ஒருவனும் இடம்பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் எஸ்.சாமுவேல் என்ற மாணவனே மாவட்ட அணியில் இடம்பெற்று திறந்த போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மேசைப் பந்தாட்ட அணியின் 19 வயதுப் பிரிவினருக்கான அணியில் இவர் இடம்பெற்றுள்ளதுடன் அந்த அணியின் தலைவராகவும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

## 2010 ஆம் ஆண்டின் சிறந்த வீரர்கள்

வலி.வடக்கு,ஏப்.21

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் சிறந்த வீரர்கள், வீராங்கனைகளாகத் தெரிவானோரின் விவரங்கள் வருமாறு:

2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த தடவீரனாக இணுவில் இந்து வி.கவைச் சேர்ந்த கு.விதுசன் தெரிவானார். இவர் 100 மீற்றர் ஓட்டத்தில் 12:01 செக்கனில் ஓடி முடித்து 656 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

சிறந்த கள வீரனாக தத்திமிதித்துப் பாய்தல் போட்டியில் 12:60 மீற்றர் தூரம் பாய்ந்து 682 புள்ளிகளைப் பெற்ற இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.சுகந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த தட வீராங்கனையாக 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 14:70 செக்கனில் ஓடி 631 புள்ளிகளைப் பெற்ற மருதனார்மடம் இராமநாதன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சா.சுவர்ணா தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த கள வீராங்கனையாக தத்திமிதித்துப் பாய்தல் போட்டியில் 8.58 மீற்றர் தூரம் பாய்ந்து 501 புள்ளிகளைப் பெற்ற உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சி.கிருத்திகா தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த தடகள வீரனாக தத்திமிதித்துப் பாய்தல் போட்டியில் வெற்றிபெற்ற இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.சுகந்தன் தெரிவு செய்யப்பட்டார். (50-86)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இருபாலருக்குமான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (50-23)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இருபாலருக்குமான உடற்பயிற்சி போட்டி எதிர்வரும் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (50-23)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இருபாலருக்குமான எல்லே போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (50-23)

* * *


யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இருபாலருக்குமான கபடிப் போட்டி நாளைவியாழக்கிழமை காலை முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (50-23)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான மென்பந்து சுற்றுப் போட்டி நாளை வியாழக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (50-23)



யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான கரம் போட்டிகளில் அணிகள் மோதிக் கொள் வதைப்படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**முத்தையா பாக்கியம்**
திதி : ஸப்தமி

மலர்வு ★ 30 ★ 06 ★ 1931
உதிர்வு ★ 01 ★ 05 ★ 2009

பாசத்தின் ஒளி விளக்கே!
பண்பின் திருவிளக்கே - எங்கள்
குடும்பத்தின் குலவிளக்கே - உம்பிரிவால்
குமுறுதம்மா எம் மனம் இங்கே
ஆறாத்துயருடன் - உங்கள்
ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஓராண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று (21.04.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சத்தடி வீதி,
இணுவில். (97177)

குடும்பத்தினர்.

---


**முகாமையாளராக ஓர் அரிய சந்தர்ப்பம்**

வாழ்க்கையின் பிரகாசமான எதிர்காலத்தை எதிர்பார்க்கும் துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் O/L, A/L சித்திபெற்றவராயின் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது Canadian நிறுவனத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முகாமைத்துவப் பயிற்சி பெறுவதுடன் கவர்ச்சிகரமான சம்பளமும்பெற ஓர் அரிய சந்தர்ப்பம். பயிற்சிக்காலம் 6 மாதமாகும்.

*Contact:* V.Udayarajan
0717494735


## மீளக்குடியமர்ந்தோருக்கு சிமெந்து பைக்கற்றுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.21

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து தற்காலிக கொட்டில்களில் வசித்துவரும் குடும்பங்களுக்கு சிமெந்துப் பைக்கற்றுக்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீளக்குடியமர்ந்தோரில் ஒரு தொகுதியினருக்கு தலா எட்டுப் பைக்கற்று சிமெந்து வீதம் வழங்கப்படுவதற்கு அந்தந்தப் பகுதி கிராம அலுவலர் ஊடாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-207)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 ★ 05 ★ 1943
இறப்பு 01 ★ 05 ★ 2009



அமரர் **முத்துத்தம்பி அமிர்தலிங்கம்**
திதி: அட்டமி

எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலாது.

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (97189)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

---

## 20 ஆம் ஆண்டு நினைவலைகள்.....

பிறப்பு 11 ★ 09 ★ 1915
இறப்பு 21 ★ 04 ★ 1990



பிறப்பு 14 ★ 03 ★ 1931
இறப்பு 12 ★ 09 ★ 1989

**அமரர் இராசையா பூபாலசிங்கம்**
**அமரர் பூபாலசிங்கம் நாகரெத்தினம்**
(இல: 48/5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)


என்வருமை மாமனாரே நீவீர் பெத்தமகன்
நிர்மலநாதன் கதையைச் சொல்லி அழவா?
பேரன் மயூரனின் பிரிவைச் சொல்லி அழவா?
உமது மகனெங்கே; பேரனும் எங்கே?
நான்வாழ்வதைச் சொல்லித்தான் அழவா?
அல்லதுவெளிநாட்டிலிருந்து என்ரை மண்ணுக்கு
மீண்டதைச்சொல்லி அழவா?
எதைச் சொல்லி அழுவேன்?

134, பாங்ஷால் வீதி,
குருநகர்,யாழ்ப்பாணம். [ சி/566938 ]

என்றென்றும் உங்கள் நினைவோடு:
மருமகள்: நிர்மலநாதன் மோரிறஞ்சினி
பேரன்: நிர்மலநாதன் கேதீஸ்வரன்.

---

7ஆம் வருட இதய அஞ்சலி



அமரர்
**மெக்லன் டானியல் அற்புதராசா**
(உரிமையாளர், பேபி மினிபஸ், பேபி தொலைத் தொடர்பு சேவை, தலைவர், தென்மராட்சி சிற்றூர்திச் சேவைகள் சங்கம்)

மலர்வு 02.07.1948 உதிர்வு 23.04.2003
திதி:21.04.2010

4ஆம் வருட நினைவலைகள்



**அற்புதராசா சுரேஷ்குமார்**
(பழைய மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மலர்வு 19.07.1991 உதிர்வு 17.04.2006

எங்கள் குடும்ப விருட்சத்தின்
கிளையொன்றாம் சுரேஷ்குமார்
சாய்ந்து போய் நான்காண்டுகள் ஆனதுவே
ஆணிவேராம் அற்புதராசா
ஓய்ந்துபோய் ஏழாண்டுகள் ஆனதுவே
ஏங்கித் தவிக்கும் எமக்கு ஆர்
இங்கு ஆறுதல் இனி......

தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

---

## 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



M.A. இராசையாவின் அன்புத் துணைவி
**லூட்ஸ் இராசையா**

பக்தி பயத்துடன் வாழ்ந்து, தேவாதி தேவனின்
தாயைப்போன்று புனிதமாகவும், பக்தியாகவும்,
பாசமாகவும் எம்மை அரவணைத்து வளர்த்த
தாயே - உம்மைப்பிரிந்து
இருபத்தி எட்டு ஆண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை உங்கள் கடந்தகால நினைவுகள்
எனது குழந்தைகளையும் தங்கள் பிள்ளைகளைப்
போன்று அன்பாகவும், பாசமாகவும் நல்வழி
நடத்தி அரவணைத்து - வளர்த்து தந்தீர்கள்.
உங்கள் பிரிவின் பின்புதான் - அவர்களுக்கு
தாயாக நான் இருந்துள்ளேன்.
ஆண்டவனினதும், உங்களினதும் ஆசீர்வாதத்தால்
இன்று நானும் எனது பிள்ளைகளும் நலமேயுள்ளோம்.

(இ/566965)

10 ஏ, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222-5[illegible]

உங்கள் பிரிவால் துயருறும்
மகள்
[illegible] சேவியர்(பேபி).

---



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**கதிரேசு தவமணி**

பிறப்பு
23.03.1934

இறப்பு
22.03.2010

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே!
அன்பாலே எமை அரவணைத்து பண்பாலே எமை வழிநடத்தி
நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத் தந்து
நிலையான வாழ்வு தேடிச் சென்றீரே!

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(சி/566989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிர்தி வருடத்தில் உங்கள் இராசிக்கு என்ன பலன்...?

## கும்பம்



உங்கள் ராசிக்கு இந்த வருடம் பிரதான கிரகங்களான குரு, சனி, ராகு, கேது ஆகியவற்றில் வருட முற்பகுதியில் கேதுவும், வருடத்தின் பிற்பகுதியில் ராகுவும் அபரிமிதமான நற்பலன்களைத் தரும் நிலையில் உள்ளனர். குரு, சனியினால் ஏற்படும் அனுகூலக்குறைவை தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படும். இனிமையாகப் பேசுவதால் மட்டுமே சிரமங்களைத் தவிர்க்க இயலும். பணவரவு நன்றாக இருக்கும். வீடு, வாகன வகையில் அபிவிருத்திப் பணிகள் செய்வது இப்போதைக்கு நல்லதல்ல. புத்திரர்கள் சேர்க்கை சகவாசத்தால் கெட்டுப்போக வழியுண்டு. கடன் நீங்கும். பொன், பொருள் சேர்க்கை எதிர்பாராத வகையில் கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட துன்பம் விலகும். வழக்கு விவகாரத்தில் அனுகூல வெற்றி உண்டு. தம்பதியர் ஒருவருக்கொருவர் சண்டை போடுவதும் சேர்ந்து கொள்வதுமாக இருப்பர். வரும் புரட்டாதியில் சனிப் பெயர்ச்சியாகி அஷ்டமச்சனி என்ற நிலை பெறுகிறார், இதனால் தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபட்டு பணம், பொருளை இழக்க நேரிடும். தொழில் சார்ந்த வகையில் இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாத்துக் கொள்வது சிறந்தது. வெளிநாட்டு வேலை வாய்ப்பில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**தொழிலதிபர்கள்**

கல்வி நிறுவனம், வாகன விற்பனையாளர்கள், காகிதம், அலங்காரப் பொருள்கள், உணவுப் பண்டங்கள், கட்டுமானப் பொருள்கள், குளிர்பானம் உற்பத்தி செய்பவர்கள் தங்கள் இலாபத்தை இழக்க நேரிடும். தொழிலாளர்களாலும் பிரச்சினை ஏற்பட்டு உற்பத்தி குறையலாம். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பொருள்களைச் சந்தைப்படுத்த ஆகும் செலவும் கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

**வியாபாரிகள்**

நகை, புடைவை, பழங்கள், குளிர்பான வகைகள், மலர்கள், காய்கறி, இறைச்சி, மருந்து, பால் பொருள்கள், பலசரக்கு, சணல் பொருள்கள், இரும்பு, பாத்திரம், உணவுப் பண்டங்கள், சமையல் எண்ணெய், மசாலா வகைகள், மின்சார உபகரணம் போன்ற வியாபாரம் செய்பவர்களுக்கு மிகப்பெரிய இலாபம் எதிர் பார்ப்பதற்கில்லை. பழைய வாடிக்கையாளர்கள் சிலர் இடம் மாறிப்போக வழியுண்டு. அவர்களிடம் கனிவாகப் பேசி தக்க வைத்துக் கொள்ளுங்கள். தகுதிக்கு மீறிய வகையிலான கடன் வாங்கும் நிலை சிலருக்கு வரலாம். போட்டி இருக்கும் என்றாலும் அது தாக்குப்பிடிக்க கூடிய அளவில் அமையும்.

**பணியாளர்கள்**

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்களுக்கு, நிர்வாகத் தரப்பில் நெருக்கடி அதிகரிக்கும். அவர்கள் தரும் பணியைச் செய்வதில் தடங்கல் ஏற்பட்டு, அவர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரும். சம்பளத்தை விட செலவு அதிகரிக்கும். கடன் தொல்லைக்கு ஆளாகலாம். இந்தச் சமயத்தில் பொறுமையாக அனைத்தையும் சகித்துக் கொள்வதே எதிர்காலத்துக்கு நல்லது. சகபணியாளர்களுடன் தேவையற்ற விவாதம் ஏற்பட்டு பின்னடைவை ஏற்படுத்தும். செப்ரெம்பரில் நிகழும் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு அஷ்டமத்துச் சனியாக இருப்பதால், இடமாற்றம், ஒழுங்கு நடவடிக்கை போன்றவை ஏற்பட வாய்ப்புண்டு.

**மாணவர்கள்**

மருத்துவம், இரசாயனம், கணனி, தகவல் தொழில் நுட்பம், நிர்வாகப் படிப்புகள், பொறியியல், சட்டம், கட்டடம் போன்ற துறைகளில் கற்கும் மாணவர்கள் படிப்பில் பின்தங்க நேரிடும். மற்றவர்கள் சுமாராகப் படிப்பர். ஆன்மீக நம்பிக்கையுள்ளவர்கள் கிரகநிலை பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

**பெண்கள்**

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள், வேலைகளை அன்றாடம் முடிக்க முடியாத அளவுக்கு பணிப்பளு கூடும். முடிக்காத பணிகளுக்காக அதிகாரிகளின் அதிருப்தியைச் சம்பாதிக்க நேரிடும். சலுகைகள் அதிகமாக இருக்காது. சம்பள உயர்வு சுமாராகவே இருக்கும். குடும்பப் பெண்கள் கணவருடன் சுமூக உறவு கொள்வர். குடும்பச் செலவுக்கு திண்டாட்டமாகவே இருக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் மூலதனம் இட்டால் அதை இழக்க நேரிடும். பணிப்பளு அதிகரிக்கும். பொறுமையாக நடப்பதன் மூலம் இருக்கிற வியாபாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளலாம்.

**அரசியல்வாதிகள்**

அரசியலில் எதிர்வரும் குறுக்கீடுகளைச் சமாளிக்க அதிக சிரமப்பட வேண்டியிருக்கும். ஆதரவாளர்கள் பணம் கேட்டு நச்சரிப்பர் அல்லது கோரிக்கைளை நிறைவேற்றும்படி வலியுறுத்தித் தொல்லை தருவர். அரசு தொடர்புடைய பணிகள் அவ்வளவு எளிதில் நடக்காது. எதிரிடையாகச் செயற்படும் ஒருவர் உங்களுக்கு மறைமுகமாக உதவ முன்வருவார். புத்திரர்களால் இடைஞ்சல் ஏற்படும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்க்க முன்னேற்றத்தை எதிர்பார்க்க இயலாது.

**விவசாயிகள்**

விவசாயப் பணிகளில் ஆர்வக்குறைவு ஏற்பட்டு இலாபம் குறையும். சாகுப்படி செலவு கூடுதலாகும். கால்நடை வளர்ப்பிற்குச் செலவு கூடினாலும், அதற்கேற்ற வருமானம் பெறுவீர்கள். நிலம் தொடர்பான விவகாரங்களில் அனுகூலத் தீர்வு பெற ராகுபெயர்ச்சி உறுதுணையாக இருக்கும். சுபநிகழ்ச்சிகளை எளிமையான முறையில் நடத்துவீர்கள்.

## மீனம்



உங்கள் ராசிக்கு பதினொன்றாம் இடத்தில் குரு, ராகுவும், ஆறாம் இடத்தில் சனி பகவானும் அனு கூலப் பலன்தரும் வகையில் உள்ளனர். இதே கிரகங்கள் வருட பிற்பகுதியில் சாதகக் குறைவான இடங்களில் அமர்ந்து செயற் படுவர். இதனால் வாழ்வில் முன்னேற்றமும் சிரமமும் சம அளவில் கலந்திருக்கும். சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள். பணவரவு சேமிக்கும் அளவு கிடைக்கும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், புதிய சொத்து வாங்குவதுமான நன்னிலை உண்டு. புத்திரர்கள் தகுதி, திறமையை வளர்த்து படிப்பிலும், பொது அறிவிலும் முன்னேற்றம் பெறுவர். தம்பதியர் ஒருவர் நலனில் ஒருவர் அக் கறையுடன் நடந்து சிறந்த வாழ்வு நலம் பேணுவர். உடல்நலம் நன்றாக இருக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு, திருட்டு காரணமாக பணஇழப்பு ஏற்படும். மே, ஜூன், ஜூலை மாதங்களில் குருபகவான் அதிகாரவக்ரகதியாக கும்பராசியில் அமர்வு பெறுகிறார். இந்த சமயங்களில் செயல்களில் தடுமாற்றம், கூடுதல் செலவு, உடல் நலக்குறைவு போன்ற எதிர்மறைப் பலன்கள் ஏற்படும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு முயற்சித்தால் தடங்கல் ஏற்படும்.

**தருபவர்: வித்யா**

**தொழிலதிபர்கள்**

கல்வி, நிதிநிறுவனம், தொழிற் பயிற்சிக் கல்லூரி அதிபர்களும், ஏற்றுமதி, இறக்குமதி செய்பவர்களும், மின்சாரம், இலத்திரனியல், மின்னணுச் சாதனங்கள், தங்கநகை, உணவுப் பண்டங்கள், சமையல் எண்ணெய், தண்ணீர் சார்ந்த பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் தொழிலில் சிறப்பான வளர்ச்சியும், தாராள பணவரவும் பெறுவர். அபி விருத்திப் பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். வருடத்தின் முற்பகுதியில் சுறுசுறுப்பாகச் செயல்புரிந்து அதற்கு உரிய ஆதாயபலனை கணிசமாகப் பெறுவீர்கள். பிற்பகுதியில் தொழிலில் தேக்கம் ஏற்படவும் இலாபம் குறையவும் வாய்ப்புண்டு. மே, ஜூன், ஜூலை மாதங்களில் சுபச்செலவு அதிகரிக்கும்.

**வியாபாரிகள்**

நகை, புடைவை, உதிரிப்பாகங்கள், மின்சாரம், இலத்திரனியல், பெயின்ட், விவசாய இடு பொருள்கள், மருந்து, தானியம், உடற்பயிற்சிக் கருவி, மீன், இறைச்சி, அலங்காரப் பொருள்கள், காகிதப் பொருள்கள் வியாபாரம் செய்பவர்கள் வியாபாரத்தில் அபிவிருத்தி காண்பர். தாராள பணவரவு கிடைக்கும். அபிவிருத்தி பணிகள் எளிதாக நிறைவேறும். மே, ஜூன், ஜூலை மாதங்களில் வியாபாரத்தில் கவனக்குறைவு ஏற்படும்.

**பணியாளர்கள்**

அரசு, தனியார் துறையில் பணி புரிபவர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை கவனமுடன் பின்பற்றி பணி இலக்கைப் பூர்த்தி செய்வர். இதனால், தாராள பணவரவு கிடைத்து சேமிப்பு வளரும். குறிப்பாக கல்வித்துறை, நிதி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் நிர்வாகத்தின் வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வருமானம் பெறுவர். பதவி உயர்வு, சலுகைகள் எளிதாகக் கிடைக்கும். சக பணியாளர்களுடன் நட்புறவு வளரும். மே, ஜூன், ஜூலை மாதங்களில் பணியில் குறுக்கீடு வரும். துணிவுடனும், சமயோசிதமாகவும் செயற்படுவதால் சிரமங்களைத் தவிர்க்கலாம்.

**மாணவர்கள்**

தகவல் தொழில்நுட்பம், ஆசிரியர் பயிற்சி, நிதிமேலாண்மை, வியாபாரம், முகாமைத்துவம், கணனி, சித்திரம், இலக்கணம், இலக்கியம், ஊடகம், இசை, ஓவியம் உள்ளிட்ட துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்கள், இலட்சிய மனப்பான்மையுடன் செயற்பட்டு தரத்தேர்ச்சி பெறுவர். படிப்பிற்கான பணவசதி நிறைவாகக் கிடைக்கும். சகமாணவர்கள் படிப்பில் உறுதுணைபுரிவர். மே, ஜூன், ஜூலை மாதங்களில் சிறிதளவு கவனக்குறைவும், ஆடம்பர பொருள்களை வாங்குவதில் ஆர்வமும் இருக்கும்.

**பெண்கள்**

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள், தகுதி, திறமையை நன்கு பயன் படுத்தி பணியைச் சிறப்புற நிறை வேற்றுவர். நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகை எளிதாகக் கிடைக்கும். வருட பிற்பகுதியில் பணியில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். குடும்பப் பெண்கள், கணவரின் அன்பும் தேவையான பணவசதியும் பெற்று மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு நடத்துவர். ஆபரண சேர்க்கை தகுதிக்கேற்ப கிடைக்கும். சுயதொழில் புரியும் பெண்கள், கூடுதல் சந்தை வாய்ப்புக் கிடைத்து தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி பெறுவர்.

**அரசியல்வாதிகள்**

சாமர்த்தியமாகச் செயல்புரிந்து அரசியலில் தனக்கென சிறப்பிடம் பெறுவீர்கள். ஆதரவாளர்கள் நம்பிக்கையுடன் நடந்து கொள்வர். எதிரிகள் தொல்லைதந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. பதவிப் பொறுப்பு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். அதிகாரிகளிடம் முன்வைக்கும் கோரிக்கை முறையாக நிறை வேற்றப்படும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் கூடுதல் மூலதனத்துடன் வளர்ச்சிப் பணியை நிறைவேற்றுவர். நம்பகமான பணி யாளர்களின் உதவி பலமாகக் கிடைக்கும்.

**விவசாயிகள்**

பயிர் வளர்க்கத் தேவையான அம்சங்கள் அனுகூலமாக அமையப் பெறுவீர்கள். இலாபம் எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். கால்நடை வளர்ப்பில் வருட முன்பகுதியில் அபிவிருத்தியும், வருமானமும் கிடைக்கும். புதிய சொத்து வாங்கும் திட்டம் நிறைவேறும். வருடப் பிற்பகுதியில் பணவரவு குறையும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## உயிரியல் | பகுதி - I

## SPECIAL GUIDE FOR 2010 A/L. SCIENCE STUDENTS

### பல்தேர்வு வினாக்கள்

01. பின்வருவனவற்றில் எது சாதாரண உடநலமுள்ள நிறைவுடலி மனிதனின் Hb பற்றி பொய்யானது ?
    1) அது ஒட்சிசனுக்கு அதிக நாட்டத்தைக் காட்டுகின்றது.
    2) அது இரும்பை $Fe^{2+}$ வடிவத்தில் கொண்டுள்ளது.
    3) அதனைச் செங்குழியங்களிலும் குருதித் திரவவிழையத்திலும் கண்டுகொள்ளலாம்.
    4) அது காபனீரொட்சைட்டைக் கொண்டுசெல்கின்றது.
    5) அது குருதி PH ஐச் சீராக்கலில் சம்பந்தப்பட்டுள்ளது.

02. கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயர்ந்த இடங்களில் வாழ்வதற்கான ஓர் இசைவாக்கமாக மனிதனிலே பின்வருவனவற்றின் எதன் உற்பத்தி அதிகரிக்கப்படக்கூடும்?
    1) இயோசினாடிகள். 2) செங்குழியங்கள்.
    3) குருதிக்குழியங்கள். 4) நடுநிலை நாடிகள்.
    5) நிணநீர்க்குழியங்கள்.

03. மனிதனில் கலச்சுவாசத்தின்போது உற்பத்தியாக்கப்படும் காபனீரொட்சைட்டின் பெரும்பகுதி,
    1) குருதித்திரவவிழையத்திலே ஒரு சாதாரண கரைசலாக எடுத்துச்செல்லப்படும்.
    2) குருதித்திரவவிழையத்திலே காபோனிக்கமிலமாக எடுத்துச் செல்லப்படும்.
    3) முதலுருப்புரதத்துடன் சேர்த்து எடுத்துச் செல்லப்படும்.
    4) சோடியம் பொட்டாசியம் ஆகியவற்றுடன் இணைந்த இரு காபனேற்று அயன்கள் எடுத்துச்செல்லப்படும்.
    5) ஈமோகுளோபினுடன் சேர்த்து எடுத்துச்செல்லப்படும்.

04. சிகரெட் புகைத்தலினால் பின்வரும் விளைவுகளுள் எது ஏற்படுவதில்லை?
    1) கெண்டிக்கலங்களில் சீதம் சுத்தலைத் தூண்டுகின்றது.
    2) சுவாசப்பை இழையத்தில் தின்குழியக்கலங்கள் அதிகரிக்கின்றன.
    3) குருதியில் ஒட்சி ஈமோகுளோபினின் வீதம் குறைகின்றது.
    4) குருதியமுக்கத்தைத் தற்காலிகமாக அதிகரிக்கின்றது.
    5) பிசிர் தொழிற்பாடு அதிகரிக்கின்றது.

05. சிகரெட்புகையில் காணப்படாத இரசாயனப் பதார்த்தம்,
    1) நிக்கெட்டின். 2) தார். 3) CO
    4) DDT 5) HCl

06. சுவாச நிறப்பொருளற்ற விலங்குக்கூட்டமாவது,
    1) பூச்சிகள். 2) கிரஸ்தேசியாக்கள்.
    3) அனலிட்டுக்கள் 4) நத்தைகள்.
    5) முள்ளந்தண்டுளிகள்.

07. நிறைவுடலி ஆரோக்கிய ஆணின் நுரையீரலின் உயிர்க்கொள்ளளவின் கன அளவு மில்லி லீற்றரில்,
    1) 500 2) 1,000 3) 1,500 4) 3,500 5) 4,500

08. வளிமண்டலத்தில் 78% நைதரசன் காணப்பட்டபோதும் குருதியில் பரவலடைய முடியாமைக்குக் காரணமாவது,
    1) குருதியிலும் வளியிலும் அதன் பகுதியமுக்கம் சமனாகும்.
    2) கலச்சுவாசத்திற்குப் பயன்படுவதில்லை.
    3) நுரையீரலினூடு பரவலடைய முடியாது.
    4) உட்சுவாசத்தின்போது உள்ளெடுக்கப்படுவதில்லை.
    5) அது ஒரு சடத்துவ வாயுவாக இருப்பதனால்.

09. ஒட்சி ஈமோகுளோபினை உருவாக்குவதற்கு ஒரு மூலக்கூறு ஈமோகுளோபினுடன் எத்தனை ஒட்சிசன் மூலக்கூறுகள் இணையும்?
    1) 1 2) 2 3) 3 4) 4 5) 8

10. உடல் மேற்பரப்பினூடாக சுவாச வாயுக்களின் பரிமாற்றம்,
    1) தரைவாழ்வுக்கான பரிமாற்றம்.
    2) மேற்படி கன அளவு விகிதம் அதிகமாகும்போது வினைத்திறனுடையது.
    3) உயிர்பான கொண்டுசெல்லலின் ஊடாக நடைபெறும்.
    4) புவியில் உயிர்ப்பல்வகை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்த பிரதான அம்சமாகும்.
    5) முள்ளந்தண்டற்ற விலங்குக்கு மட்டுமே உடையதாகும்.

11. சுவாச நிறப்பொருளில் பல்வகைமையைக் காட்டும் கணம் யாது?
    1) Annelida 2) Arthropoda 3) Mollusca
    4) Echinodermata 5) Chordata

12. சுவாச தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
    1) எல்லா சுவாச மேற்பரப்புகளும் பெரிய மேற்பரப்பைக் கொண்டிருக்கும்.
    2) சுவாச அங்கங்கள் உள்ளவற்றில் சுவாச நிறப்பொருள் காணப்படும்.
    3) நீரில் வாழும் முள்ளந்தண்டு விலங்குகள் யாவும் பூக்கள் சுவாச அங்கமாகக் கொண்டுள்ளன.
    4) தரையில் வாழும் எவ்விலங்கும் பூக்களை சுவாச அங்கமாகப் பயன்படுத்துவதில்லை.
    5) முதன்முதலில் நுரையீரலைத் தோற்றுவித்த முள்ளந்தண்டு விலங்கு அம்பிபியாவாகும்.

13. ஓர் ஒலி நுணுக்குக்காட்டியைப் பயன்படுத்தி மானிட இரப்பையின் குறுக்குவெட்டிலிருந்து மானிட முன்சிறுகுடலின் குறுக்குவெட்டை வேறுபடுத்தி அறியக்கூடியதாக இருப்பதற்கு காரணம்,
    1) கெண்டிக்கலங்கள் இருத்தல். 2) கம்பமேலணி இருத்தல்.
    3) புருணரின் சுரப்பிகள்.
    4) ஒரு வட்டத்தசைப்பட்டை. 5) ஒரு சிரோசா இருத்தல்.

14. விலங்குக்கூட்டத்திற்கு ஒத்தது அல்ல. இவ்வுண்ணல் முறையைத் தெரிந்தெடுக்குக.

| உண்ணல் முறை | விலங்குக்கூட்டம் |
|---|---|
| 1) தின்குழியச் செயல் | அமீபாக்கள் |
| 2) வடித்து உண்ணல் | [illegible] |
| 3) துளைத்து உறிஞ்சல் | நுளம்புகள் |
| 4) மெல்லாமல் விழுங்குதல் | பாம்புகள் |
| 5) கடித்து மெல்லுதல். | ஊட்டுப்பூச்சிகள் |

15. பின்வரும் கூற்றுக்களில் எது மானிட இரைப்பை பற்றி பொய்யானது?
    1) அது பெப்சினைச் சுரக்கிறது.
    2) அது சமிபாட்டுத் தொகுதியின் மிகவும் விரியத்தக்க பகுதியாகும்.
    3) அது அகஞ்சுரக்கும் சுரப்பியாகத் தொழிற்படுகிறது.
    4) அதன் சேய்மை முனையில் ஒரு குடல்வாய் சுருக்கு உண்டு.
    5) அது நீரை அகத்துறிஞ்சுகின்றது.

16. மனிதனின் உணவுக்கால்வாயிலே ஒரு சரிவான தசைப்படை காணப்படுவது,
    1) களத்தில். 2) இரைப்பையில்.
    3) முன்சிறுகுடலில். 4) சுருட்குடலில். 5) நேர்குடலில்.

17. மனிதனின் உமிழ்நீர்ச்சுரப்பிகள் பற்றிப் பிள்வருவனவற்றில் எது பொய்யானது?
    1) அவை கூட்டுச்சுரப்பிகளாகும்.
    2) ஆகவும் பெரிய உமிழ் நீர்ச்சுரப்பிகள் கன்னவுமிழ் நீர்ச்சுரப்பிகளாகும்.
    3) அவற்றின் சுரப்பு இலைசோலைமைக் கொண்டது.
    4) அவை வழக்கமாக ஓமோன் கட்டுப்பாட்டில் உள்ளன.
    5) அவை அமிலேசைச் சுரக்கின்றன.

18. மனிதர்களிலே உணவில் உள்ள துவிச்சக்ரைட்டுகளை சமிபாடடையச் செய்யும் நொதியங்களைச் சுரப்பது,
    1) உமிழ்நீர்ச்சுரப்பிகள். 2) இரைப்பை. 3) சதையி.
    4) சிறுகுடல். 5) பெருங்குடல்.

19. மனிதனில் என்தெரோகைனேசு புரியும் தொழிலானது,
    1) திரிப்சினோசனை திரப்பிசனாக மாற்றும்.
    2) பால் புரதங்கள் திரையச் செய்தல்.
    3) பெசினோசினை பெப்சினாக மாற்றுதல்.
    4) அமிலம் சுரப்பதைத் தூண்டல்.
    5) புரதங்களை பெதைட்டுகளாக மாற்றுதல்.

20. கீழ்க்காணும் நொதியங்களில் சதையிச்சாறில் கிடையாதது எது?
    1) அமிலேசு. 2) பெப்சின். 3) திரிச்சின்.
    4) திரிச்சிலோஜன். 5) கைமோதிரிச்சின்.

21. எண்ணெய்ப்பசையில் சவர்க்காரம் தாக்கம் கொள்வது போல் உணவாக உட்கொள்ளப்படும் கொழுப்பின் மீது தாக்கம் கொள்ளும் ஒரு பதார்த்தத்தை மனிதனில் உற்பத்தி செய்யும் அங்கமாவது,
    1) முன்சிறுகுடல். 2) ஈரல். 3) சதையி:
    4) உமிழ்நீர்ச்சுரப்பிகள். 5) இரைப்பை.

22. சாதாரண குழந்தையில் இருக்கும் உதிர்பற்களின் மொத்த எண்ணிக்கை,
    1) 15 2) 20 3) 24 4) 28 5) 32

23. கீழ்க்காணும் நோய்களில் எது விற்றமின் குறைபாட்டினால் ஏற்படுவதில்லை,
    1) கொடிய அனீமியா. 2) பெலாக்கிரா. 3) பெரிபெரி.
    4) என்புருக்கி நோய். 5) பிணையில் கீற்றோனுரியா.

24. விற்றமின் C குறைபாடு அல்லது அது இல்லாதிருத்தல் காரணமாக ஏற்படுவது,
    1) பெரிபெரியாகும். 2) இரவுக்குருடாகும்.
    3) இசுகோவியாகும். 4) என்புருக்கி நோயாகும்.
    5) குருதி உறையா நோயாகும்.

25. அவசியமான அமினோ அமிலங்களாவன ஒரு விலங்கு,
    1) அதன் முன்னோடிகளிலிருந்து தொகுக்க முடியாதவை.
    2) அதன் இளம் பருவத்தில் மாத்திரம் வேண்டி நிற்பவை.
    3) அவை சாதாரண உணவிலிருந்து தொகுக்க முடியாதவை.
    4) அதன் வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கு வேண்டி நிற்பவை.
    5) அதன் இனப்பெருக்கத்தின்போது மாத்திரம் வேண்டி நிற்பவை.

26. விலங்குகளில் போசணைச் செய்முறையின் பொதுவான தொடர் ஒழுங்கு உட்செலுத்தல் சமிபாடு அகத்துறிஞ்சல் மலநீக்கல் என்பதாகும். பின்வருவனவற்றுள் எது இத்தொடர் ஒழுங்கைக் காட்டுவதில்லை?
    1) மனிதன். 2) சிலந்தி. 3) சிப்பி. 4) கரப்பன். 5) பாம்பு.

27. பின்வரும் எந்த முள்ளந்தண்டு விலங்கு இழையக்கூட்டங்கள் ஓமோன்கள், நொதியங்கள் ஆகிய இரண்டினையும் உருவாக்குகின்றன?
    1) மண்ணீரல், ஈரல், அதிரினல் சுரப்பி.
    2) சதையி, இரைப்பை, சிறுகுடல்.
    3) உமிழ்நீர்ச்சுரப்பிகள் கேடயப்போலச்சுரப்பிகள், கீழ்க்கழுத்துச்சுரப்பி.
    4) உமிழ்நீர்ச்சுரப்பி, ஈரல், சதையி.
    5) இரைப்பை, சிறுகுடல் கீழ்க்கழுத்துச்சுரப்பி.

28. தீட்டாத அரிசியுடன் ஒப்பிடும்போது தீட்டிய அரிசியில் அற்றுப்போகும் விற்றமின் ஆவது,
    1) தயலின். 2) விற்றமின் A 3) விற்றமின் C
    4) றைபோபிளேவின். 5) நயசின்.

29. வைத்தியர் உமது நிறையைக் குறைத்துக்கொள்வது அவசியம் எனக் கூறுகிறார். இதைச் செயற்படுத்தும் முகமாக உமது உணவில் நிச்சயமாக சேர்த்துக்கொள்ள வேண்டிய பொருட்கள்,
    1) உயர் புரதம், தாழ்காபோவைதரேற்று, தாழ் கொழுப்பு.
    2) உயர் காபோவைதரேற்று, தாழ் புரதம், தாழ் கொழுப்பு.
    3) உயர் கொழுப்பு, உயர் புரதம், உயர் காபோவைதரேற்று.
    4) உயர் கொழுப்பு, தாழ் புரதம், உயர் காபோவைதரேற்று.
    5) உயர் கொழுப்பு, உயர் புரதம், தாழ் காபோவைதரேற்று.

30. மானிட இரைப்பை,
    1) விற்றமின் C அகத்துறிஞ்சலுக்குத் தேவையான காரணியைச் சுரக்கின்றது.
    2) கார PH பெறுமானமுடைய சாற்றினைக் கொண்டது.
    3) பெப்சினைக் சுரக்கின்றது.
    4) அகஞ்சுரக்கும் அங்கத்தைப் போன்று செயற்படுகின்றது.
    5) இதன் சீதமுளியில் முனைப்பான சடைமுளைகள் உண்டு.

(11 ஆம் பக்கம் பார்க்க)


ஆசிரியர்: R.ஈஸ்வரதாஸன் B.Sc (Biology), PG Dip in Edu, MEd, MPhil
கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு-04.
தொ.பே.இல: 077-7291877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. A. 1) சமிபாடு என்பதன் கருத்து யாது?
2) மனித உணவுக்கால்வாயில் புரதம் சமிபாடு நடைபெறும் இடங்களையும் நடைபெறும் மாற்றங்களையும் தருக.
3) அகபெப்ரிடேசு என்றால் என்ன?
*4) மனிதனில் சதையினால் உருவாக்கப்படும் அகப்பெப்ரிடேசுக்களைக் குறிப்பிட்டு அவை தொழிற்படும் நிலைக்கு எவ்வாறு மாற்றப்படுகின்றன?
5) மனிதனில் உருவாக்கப்படும் புறப்பெப்ரிடேசுக்கள் எவை, அவை எவற்றினால் உருவாகும்?
நொதியம் : ..........
உருவாகுமிடம் : ..........

B.




1) மேற்குறித்த வரிப்படத்தில் a, b, c, d என குறிப்பிடப்படும் பகுதிகளைப் பெயரிட்டு அவற்றின் பிரதான தொழிலைத் தருக.

| பகுதி | தொழில் |
|---|---|
| a. .......... | .......... |
| b. .......... | .......... |
| c. .......... | .......... |
| d. .......... | .......... |

2) மனித இரைப்பையில் விரிதலுக்காகக் காணப்படும் அமைப்பு யாது?
3) மனித இரைப்பையில் காணப்படும் தசைப்படையொழுங்கைத் தருக.
4) குடல்வாய் இறுக்கி என்றால் என்ன?
5) குடல்வாய் இறுக்கியின் தொழில் யாது?

C. 1) நிரம்பிய கொழுப்பமிலம் என்பதால் யாது விளங்குவீர்?
2) மனிதன் நிரம்பிய கொழுப்பமில உணவு உள்ளெடுப்பதால் ஏற்படக்கூடிய விளைவு யாது?
3) விற்றமின் என்றால் என்ன?
4) பின்வரும் விற்றமின்கள் ஏற்படுத்தும் பிரதான குறைபாட்டு விளைவு யாது?
Vitamin A :- ..........
Vitamin D :- ..........
Vitamin K :- ..........
Riboflavin :- ..........


D. 1) மனிதனின் முன் கடைவாய்பல்லின் நிலைக்குத்து வெட்டுமுகத் தோற்றத்தை வரைந்து பகுதிகளைப் பெயரிடுக.
2) மனிதனின் பல் நோய் ஏற்படுத்தும் பிரதான காரணிகளைக் குறிப்பிடுக.
3) மனித பாற்பல் சூத்திரம் யாது?
4) மனித உடலில் முன்சிறுகுடல் அமைவிடத்தைத் தருக.
5) மனிதனிலே காபோவைதரேற்று சமிபாட்டுடன் தொடர்புடைய மூன்று நொதியங்களின் பெயர்களைத் தருக.
a. ..........
b. ..........
c. ..........

02. A. 1) சுவாச மேற்பரப்பு என்றால் என்ன?
2) ஒரு விலங்கினுடைய சுவாச மேற்பரப்பு கொண்டிருக்க வேண்டிய பிரதான இயல்புகள் எவை?
3) நீர்கற்ற வெவ்வேறு சுவாச அங்கங்களைக் குறிப்பிட்டு அவற்றுக்குரிய கணம்/ வகுப்பு என்பவற்றைக் குறிப்பிடவும் (வெவ்வேறு கண/வகுப்பாக அமைதல் வேண்டும்)
a. ..........
b. ..........
c. ..........
4) பூச்சிகளின் சுவாசத் தொகுதியின் பகுதி யாது?
5) பூச்சிகளின் சுவாச மேற்பரப்பு எவ்வாறு $O_2$ ஐ விநியோகிக்கின்றது?

B. 1) வற்றுப்பெருக்கு கனவளவு என்றால் என்ன?
2) மனித சுவாச அசைவுடன் தொடர்புடை இரு தசைகள் எவை? அவை எவ்வகைக்குரியவை?
தசை : ..........
வகை : ..........
3) குருதி நிறப்பொருள் என்றால் என்ன?
4) பின்வரும் குருதி நிறப்பொருள் அயன் யாது?
a. ஈமோகுளோபின் : ..........
b. ஈமோசயனின் : ..........
c. ஈமோஎரித்திரின் : ..........
5) மனித சுவாச இரசாயன மையம் எது?

C. 1) மனித சுவாசத்தொகுதியின் படம் தரப்பட்டுள்ளது. a, b, c எனும் பகுதிகளைப் பெயரிட்டு அவைகளின் தொழில்களைத் தருக,

| பகுதி | தொழில். |
|---|---|
| a. .......... | .......... |
| b. .......... | .......... |
| c. .......... | .......... |




2) மேல் அமைப்பில் காணப்படும் மேலணிகளைத் தருக.
3) மேல் அமைப்பில் தொழிற்பாட்டலகு எது?
4) கூர்ப்பின்போது முதல் சுவாச அங்கம் .......... விலும் சுவாசத் தொகுதி .......... கூட்டத்திலும் தோன்றியது.
5) ஒரு விலங்கின் விசேட சுவாச கட்டமைப்பு விருத்திக்கு தேவை யாது?

D. 1) காற்றூட்டல் என்றால் என்ன?
2) மனிதனில் $CO_2$ எவ்வுருவங்களில் கொண்டு செல்லப்படுகின்றது?
3) மனிதனில் CO ஒரு சுவாச நஞ்சு. இதை விளக்குக.
4) ஈமோகுளோபின் $CO_2$ வுடன் சேருவதில் ஒரு நொதியம் பங்குகொள்ளும். அது எது?

03. A. 1) போசணை என்றால் என்ன?
2) தற்போசணிகளையும் பிறபோசணிகளையும் ஒப்பிடுக.
3) பிறபோசணிகளின் மூன்று வகைகள் என்ன? விளக்குக.

| பிறபோசணி | விளக்கம் |
|---|---|
| 1. .......... | .......... |
| 2. .......... | .......... |
| 3. .......... | .......... |

4) விலங்குமுறைப் போசணையிலுள்ள 5 பிரதான படிகள் யாவை?
5) மேல் (4) பிரதான படிகளில் ஒழுங்குமுறை மாறக்கூடிய விலங்கு எவை?

B. 1) ஒன்றிய வாழிப் போசணை என்றால் என்ன?
2) ஒன்றிய வாழிப் போசணையிலுள்ள மூன்று வகைகள் எவை? அவை தொடர்பான விளக்கம், உதாரணம் என்பவற்றைத் தருக.

| வகை | விளக்கம் | உதாரணம் |
|---|---|---|
| 1. .......... | .......... | .......... |
| 2. .......... | .......... | .......... |
| 3. .......... | .......... | .......... |

3) பூச்சியுண்ணும் தாவரங்கள் விசேட போசணை முறையொன்றை மேற்கொள்கின்றன. அதை விளக்குக.
4) மேல் (3) உதாரணம் தருக.

C. 1) அத்தியாவசிய மூலகங்கள் என்றால் என்ன?
2) அத்தியாவசிய மூலகங்களின் இருவகை யாவை?
3) மேல் C (2) இரு வகைகளையும் ஒப்பிடுக.
4) பின்வரும் மூலகங்கள் தாவரங்களினால் உள்ளெடுக்கப்படும் வளங்கள் எவை? அம் மூலகங்களின் தொழிற்பாடு, குறைபாட்டு நோய் என்பவற்றைத் தருக.

| மூலகம் | உள்ளெடுக்கப்படும் வடிவம் | தொழில்கள் | குறைபாட்டு நோய் |
|---|---|---|---|
| Ca | .......... | .......... | .......... |
| Mg | .......... | .......... | .......... |
| P | .......... | .......... | .......... |
| S | .......... | .......... | .......... |
| Fe | .......... | .......... | .......... |
| Mo | | | |

D. 1) மனித உணவுக்கால்வாய்த் தொகுதியின் பகுதிகள் யாவை?
2) பின்வரும் பகுதியின் அமைவிடத்தைத் தருக.
a. இரைப்பை:- ..........
b. ஈரல்:- ..........
3) பின்வரும் பகுதிகளின் பிரதான தொழில் பற்றித் தருக.
a. களம்:- ..........
b. இரைப்பை:- ..........
c. சிறுகுடல்:- ..........
d. பெருங்குடல்:- ..........
e. நேர்குடல்:- ..........
4) பின்வரும் பகுதிகளின் தொழிற்பாட்டுக்கான சிறப்பம்சங்கள் யாவை?
a. இரைப்பை:- ..........
b. சிறுகுடல்:- ..........
c. பெருங்குடல்:- ..........

04. A. 1) மனித பாற்பற் சூத்திரத்தைத் தருக.
2) மனித வெட்டும்பல் நிலைக்குத்து வெட்டுமுகத்தைத் தருக.
3) மனித பல் நோய்கள் ஏற்படக்கூடிய முறைகள் யாவை?
4) பற் சூத்திரத்தைப் பேண என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

B. 1) மனித உணவுக்கால்வாய் சுவரின் படையொழுங்கைத் தருக.
2) மேல் படையொழுங்கில் காணப்படும் பிரதான இழையங்கள் யாவை?

| படை | இழையம் |
|---|---|
| 1. .......... | .......... |
| 2. .......... | .......... |
| 3. .......... | .......... |
| 4. .......... | .......... |

3) மேல் படை அமைப்பில் பின்வரும் பகுதியில் ஏற்படும் மாற்றத்தையும் அதற்கான காரணத்தையும் தருக.
1. இரைப்பை :- ..........
2. சிறுகுடல் :- ..........
3. பெருங்குடல் :- ..........
4) சுற்றுச்சுருங்கல் என்பது?
5) சுற்றுச்சுருங்கல் நடைபெறும் உணவுக்கால்வாயின் பிரதான பகுதிகள் யாவை?
6) சுற்றுச்சுருங்கலில் பரபரிவு தொகுதி விளைவு யாது?

C. 1) பின்வரும் சுரப்பிகளின் சுரப்புக்கூறுகளைத் தருக.
a. உமிழ்நீர்ச்சுரப்பி :- ..........
b. சதையி :- ..........
c. ஈரல் :- ..........
2) மனித உணவுக்கால்வாய் உள்ளெடுக்கப்படும் புரத உணவுக்கு நடைபெறும் மாற்றத்தை ஒழுங்குமுறையாகத் தருக.
3) இலிப்பிட்டு உணவு சமிபாடு நடைபெறும் இடங்களையும் அதன் நொதியத்தையும் தருக.
4) பின்வரும் ஓமோன்களின் உணவுக்கால்வாய் தொடர்பான தொழில் யாவை?
a. காசுத்திரின் :- ..........
b. கோலிசிஸ்ரோகைனின் :- ..........
c. செக்கிரித்தீன் :- ..........
d. எரைரோ கஸ்ரோன் :- ..........

D. 1) சக்நிலை உணவு என்பது?
2) உணவில் அடங்கியுள்ள கூறுகள் எவை?
3) பின்வரும் விற்றமின் குறைபாடு யாது?
1. விற்றமின் A :- ..........
2. விற்றமின் C :- ..........
3. விற்றமின் D :- ..........
4. விற்றமின் E :- ..........
5. விற்றமின் K :- ..........
4) உணவுக்கால்வாய் தொடர்பான பின்வரும் ஒழுங்கீனம் எவ்வாறு ஏற்படுகிறது?
a. இரைப்பை அழற்சி :- ..........
b. மலச்சிக்கல் :- ..........

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

3மாதகால தொழில்சார் கணனிக்கற்கை நெறி
கம்பனிக்கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE
உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான
100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆசிரியரால் நேரடியாக கற்பிக்கப்படும்




வகுப்புக்கள் ஆரம்பம்:-
Batch I :-23/04/2010 - 10 am or 2pm
Batch II :-24/04/2010 - 09 am
Batch III :-25/04/2010 - 09 am
Batch IV :-28/04/2010 - 10 am or 2pm
100% செய்முறைப் பயிற்சி


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
1954 ★ 06 ★ 27



ஆண்டவன் அடியில்
2009 ★ 05 ★ 02

**திருமதி ரஜனி குணரத்தினம் (ராசாத்தி)**

திதி: வளர்பிறை அட்டமி

பூமியில் ஆயிரம் உறவிருந்தாலும்
தாயே உன்னைப் போல் ஈடாகுமா?
கட்டிய கணவன் பிள்ளைகளுடன்
உடன் பிறப்புக்களும் நாம்
கலங்கி அழுகின்றோம் உன் நினைவால்...

வழக்கம்பரை,
தொல்புரம்.

என்றும் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(97196)

### இலவச ஆங்கில, சிங்கள வகுப்புகள் விரைவில்

யாழ்ப்பாணம், ஏப்.21

உலக புத்தக தினத்தையொட்டி சரசாலை பொது நூலகத்தினர் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அடிப்படை ஆங்கிலம் மற்றும் சிங்கள வகுப்புக்களை நடத்தவுள்ளனர்.

தரம் நான்கு, ஐந்து ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு சிங்கள வகுப்புகளையும் ஆங்கில பாட வகுப்புகள் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகப் போதிக்கப்படும்.

பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் பொது நூலக எல்லைக்குட்பட்ட மாணவர் கள் பொது நூலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (50-207)

### வீதி புனரமைப்பு

கொழும்புத்துறை, ஏப்.21

அரியாலை புங்கன்குளம் புகையிரத நிலையவீதி புனரமைக்கப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாக கவனிப்பாரற்று போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு சேதமடைந்திருந்த இவ் வீதி தற்போது யாழ். மாநகர சபையால் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. (50-135)

## 16ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
05 . 05 . 1930



விண்ணில்
06 . 04 . 2010

**அமரர் வரதராசன் மகாதேவி அம்மாள்**

பூமாதேவி எம் மகாதேவி அம்மா
சீமாட்டி போன்று சிறப்பான வாழ்க்கை
பக்கபலம்... அதனிலும் மேலாக
பலமே 'நீர்' தான் என்றிருந்தவர் அப்பா
பாச விளக்கில் பளிச்சிட்டுப் பின்
தூசும் படாதிருந்த கண்மணிகள் மூன்று
பரிவும் பகிர்வும் பண்பாயிருந்ததனால்
சொரிந்தனர் அன்பை உற்றார், உறவினர்


அச்சாணி போயினும் வாழ்க்கைதனை
உச்சாணி வழுவாது உழைத்து விட்டு
தேடிய சொந்தங்கள் ஒவ்வொன்றும்
ஓடியே வந்து ஒத்துழைத்தும்
கோடியாம் இந்த முக்தி வரமென்று
நாடினீரோ நற்றாழ் தொழ
ஏங்குதம்மா உங்கள் பாசத்திற்கு
தங்கமே! எம் தாய்த் திருவே!

84/3, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(97190)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



'எமக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த
எம் குல தெய்வத்துக்கு எமது இதய அஞ்சலிகள்'

தோற்றம்: 10.06.1931 மறைவு: 02.05.2009

திதி: அட்டமி

**அமரர் அரியகுட்டி துரைராஜா**

வருடம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும்
அப்பா உங்களுக்கு ஈடாகுமா?
எமதருமைத் தந்தையே!
பெற்று வளர்த்துப் பேர் சூட்டி ஆளாக்கி
அவைதனிலே முன்னிற்க வைத்தவரே!
நீங்கள் நடந்த பாதையெங்கும் உங்கள்
வரவைக் காணாமல் நிதம் நிதம்
ஏங்கியே தவிக்கின்றோம்
ஆலமரம் சாய்ந்து போனதே ஆனாலும்
விழுதுகளின் விழிகளில்
ஈரம் இன்னும் காயவில்லை

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
தொ.பே: 0778733454

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**01.08.1990**

* யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் இரவு ஏழு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் யாழ்.ஆயர் இல்லமும், யாழ். புனித மரியாள் பேராலயமும் பெரும் சேதம் அடைந்ததாகத் தெரிவிப்பு.
* இலங்கை விமானப் படையினர் நேற்று முன்தினம் யாழ்.கோட்டை முகாமைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி நடத்திய குண்டுவீச்சின் போது அந்தக் குண்டுகளில் சில இலக்குத் தவறி யாழ்.கோட்டைக்குள்ளும் வீழ்ந்ததாகத் தெரிவிப்பு.

**02.08.1990**

* வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகளுடன் போர் புரிந்துவரும் இலங்கை அரசுக்கு தெற்கிலும் யுத்தம் ஒன்றை எதிர்நோக்கும் அபாயம் உருவாகி வருவதாக ஜனாதிபதி பிரேமதாஸ கவலை தெரிவிப்பு.
* தற்போது மூடப்பட்டிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் போதனா வைத்தியசாலை மருத்துவர்களுடனான கலந்துரையாடலின் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தையா தெரிவிப்பு.

**03.08.1990**

* நேற்றுமாலை யாழ்.நகரின் மீது வட்டமிட்ட புதியரக விமானமொன்றிலிருந்து வீசப்பட்ட ஐந்து இராட்சதக் குண்டுகளினால் சுமார் நூறு வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் கடும் சேதமடைந்ததாகத் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பகுதியை இராணுவ நடவடிக்கை விலக்கப்பட்ட பிரதேசமாக்கி அங்கு சிகிச்சை வசதிகளை ஏற்படுத்த அரசு விரும்புவதாகத் தெரிவிப்பு.

**04.08.1990**

* இலங்கை பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்ன அரபு நாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.
* வவுனியாவில் இருந்து வடபகுதி நோக்கி முன்னேறும் திட்டத்தைச் செயற்படுத்தும் விதத்தில் நேற்று முன்தினம் முதல் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அரசு அறிவிப்பு.

**05.08.1990**

* யாழ்.கோட்டையைக் கைப்பற்றும் நோக்குடன் விடுதலைப்புலிகள் இன்று அதிகாலை பெரும் தாக்குதலொன்றை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிப்பு.
* மட்டக்களப்பு மாவட்டம், காத்தான் குடியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு பள்ளிவாசல்களில் ஒரே சமயத்தில் புகுந்த சீருடை அணிந்த கோஷ்டியினர் அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் பொது மக்கள் மீது மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 140 பேர் வரையில் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

**06.08.1990**

* யாழ்ப்பாணம் கோட்டை முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் 27 பேர் உயிரிழப்பு. கோட்டைக்குள் இருந்த படையினருக்கும் பேரிழப்பு ஏற்பட்டிருக்க லாம் என ஊகம் தெரிவிப்பு.
* யாழ்.கோட்டை இராணுவ முகாம் அடுத்து வரும் வாரங்களில் எப்படியேனும் விடுதலைப்புலிகளின் கைகளில் வீழ்ச்சியடையும் என தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஊகம் தெரிவிப்பு.

**07.08.1990**

* கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் தொடர்ந்து முஸ்லிம்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப் பட்டு வருவதாகவும், அந்த வகையில் நேற்று மட்டும் 33 பேரினது சடலங்கள் மீட்கப்பட்டதாகவும்ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.
* இலங்கைக்கு 76 மில்லிமீற்றர் அளவுள்ள குண்டுகளை விற்பனை செய்யும் முயற்சிக்கு ஆஸ்திரேலிய அரசு தடை விதித்துள்ளதாக அறிவிப்பு.

**08.08.1990**

* யாழ்.நகர் மீதும் அதனை அண்டிய பகுதிகள் மீதும் இலங்கை விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் நேற்று மட்டும் பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலி எனவும் கட்டடங்கள், கடைகள், வீடுகள் பல கடும் சேதமுற்றதாகவும் தெரிவிப்பு.
* மானிப்பாயில் இயங்கும் யாழ்.போதனா வைத்தியசாலை மீதும் அதன் சுற்றாடலிலும் நேற்று குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் மூன்று பொது மக்கள் பலியானதாகத் தெரிவிப்பு.

**09.08.1990**

* சுன்னாகம் மின் நிலையத்தின் மீது விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் மின் நிலையம், இனி இயங்கமுடியாத அளவுக்கு சேதமுற்றதாகத் தெரிவிப்பு.
* அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன் தினம் 30 சிங்களப் பொதுமக்களும், அனுராதபுரம் மாவட்டத்தில் 27 சிங்களப் பயணிகளும் இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.

**10.08.1990**

* யாழ்.ரயில் நிலையத்தின் மீது விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் ரயில் நிலையம் முற்றாகச் சேதமடைந்ததாகத் தெரிவிப்பு.
* விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான மோதலில் சர்வதேச சமூகத்தின் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளமை குறித்து இந்தியா நன்கறியும் என இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தெரிவிப்பு.

**11.08.1990**

* இலங்கை அரச படைகள் யாழ்.குடாநாட்டில் நடத்திவரும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் மற்றும் ஷெல்தாக்குதல்களையடுத்து யாழ்.குடாநாட்டிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்வோரின் தொகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* சுன்னாகம் மின்நிலையம் சேதமுற்றிருந்தாலும் குடாநாட்டின் ஒரு பகுதிக்கு மின் சாரத்தை வழங்க வாய்ப்பு இருந்தாலும் குடாநாட்டிற்கு மின் வழங்குவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்து வருவதாகத் தெரிவிப்பு.

**12.08.1990**

* 45 ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு சென்ற படகு தனுஷ்கோடி கரைக்குச் சற்று அப்பால் நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் படகில் பயணம் செய்தவர்களின் கதி என்னவெனத் தெரியாதுள்ளதாக இராமேஸ்வரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.
* மானிப்பாயில் இயங்கும் யாழ்.போதனா வைத்தியசாலை மீது நேற்றும் இலங்கை விமானப் படையினர் ஹெலிகொப்டரிலிருந்து 'ரொக்கட்' தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

**13.08.1990**

* இந்தியத் தூதுவர் எஸ்.என்.ஜாவும், ஜனாதிபதி பிரேமதாஸவும் நாளை சந்தித்துப் பேசும்போது ஈழத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்படுவது தொடர்பாகவும், ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வதைத் தடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவது தொடர்பாகவும் ஆராயப்படுமெனத் தெரிவிப்பு.
* வவுனியாவில் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட 16 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**14.08.1990**

* மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூருக்கு அருகிலுள்ள ஆறு கிராமங்களுக்குள் புகுந்த இனந்தெரியாத குழுவினர் நடத்திய தாக்குதலில் 125 முஸ்லிம்கள் உயிரிழந்துள்ளதாக பி.பி.ஸியின் கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.
* மட்டக்களப்பு மாவட்டம் சம்மாந்துறைப் பகுதியில் உள்ள வீரமுனைக் கிராமத்தில் கோயில் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் அகதிகளில் 21 பேரை முஸ்லிம்கள் சிலர் தாக்கிக் கொலை செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

**20.08.1990**

* கொழும்பிலும், தென்னிலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும் பதற்றமான சூழ்நிலை நிலவுவதனால் கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஆயுதப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிப்பு.
* மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடியில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் முஸ்லிம் குழுவொன்று 30 தமிழ்ப் பொது மக்களைத் தாக்கிப் படுகொலை செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

# ரோம் சென்ற இலங்கை விமானம் பாதி வழியில் திரும்பி வந்தது

கொழும்பு, ஏப். 21

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 3.35 மணிக்கு ரோம் நோக்கிப் புறப்பட்டுச் சென்ற 563 ரக விமானம், அங்கு செல்ல முடியாது பாதி வழியில் முற்பகல் 11.55 மணியளவில் மீண்டும் விமான நிலையத்துக்கே திரும்பியுள்ளது என விமான நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இலங்கையிலிருந்து ஐரோப்பாவின் சில நாடுகளுக்குச் செல்லவிருந்த 6 விமான சேவைகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தொடர்ந்து ஐந்தாவது நாளாகவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஐஸ்லாந்திலுள்ள இஜப்ஜல்லாஜோகுல் எரிமலை கடந்த ஐந்து தினங்களாக குமுறிக் கொண்டிருப்பதால் ஐரோப்பாக் கண்டத்தின் வான்பகுதி முற்றாக புகை மண்டலம் நிரம்பிக் காணப்படுகிறது. இதனால், ஐரோப்பாவுக்கான விமான சேவைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து லண்டன் மற்றும் பிராங்போர்ட்டுக்கான விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என வும் நேற்று அதிகாலை 3.35 மணிக்கு 563 ரக விமானம் ரோமை நோக்கிப் புறப்பட்டுச் சென்று, முற்பகல் 11.55 மணியளவில் விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

விமானங்கள் புறப்படும் நேரம், தாமதம், உள்ளிட்ட தகவல்களைத் தெரிந்து கொள்ள 019 7335500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளுமாறு பயணிகள் கேட்கப்பட்டுள்ளனர். (சி)

# ஐரோப்பியத் தபால் சேவைகளை இடைநிறுத்தியுள்ளது இலங்கை

கொழும்பு, ஏப்.21

ஐஸ்லாந்தில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பிலிருந்து வெளிப்பட்ட சாம்பல் காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கான விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், இலங்கையிலிருந்து வான்வழித் தபால் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என இலங்கை அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அஞ்சல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

தூசிபடிந்த மேகக்கூட்டங்கள் பரவியுள்ளமையால் ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதன் காரணமாக மறுஅறிவித்தல் வரை ஒஸ்ட்ரியா, பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், பிரித்தானியா, இத்தாலி நெதர்லாந்து, நோர்வே, ரஷ்யா, ஸ்பெயன், ஸ்வீடன் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளுக்கு வான்வழித் தபால் பொருள்களை அஞ்சலிட வேண்டாமென்று இலங்கை அஞ்சல் திணைக்களம், வாடிக்கையாளர்களைத் தயவுடன் கேட்டு கொள்கின்றது.- என்றுள்ளது.

(சி)

# முகாம்களிலிருந்து மட்டக்களப்புக்கு அழைத்துவரப்பட்டோர் துயரத்தில்!

கொழும்பு, ஏப். 21

கடந்த வருடம் வன்னியில் ஏற்பட்ட யுத்தத்தினால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்தவர்களில் பலர் மட்டக்களப்புக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்கள் தற்போது அடிப்படை வசதிகள் எதுவுமின்றி துயரங்களை அனுபவித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை வன்னியிலிருந்து அழைத்து வந்த இராணுவத்தினர் குறித்த பொலிஸ் நிலையத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைவிட்டு வெளியே செல்லாதவாறு தடை விதித்துள்ளதுடன் நாளாந்தம் தங்களது வீட்டுக்கும் வந்து விசாரிக்கிறார்கள் என்றும், இதனால் குறித்த பகுதியில் உள்ள சமுதாயத்தினர் தங்களை சந்தேகக் கண் ணுடன் பார்க்கின்றனர். தங்களுடன் தொடர்புகளை வைத்திருக்க விரும்புவதில்லை என்றும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்ட இவர்களுக்கு சர்வதேச தொண்டு நிறுவம் ஒன்றினால் தற்காலிக கொட்டகைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் உலர் உணவுப் பொருள்களும் ஒரு குறிப்பிட்டளவு அரசினால் வழங்கப்படுகின்றன. எனினும், இவை தங்களது குடும்பங்களுக்குப் போதுமானதாக இல்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், தூர இடங்களுக்குச் செல்ல முடியாததால் ஏதாவது தொழில் செய்வதற்கும் முடியாத நிலை உள்ளது எனவும், இதனால் எதுவித வருமானமற்ற நிலையில் தங்களது குடும்பத்தை வழிநடத்த முடியாமல் பெரிதும் துன்பப்படுகின்றனர் எனவும் கூறுகின்றனர். (சி)

# ஆயுதப் போராட்டம் – வன்முறை வழி இனித் தமது அகராதியில் கிடையாதாம்!

## உருத்திரகுமாரன் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 21

ஆயுதப் போராட்டம் என்பதோ, வன்முறை வழியோ இனி எங்கள் அகராதியில் கிடையாது. ஈழத் தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளின் சட்டதிட்டத்தை மதித்துச் செயற்படுவோம். சட்டவிரோதமாக எதையும் செய்ய மாட்டோம்.

- இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசு பற்றி தமிழக வார சஞ்சிகையான ஜூனியர் விகடன் இதழுக்கு விசுவநாதன் உருத்திரகுமாரன் வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செவ்வியின் விவரம் வருமாறு -

கேள்வி- தேர்தல் பணி எப்படிப் போகிறது?

பதில் - இந்தத் தேர்தலில் உலகெங்கும் உள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களும், பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் போட்டி போடலாம். அனைவருமே ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதற்கேற்ற முறையில் தேர்தல் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

கே - யார் நிஜமான வாக்காளர்கள் என்பது எப்படித் தெரியும்? இந்தத் தேர்தலிலும் கள்ள [illegible]ய்ப்பிருக்கிறதே?

ப - ஈழத்தமிழர்கள் அனைவருமே வாக்காளர்கள்தான். இதில் ஈழத் தலைவர்கள் அனைவருமே போட்டியிடப் போவதில்லை. ஆகவே, போட்டியிடாத தலைவர்கள் இந்தத் தேர்தலை முறைப்படி நடத்த உதவுவார்கள். அடையாள அட்டை காண்பித்தே வாக்குகளைப் போடமுடியும். அந்தந்த ஊரில் நாங்கள் நியமிக்கும் தேர்தல் அலுவலர்கள் முன்னிலையில் வாக்குகள் எண்ணப்படும். அனைத்துமே நியாயமான முறையில் நடத்தப்படும்.

கே - நாடு கடந்த தமிழீழ அரசால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது என்ற விமர்சனங்களும் கிளம்புகிறதே?

ப - ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளே எம்மக்களை வழிநடத்திச் செல்லத் தகுதியானவர்கள். சர்வதேச நாடுகளுடனும், இன்னொரு அரசிடமும் பேச அவர்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது.

தலாய்லாமாவுடன் பேச்சு நடத்த முன்வரும் நாடுகள், இந்தப் புதிய அரச பிரதிநிதிகளுடன் பேச ஏன் முன்வரார்? ஆனால், ஆயுதப் போராட்டம் என்பதோ -வன்முறை வழியோ இனி எங்கள் அகராதியில் கிடையாது. ஈழத் தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளின் சட்ட திட்டத்தை மதித்து செயற்படுவோம். சட்டவிரோதமாக எதையும் செய்ய மாட்டோம் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'அபோட்' நிறுவனம் லாவா வைத்தியசாலையுடன் இணைந்து குருநகர் சென்.ஜேம்ஸ் பாடசாலையில் அண்மையில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் தைரோயிட் நோயாளர் ஒருவருக்கு வைத்தியர் இரத்தப் பரிசோதனை செய்வதையும், கலந்துகொண்ட பொதுமக்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(50)


# 9ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



திரு.திருமதி பன்னீர்ச்செல்வம்- மோகனாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வனும் UK ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சஞ்சய் தீருவில், வல்வெட்டித்துறையில் உள்ள தனது பெரியம்மா வீட்டில் தனது 9ஆவது பிறந்தநாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அம்மம்மா (அன்னலெட்சுமி), பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், ..., அத்தான்மார், மருமகள்மார், பெறாமகன்மார், பெறாமகள்மார், லண்டனிலிருக்கும் பிரசன்னா மாமா, துசி அன்ரி குடும்பம், கனிதா அன்ரி குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் வல்வை முத்து மாரியம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

21 . 04 . 2010

வாழ்த்துவோர்:
பூ.அன்னலெட்சுமி குடும்பத்தினர்.

தீருவில்,
வல்வெட்டித்துறை.

(97076)

ப.சஞ்சய்



உ
முருகன் துணை

# நன்றி அறிவித்தல்



கடந்த 16.04.2010 வெள்ளிக்கிழமை சுழிபுரம் - பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெற்ற எமது பெற்றோர் பிரம்மஸ்ரீ

## மு.பாலகுருசாமி சர்மா - விசாலாட்சி

தம்பதிகளின் சதாபிஷேக வைபவத்தில் கலந்து சிறப்பித்த அனைத்துச் சிவாச்சார்ய பெருமக்களுக்கும், ஊர் பெரியோர்களுக்கும், அனைத்து நண்பர்களுக்கும் மற்றும் வாழ்த்துச் செய்தி அனுப்பிய உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடியிருப்பு,
பறாளாய், சுழிபுரம். (97209)

குடும்பத்தினர்,
பிள்ளைகள்.



THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

சகல வசதிகளுடன் கூடிய அமைதியான சூழலில் ஒழுங்கான கட்டமைப்புடன்

O/L DAY CLASS

7மாத கால துரிதமீட்டல் வகுப்பு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

The Express Institute
Irupalai, Kopay.


## இன்னிசை நிகழ்வு

மூளாய்,ஏப்.21

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத்தின் சப்பரத் திருவிழாவை முன்னிட்டு இன்று புதன்கிழமை இரவு 9 மணிக்கு புகழ்பெற்ற பாடகரான கலைமாமணி சுகுமார் கலந்துகொள்ளும் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சுகுமாரின் இசை நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

(50-93)


### வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் 2 Rooms, 1 Hall, 1 Kitchen, Bath room வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. 4 அல்லது 5 அங்கத்தவர் கொண்ட கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த நற்பண்பு கொண்ட ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 077 5998255 (97194)

### விற்பனைக்கு

LJ XXXX தொடர் இலக்கமுடைய Tusker Super லொறி விற்பனைக்குண்டு (1613)

ராஜீவ்

நவாலிவீதி,ஆனைக்கோட்டை. T.P.:021 321 3952 (97102)

### பிரிய யோக பயிற்சி நிலையம்

24.04.2010 சனிக்கிழமை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
397,பிரதானவீதி,யாழ்ப்பாணம் (பஸ்ரியன் சந்தி)
T.P.:0772479652 (97183)

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் லேனில் 3 பரப்புக் காணியும் அதற்குள் அமைந்துள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.இவ் வீடு கோயில், பாடசாலைகள்,ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு அண்மையில் அமைந்துள்ளது.

தொடர்பு:-0112503018,0112337594 ,
[illegible], 0213219663
[illegible]@hotmail.com



### நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 13 ★ 05 ★ 1940



ஆண்டவன் அடியில் 22 ★ 03 ★ 2010

## அமரர் அய்யாத்துரை சண்முகநாதன்

எமது அன்பிற்குரிய சண்முகநாதன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசியூடாக அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், அஞ்சலி உரைகள் நடத்தியவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (21.04.2010) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு. (97152)

நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.



# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601406242 முதல் 601418640 வரை. சீட்டிழுப்பு இல. 640 திகதி 19-04-2010

வெற்றி எண்கள்

11 29 41 55 A (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 16,200,940/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 16,200,940/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 2,000/= | 34,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 235 | 1,000/= | 235,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 372 | 1,000/= | 372,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 10405 | 60/= | 624,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 4819 | 40/= | 192,760/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 121713 | 20/= | 2,434,260/= |
| | | மொத்தம் ரூ. | 4,292,320/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - H.H. அபேசிங்க - அம்பாறை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - E.G. சரத் ஆனந்த - கோணபீனுவலை.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,692,320/=

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 601410842-5-45 |
| கேகாலை | 601415389-4-16 |
| மொணராகலை | 601406692-6-11 |
| மாத்தறை | 601406609-1-09 |
| நுவரேலியா | 601413017-0-07 |
| கம்பஹா | 601406325-4-07 |
| பொலன்னறுவை | 601413621-3-27 |
| பதுளை | 601413091-2-25 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 16,530,370/=

தொடர் இல. 701360074 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 22 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில...















# மிகவும் பயனுள்ள வகையில் அமைந்த யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

## 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்டுகளித்தனர்

'யாழ்ப்பாணத்துக்கான உங்கள் நுழைவாயில்' என்னும் கருப்பொருளிலான யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை - 2010 நிகழ்வின் இறுதி நாளான நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் அதிக ஆர்வத்துடன் கண்டுகளித்ததனைக் காணமுடிந்தது.

யாழ்ப்பாணம் வர்த்தகக் கைத்தொழில் மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து நடத்திய இந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது கடந்த 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான மூன்று தினங்களாக யாழ்.மத்திய கல்லூரி இடம்பெற்றது.

இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் மற்றும் தென்னிலங்கை, வட பகுதியைச் சேர்ந்த நிறுவனங்களின் 200இற்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்கள் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மூன்று தினங்களும் முப்பத்தைந்தாயிரத்துக்கும் அதிமான மக்கள் பார்வையிட்டுச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்து இளம் சமூகத்தினர் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அதிக ஆர்வம்காட்டி வருகின்றனர் என்பதை எமது காட்சிக் கூடத்துக்கு வந்த மக்கள் ஊடாக அறிய முடிவதாக இந்தியாவின் முன்னணி நிறுவனங்களின் காட்சிக் கூடத்தில் கடமையாற்றியவர்கள் தெரிவித்தனர்.

தென்னிலங்கையின் காட்சியறைகளுக்கு அதிக ஆர்வம் காட்டிய மக்களில் குறிப்பிடத்தக்க அளவான மக்கள் உள்ளூர் உற்பத்திகளை காட்சிப்படுத்தியுள்ள காட்சியறைகளுக்குச் சென்று ஆர்வத்துடன் கண்டுகளித்ததுடன் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டியதனை அவதானிக்க முடிந்தது.

அத்துடன், யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெற்ற பல்வேறு தலைப்புகளிலான தொடர் கருத்தரங்குகளிலும் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர்.

தொழில் முயற்சியாளர்கள், முதலீட்டாளர்கள், தொழில் நுட்பம் மற்றும் கட்டுமானத்துறை சார்ந்தோர், வர்த்தக சமூகத்தினர், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பார்த்துப் பயனடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்து மக்கள் மட்டுமன்றி பிற மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் இந்த யாழ்ப்பாணம் சர்வேதச வர்த்தகச் சந்தை-2010 நிகழ்வினைக் கண்டுகளித்ததனை அவதானிக்க முடிந்தது. (50-14)

# பார்வையிட்டோர், பங்குகொண்டோர் மனங்களிலிருந்து...



**கே.கௌதம்**
(காட்சியறை முகாமையாளர், அகம் மொடியுலர் இன்டஸ்ரியல்ஸ் - இந்தியா)

எமது நாட்டு உற்பத்திகளை இலங்கையில் அறிமுகப்படுத்தவும் அதற்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் இந்த வர்த்தகக் கண்காட்சி நல்ல ஒரு வாய்ப்பாக இருக்கிறது. பி.வி.சி உற்பத்திகளை நாம் சந்தைப்படுத்தி வருகின்றோம். வீட்டுக் கட்டுமாணத்திற்கு பயன்படுத்தக்கூடிய தளபாடங்களை 'பிவிசி' பொருள்களினால் இலகுவில் வடிவமைத்துக் கொள்ளக்கூடிய இலகுவான தொழில்நுட்பப் பொருள்களை அறிமுகப்படுத்தி வருகிறோம். ஒரு மனிதன் ஒரு மணித்தியாலத்தில் உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய 'பிவிசி' கதவுகள், நிலைகள், அலுமாரிகள் குறித்து விளக்கமளித்து வருகின்றோம்.

எமது எளிய தொழில்நுட்பத்திலான உற்பத்திகளைப் பார்த்து மக்கள் வியந்துள்ளனர்.

இலங்கையில் எமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த விற்பனையாளர்களை தேடி வருகிறோம். விரைவில் எமது நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கும் இலங்கை அரசுடன் பேசி வருகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் இளம் சமூகத்தினர் தொழில் முயற்சியில் இறங்குவதற்கு அதிக ஆர்வம் கொண்டிருக்கின்றனர் என்பதனை எம்மால் உணரமுடிகிறது.

யாழ்ப்பாண மக்ககளுக்கு மிகப் பிரயோசனமுடையதாக இந்த வர்த்தகக் கண்காட்சி அமையும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. யாழ்ப்பாண மக்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் அதிகமானது.



**பா.அருள்ராஜீசன்**
(திட்ட முகாமையாளர், புறமோட்டோஸ் என்ஜினியரிங் லிமிட்டெட், யாழ்ப்பாணம்)

திரவ உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்களை எமது நிறுவனம் வடிவமைத்து அறிமுகப்படுத்தி வருகிறது. அத்துடன் எமது நாட்டுமக்களின் நன்மை கருதி பல்வேறு மிகப் பிந்திய நவீன தொழில்நுட்ப உபகரணங்களையும் இந்தக் கண்காட்சி மூலம் அறிமுகப்படுத்தி வருகிறோம்.

இந்தியா, ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளுக்கும் எமது நிறுவன உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. யாழ்ப்பாண மக்களுக்கு எமது உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பமாக யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகச் சந்தை நிகழ்வு அமைகிறது. இவ்வாறான கண்காட்சி மூலம் தொழில் முயற்சியாளர்களும் தொழில்நுட்ப ஆர்வலர்களும் நன்மை அடைவார்கள் என நம்புகிறேன்.



**வி.ஜோதிக்குமார்**
(பணிப்பாளர், விஜேய் இன்ரநஷைல் - இந்தியா)

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மக்களுக்கு மிகப் பயனுடையதாகும். மக்களின் வரவேற்பும் ஒத்துழைப்பும் எமக்கு கிடைத்திருக்கிறது. எமது உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்கு உரிய அறிமுகம் யாழ்ப்பாண மக்களிடம் சென்றடைந்திருக்கின்றது.

இடம்பெற்று முடிந்த போரின் காரணமாக இலங்கையின் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டிருக்கிறது. மீளவும் இலங்கையில் மக்கள் பொருளாதாரச் செழிப்புடன் வாழவேண்டும். இலங்கையின் தென்பகுதியிலுள்ள அபிவிருத்திகள் யாழ்ப்பாணத்திலும் இடம்பெறவேண்டும். அதற்கு நல்ல களமாக இந்தக் கண்காட்சி நிகழ்வு அமைந்திருக்கிறது. முதலீட்டாளர்கள், தொழில்முனைவோரை ஒன்றிணைத்து மக்களுக்கு அறிமுகப்படுத்தும் களமாகவும் இது அமைகிறது.

அபிவிருத்திகள், தொழில்நுட்ப மேம்பாடுகள் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற வேண்டும். அதற்காக எமது நாட்டு நிறுவனங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றன.

இலங்கையின் முதலீட்டாளர்களுடன் எமது நாட்டு முதலீட்டாளர்களும் இணைந்து இந்தக் கண்காட்சியில் பங்குபற்றியிருக்கின்றமை புதிய அனுபவமாகும்.



**திருமதி பொன்மலர் ராஜேஸ்வரன்**
(பணிப்பாளர், சங்கமம் சிறுகைத்தொழில் நிறுவனம் - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்தகக் கண்காட்சியில் எமது நிறுவன உற்பத்திகளும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் உள்ளூர் உற்பத்திகளை அறிமுகப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் நல்ல களமாக இந்தச் சந்தர்ப்பம் அமைகிறது.

தற்கால மக்களின் எதிர்பார்ப்பிற்கு நவீன முறையிலான பொறிகளுடன் உள்ளூர் உற்பத்திகளைக் காட்சிப்படுத்தி வருகிறோம். அதன் மூலம் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்று வருகிறோம்.

பெண்களுக்கு சுய பொருளாதாரத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் தொழில் பயிற்சியையும் எமது நிறுவனத்தினூடாக வழங்கி வருகிறோம். நிலைத்திருக்கும் பொருளாதார அபிவிருத்திக்கு உள்ளூர் உற்பத்திகளே கைகொடுக்கும் என்ற நம்பிக்கையுடன் அதற்கு முதன்மை கொடுத்து வருகிறோம்.

நேர்காணல் : உமா
படங்கள் : ரட்ணம்

யாழ்ப்பாணத்தில் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி
அச்சு ஊடக அனுசரணை உதயன்
(ஏப். 18 - 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வல்வை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் உரை நிகழ்த்துவதையும், இல்லத் தலைவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதற்காகச் சென்று கொண்டிருப்பதை முதலிரண்டு படங்களிலும், வெற்றிபெற்ற மாணவன் ஒருவருக்கு திருமதி நந்தினி உதயகுமார் பரிசில் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். (50)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 ★ 07 ★ 1932



மறைவு 23 ★ 03 ★ 2010

### அமரர் அம்பலவாணர் இராசரத்தினம்

எமது அன்புத் தெய்வத்தின் நினைவாராதனை நாளை (22.04.2010) வியாழக்கிழமை நண்பகல் 12மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

P.ஆனந்தன்,
(ஓய்வு பெற்ற ஊழியர், CTB).

ஏழாலை. (97178)

## மணமகன் தேவை

1981இல் பிறந்த, 23½ பாவம், 2இல் சூரியனும் செவ்வாயுமுள்ள, பொதுநிறம், நன்கு படித்த, அழகிய பெண்ணுக்கு நன்கு படித்த நற்குணமான மணமகன் தேவை.

மே/பா உதயன்,
விளம்பர இல - 4011. (97206)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப் 21

பெரியவிளான், வடஷேரியம்பதி விக்னேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204)

* * *

அராலி மத்தி, உலோலைசிட்டி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற் பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

நீர்வேலி கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த 10 ஆம் திகதி சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 27 ஆம்திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204)

* * *

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர்ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஏகாதசி விரதபூசை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகி 9 மணிக்குச் சிறப்புச் சமயச்சொற் பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயண சுவாமி ஸ்ரீதேவி, பூமா தேவி சமேதராக வீதி உலா [illegible] (204-160)

வடகோவை இலுப்பையடிப் பிள்ளையார் துணை

## ஏழாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



கோப்பாய், இணுவில்

### அமரர் கந்தையா ஆறுமுகம்

(ஆசிரியர்)

தவப்பேறு 21.12.1918

சிவப்பேறு 08.05.2003

திதி: 21.04.2010

எம்மை ஆளாக்கி அவையத்தில்
முந்தியிருப்பச் செய்த எந்தையே!
உம்மை நினைந்து வணங்குகின்றோம்.
இனி எப்பிறப்பிற் காண்போம்?

28, கைலாசபிள்ளையார் கோயில் வீதி, நல்லூர்.

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(மனைவி, இளைப்பாறிய உப அதிபர்),
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(97213)

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னம்மா செல்லப்பா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ். மணிக்கூட்டு ஒழுங்கையை நிரந்தர வதிவிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பொன்னம்மா செல்லப்பா 18.04.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் (ஸ்தாபகர், செல்லப்பா & Co., யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், சிறிஸ்கந்தன், ஜெயமாலா, ஜெயமதி, ஜெயசிறி ஆகியோரின் பாசமிகு தாயாரும், திலகவதி, தம்பிராஜா, சுந்தரராஜா, Dr. பிரேமகிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கார்த்திகா-குகனானந்தா, திருத்திகா, அனுத்திகா, சதுர்த்திகா, மயூரன்-சொறோனா, மாதுரன், சங்கீதா-மெனறிஸ்யோ, மதுசூதனன், ஆரபி, விதுரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், மாலன், சிட்னி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.04.2010) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பொரளை கனத்தை மயானத்தில் 4.00 மணிக்குத் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### இராமநாதன் புஸ்பயோகேந்திரன்

(உரிமையாளர் 'வெங்டேஸ்வரா' 202 குமார வீதி, கொழும்பு-11, )
பொருளாளர், இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை)

இணுவில் கிழக்கு தியேட்டர் வீதியைப் பிறப்பிடமாகவும் 2/2 A புளொக், அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்டிருந்த இராமநாதன் புஸ்பயோகேந்திரன் 18.04.2010 அன்று காலமானார். அன்னார் அமரர் சங்கரப்பிள்ளை இராமநாதன் அன்னலட்சுமி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், நவரட்ணராஜா, அமரர் இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், கார்த்திகாவின் அன்புக் கணவரும், ராதிகேஸ் (மாணவன், கொழும்பு றோயல் கல்லூரி), ரதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராஜலிங்கம், அமரர் புஸ்பேந்திரா, புஸ்பயோகேந்திரி, புஸ்பராணி (ஜேர்மனி), குகேந்திரன் (ஜேர்மனி), சங்கரநாதன் (சங்கர் ரேட்ஸ், கொழும்பு-11), அமரர் உருத்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரலீலாவதி, கதிர்காமநாதன் (வவுனியா), அமரர் விவேகானந்தன் (ஜேர்மனி), தயாளினி (ஜேர்மனி), தர்மினி, யசோதரா நடராஜா, அமரர் மனோராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரகதீஸ்வரன், ரஜந்தி, ரட்ணா, மஞ்சு, செந்தூரன், பிரசா, மீரா ஆகியோரின் சிறிய தந்தையும், பத்மசுதன், தினேஸ், சகானா, லக்ஸனா, ஆகியோரின் பெரிய தந்தையும் கலைவாணி, காயத்திரி, தர்மிகா, ரஸ்னா, டயானா, பிரதீபா, கிருத்திகா, ஆகியோரின் மாமனாரும் நடராஜா (முத்தையா பிள்ளை அன்ட் கோ) வின் சகலனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 21.04.2010 புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் (பொரளை) நடைபெற்று பி.ப. 4.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (அன்னாரது பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று செவ்வாய்கிழமையும் இல. 83/9, 37 ஆவது ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் வைக்கப்படும்

தகவல்: இ. சங்கரநாதன் (சர்வா)
2502010, 0777-555391

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தற்கொலைத்தாக்குதல்; பொலிஸார் உட்பட 23 பேர் பலி!

பெஷாவர், ஏப். 21

வட-மேற்கு பாகிஸ்தான் நகரான பெஷாவரில் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பொலிஸாரும், ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டோரும் அடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பெஷாவர் நகரில் உள்ள கிஸ்ஸா கவானி (கதை சொல்பவர் பஜார்) பகுதியிலுள்ள மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தைப் பகுதியில் இந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இதில் பல கடைகள் சேதமடைந்தன என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

விலைவாசி உயர்வுக்கும், மின்சார வெட்டுக்கும் ஆட்சேபனை தெரிவித்து, இப்பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதை பொலிஸார் அவதானித்துக்கொண்டிருந்தனர். அச்சமயம், பயங்கர ஓசையுடன் இக்குண்டு வெடித்தது. இதில் நகரின் அதிசிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளில் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்து, கூட்டமொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது நான் அங்கு இருந்தேன். அச்சமயம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். தற்போது சரளமாகக் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. பாதுகாப்புத் தேவை என நான் அவரிடம் வலியுறுத்தினேன். சில நிமிடங்களில் குண்டு வெடித்தது'' என காலித்கான் என்பவர் குறிப்பிட்டார்.

''குண்டுவெடிப்பில் இந்த பொலிஸ் அதிகாரியும் பலியானார். இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் உரிமை கோரவில்லை. சமீப காலமாக, தொடர்ச்சியாக தலிபான்களே இத்தகைய தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்கள்'' என்றும் அவர் விவரித்தார்.

''பாதுகாப்புத் தேவை என நான் கூறியதும் அவர், ''அஞ்சவேண்டிய அவசியமில்லை'' - என்றார்.

இதையடுத்து, நான் கூட்டம் நடந்த சதுக்கத்திலிருந்து முன்னோக்கிச் சென்றேன், அது தருணம் குண்டுவெடித்தது. மைதானத்தில் எங்கும் சடலங்கள் சிதறிக் கிடந்தன'' என்றும் காலித் கான் மேலும் விளக்கினார்.

''கொல்லப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, பிரதி அத்தியட்சகர் குல்பேட் ஹுஸைன் ஆவார்'' என பாகிஸ்தான் ஊடகம் ஒன்று குறிப்பிட்டது.

அதேவேளை, பெஷாவர் நகரில் பொலிஸ் தரப்பில் நடத்தப்படும் ஒரு பாடசாலைக்கு வெளியே குண்டு வெடித்தது. இதில் ஒரு குழந்தை பலியானது. 6 மாணவர்கள் உட்பட 7 பேர் காயமடைந்தனர்.

கைபர் சாலையில் உள்ள பாடசாலையின் பிரதான வாசல் வழியாக திங்கட்கிழமை பகல் ஒரு மணிக்கு வகுப்புகள் முடிந்து மாணவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர். அப்போது பிரதான வாசலுக்கு வெளியே குண்டு வெடித்தது.

இந்த குண்டு வெடித்ததால், வெளியே நிறுத்தப்பட்டிருந்த 2 கார்களும், 2 கடைகளும் சேதமடைந்தன.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தப் பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் பொலிஸ்காரர்களின் குழந்தைகள் ஆவார்கள்.

# கிர்கிஸ்தானில் கலவரம் நீடிப்பு: ரஷ்யர்கள் மீது கடும் தாக்குதல்

மிஷ்கெக், ஏப். 21

சோவியத் ரஷ்யாவில் இருந்து பிரிந்த கிர்கிஸ்தானின் ஜனாதிபதி பாகியேவுக்கு எதிரான எதிர்க்கட்சியினரின் போராட்டம் நீடித்து வருகிறது. போராட்டம் கலவரமாக மாறியதில் இதுவரை 84 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து ஜனாதிபதி பாகியேவ் தலைமறைவானார். எதிர்க்கட்சிகளின் தலைமையில் இடைக்கால அரசு உருவாக்கப்பட்டது. இந்நிலையில், ஜனாதிபதி பாகியேவ் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு கஜகஸ்தானுக்கு தப்பி ஓடி அங்கு தஞ்சம் புகுந்துள்ளார்.

இடைக்கால அரசு பதவியில் இருந்தாலும் இன்னும் கலவரம் ஓயவில்லை. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாததால் அங்கு தொடர்ந்து கலவரம் நீடித்து வருகிறது.

நூற்றுக்கணக்கான கலவரக்காரர்கள் திங்கட்கிழமை இரவு துப்பாக்கி ஏந்தியபடி தலைநகர் பிஷ்கெக் அருகே உள்ள மாயவ்கா கிராமத்தில் புகுந்து வெறியாட்டம் நடத்தினார்கள்.

இங்கு ரஷ்யர்கள், துருக்கியர்கள் ஆகியோர் பெருமளவில் தங்கியுள்ளனர். அவர்களை தடியாலும், துப்பாக்கியாலும் தாக்கினார்கள். அவர்களின் வீடுகளுக்குத் தீ வைத்தனர்.

இச்சம்பவத்தில் 13 பேர் காயமடைந்தனர். நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர அப்பகுதிக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. கலவரத்தில் ஈடுபட்ட சுமார் 50 பேர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் இராணுவம் ரோந்து சுற்றி வருகிறது. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாததே கலவரத்துக்குக் காரணம் என்பதை இடைக்கால அரசு ஒப்புக் கொண்டுள்ளது. எனவே, நாட்டில் ஜனநாயகம் மலர விரைவில் ஒரு செயற்திட்டம் வகுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இப்பிரச்சினைக்கு முடிவு கட்ட இன்னும் 6 மாத காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தி புதிய அரசு உருவாக்கப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் அரசியல் சட்ட திருத்தம் கொண்டு வரப்படும் என உயர் அதிகாரி ஓமுர்பெக் தெகிபயேவ் தெரிவித்துள்ளார்.

# தோழியின் கணவரது காதைக் கடித்த நபருக்கு சிங்கப்பூரில் சிறைத்தண்டனை

சிங்கப்பூர், ஏப். 21

சிங்கப்பூரில் தோழியின் கணவருடைய காதைக் கடித்துத் துண்டாக்கிய இந்திய வம்சாவழியினருக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர் அன்பழகன் ராகவன் (வயது - 42). அவரது தோழி இயமலை (வயது - 28). கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இருவரும் மதுக் கடைக்குச் சென்று மது அருந்தியுள்ளனர். இது இயமலையின் கணவர் இராமச்சந்திரனுக்குத் தெரிய வந்துள்ளது. அவர் மனைவியைக் கண்டித்துள்ளார்.

ராகவன், இராமச்சந்திரனுடனும் பிரச்சினைப்பட்டுள்ளார். இதில் இருவருக்கும் இடையே பெரிய சண்டை மூண்டுள்ளது. அப்போது இராமச்சந்திரனின் இடது காதின் பாதியை அன்பழகன் கடித்துத் துண்டாக் கிவிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த இராமச்சந்திரன் நீதிமன்றத்தில் முறையிட்டார். இந்த வழக்கு கடந்த சில மாதங்களாக நடந்து வந்த நிலையில், அன்பழகன் ராகவன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அன்பழகன் ராகவன் சற்றும் பின் விளைவை எதிர்பாராமல் ஒருவரின் காதைக் கடித்துத் துப்பியுள்ளார். அவரின் இந்தக் குற்றத்தை மன்னிக்க முடியாது. இதனால் அவர் தண்டனைக் காலத்தை முழுமையாக அனுபவித்தே தீர வேண்டும் என்று நீதிபதி கூறியுள்ளார்.

# ஆஸ்திரேலியாவில் குடியேறுவோர் அங்கு பெரும்பான்மையாகும் ஆபத்து உண்டாம்!

சிட்னி, ஏப். 21

ஆஸ்திரேலியாவில் வெளிநாடுகளிலிருந்து குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அடுத்த 15 ஆண்டுகளில் குடியேறுபவர்கள், பெரும்பான்மை யினராகி விடுவார்கள். உள்நாட்டில் பிறந்தவர்கள் சிறுபான்மையினராகி விடுவார்கள் என்று அந்த நாட்டுப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து ஆஸ்திரேலியாவில் குடியேறுபவர்களில் அதிகம்பேர் பிரிட்டனிலிருந்து வந்துதான் குடியேறுகிறார்கள். அவர்களின் சதவீதம் குடியேறுபவர்களில் 14.2 ஆகும்.

அடுத்த படியாக நியூஸிலாந்து நாட்டினர் 11.4 சதவீதம் பேர் ஆவார்கள். இந்தியர்கள் 3 ஆவது இடத்தில் உள்ளனர். அவர்களின் சதவீதம் 11.2 ஆகும்.

சீனர்கள் 10.5 சதவீதம் பேர். வெளிநாட்டினர் அனைவரும் சிட்னி, மெல்போர்ன் ஆகிய நகரங்களில்தான் குடியேறுகிறார்கள். இதனால் அந்த 2 நகரங்களிலும் வெளிநாட்டினரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

2006 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதம் பேர் வெளிநாடுகளில் பிறந்தவர்கள் அல்லது அவர்களது பெற்றோரில் ஒருவர் வெளிநாட்டில் பிறந்தவர் ஆவார். அடுத்த 15 ஆண்டுகளில் வெளிநாட்டில் இருந்து குடியேறுபவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்துக்கு அதிகமாகி விடும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

# சீனாவில் பூகம்பத்தில் பலியானோரின் எண்ணிக்கை இரண்டாயிரமாக உயர்வு!

பீஜிங், ஏப். 21

சீனாவின் மேற்குப் பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட பூகம்பத்துக்குப் பலியானோரின் எண்ணிக்கை 2,039 ஆக உயர்வடைந்துள்ளது என நேற்று செவ்வாய்க்கிழமை சீனா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

சீனாவின் மேற்கு பகுதியிலுள்ள குயின்காஸ் மாகாணத்தில் கடந்த வாரம் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இதில் வீடுகள், கட்டடங்கள் ஆகியவை இடிந்து சேதமடைந்தன. ஆரம்பத்தில் மரணித்தோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவில் இருந் தது.

தொடர்ந்து இடிபாடுகளை அகற்றிய போது அதிக அளவில் சடலங்கள் மீட்கப்பட்டன. எனவே, மரணித்தோரின் எண்ணிக்கை 2,039 என சீன அரசு நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மேலும் பூகம்பம் தாக்கிய திபெத் பீடபூமியின் யூஷு பகுதியில் 195 பேரை காண வில்லை என்றும் தெரிவித் துள்ளது.

பூகம்பத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சீனாவின் தேசிய கொடி ஒருவாரத்துக்கு அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதற்கிடையே பூகம்பம் நடந்த 5 நாட்களுக்குப் பின்னர் இடிபாடு களில் சிக்கிய ஒரு திபெத்திய தம்பதியும், ஒரு குழந்தையும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

## உலக அரங்கில்

# இரவு விளக்கொளியால் புற்று நோய் வரலாம்

லண்டன், ஏப். 21

இரவு நேரங்களில் திடீரென விளக்கை எரிய விடுபவர்களா நீங்கள்? அப்படியானால், இனி அவ்விதம் செய்யவேண்டாம். இரவில் விளக்கெரிந்தால் புற்றுநோய் வர வாய்ப்பிருக்கிறது என ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

பிரிட்டன் மற்றும் இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஓர் ஆய்வில், இரவு நேரங்களில் திடீரென விளக்கைப் போட்டால், அதனால் ஏற்படும் வெளிச்சத்தால் நம் உடலில் உள்ள செல்கள் அதிக அழுத்தத்துக்கு உள்ளாகின்றன எனத் தெரியவந்தது. இந்த அதிக அழுத்தம் புற்று நோய்க்கு வழி வகுத்து விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அடர்த்தி மிகுந்த இரவில் திடீரென ஆனால் குறுகிய நேரத்துக்கு 'பளீர்' என்று விளக்கு எரிந்தால் கூட, புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதுகுறித்து விஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்ற பென்ஷ்லோமோ என்பவர் கூறுகையில், ''இரவு நேரத்தில் செயற்கையாக ஏற்படுத்தப்படும் எவ்வித வெளிச்சமும் நமது உடலைப் பாதிக்கும். நேரத்துக்கு ஏற்றாற்போல் செயற்படும் நம் உடலின் கடிகாரம் அதனால் பாதிக்கப் படும். மிக மிகக் குறைந்த வெளிச்சம் கொண்ட இரவு விளக்குகள் இருந்தால் அவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம். அவைதான் பாதுகாப்பானவை'' என்று தெரிவித்தார்.

# ஈராக்கிய அல்-குவைதா தலைவர்கள் உயிரிழப்பு

## பிரதமர் நூரி மாலிகி தகவல்

பக்தாத், ஏப். 21

ஈராக்கிய அல்-குவைதா தலைவர்கள் அண்மையில் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டனர் என பிரதமர் நூரி மாலிகி தெரிவித்துள்ளார்.

அல்-குவைதா இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய இரண்டு தலைவர்கள், அமெரிக்க - ஈராக் படையினர் இணைந்து நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபு அயூப் அல்-மாசரி, அபு ஒமர் அல்-பகாடி ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல்கள் ஈராக்கிய அல் - குவைதா இயக்கத்திற்குப் பேரிழப்பாக அமையும் என அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் தாயார் விவகாரம் குறித்து மத்திய அரசு அறிக்கை தர வேண்டும்!

## பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானி வற்புறுத்து



டில்லி, ஏப். 21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தயாரை விமான நிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்ட விடயம் குறித்து அறிக்கை அளிக்குமாறு மத் திய அரசை பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி வலியுறுத்தியுள்ளார்.

பார்வதி அம்மள் திருப்பியனுப்பப்பட்ட விடயம் தி.மு.கவிற்குத் தெரியாது என டி.ஆர். பாலு தெரிவித்தமையானது நகைப்பிற்கு இடமான செயல் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 'தாயார் பார்வதி அம்மாளை, விமான நிலையத்திலேயே திருப்பி அனுப்பிய விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பியது.

அப்போது இந்த விவகாரம் குறித்து பேசிய பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி மேலும் கூறியவை வருமாறு -

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சியே இந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறது. சிகிச்சைக்காக வந்த ஒருவரை, மாநில அரசிடம் கூட விவாதிக்காமல் திருப்பி அனுப்பியது எமது கலாசாரத்துக்கு ஒவ்வாதது. இது வருத்தமளிக் கும் செயல். இதுபற்றி மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் - என்றார்.

டில்லி மேல்-சபையிலும் இந்தப் பிரச்சினை எதிரொலித்தது. இந்தியக் கம்யூனிஸ்டு தலைவர் டி.ராஜா மற்றும் பா.ஜ.க. மூத்த தலைவர் எஸ்.எஸ்.அலுவாலியா ஆகியோர் இந்த விவகாரம் குறித்துப் பேசினர்.

அப்போது அவர்கள், இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிகளில் ஈடுபடுவதாகக் கூறும் மத்திய அரசு, சிகிச்சைக்காக வந்த பார்வதி அம்மாளை திருப்பி அனுப்பிய காரணத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். இதுகுறித்து நாடாளுமன்றத்தில் மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

இதற்குப் பொறுப்பானவர்கள் இந்திய குடியுரிமை அதிகாரிகளா அல்லது தூதரக அதிகாரிகளா என்பதைக் கண்டுபிடிக்க சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும். மகனுடைய நடவடிக்கைகளுக்காக தாயாரிடம் குறை கண்டு பிடிப்பது தவறான அணுகுமுறை - என்றனர்.

# பிரபாவின் தாயாருக்கு மருத்துவ சிகிச்சை: மத்திய அரசிடம் அனுமதி கேட்கத் தயார்!

## முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஏப். 21

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயாருக்கு தமிழகத்தில் மருத்துவ சிகிச்சையளிக்க அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு கடிதம் எழுதத் தயார் - என்று முதல்வர் கருணாநிதி சட்டப் பேரவையில் தெரிவித்தார் .

மலேஷியாவில் இருந்து சென்னை வந்த பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள், உடனடியாக அந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். இந்தப் பிரச்சினை குறித்து சட்டப்பேரவையில் திங்கட்கிழமை சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

தீர்மானத்தின் மீது, டி.சுதர்சனம் (காங்கிரஸ்), ஜி.கே.மணி (பா.ம.க.), பாலபாரதி (மார்க்சிஸ்ட்), சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), சதன் திருமலைக்குமார் (ம.தி.மு.க.), ரவிக்குமார் (விடுதலைச் சிறுத்தைகள்) ஆகியோர் பேசினர்.

இதற்குப் பதிலளித்து முதல்வர் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

பார்வதியம்மாள் தனது சிகிச்சைக்காக விசா பெறலாம் என்ற நிலையில் அரசின் உத்தரவு அமைந்து, அந்த விசாவினைப் பெற்று அவர் சென்னை விமான நிலையத்துக்கு வந்தார்.

அப்போது, மத்திய அரசினுடைய அதிகாரிகள் சிலர், விமான நிலையத்தில் - விமானத்துக்குள்ளே நுழைந்து, தவறுதலாக உங்களுக்கு விசா வழங்கப்பட்டிருக் கிறது. ஆகவே, நீங்கள் திரும்பிச் செல்ல வேண் டும் என்று கூறி மலேஷியாவுக்கே திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இதுபற்றிய முழுத் தகவலை மறுநாள் காலையில் பத்திரிகைகளில் படித்த பிறகே தெரிந்து கொள்ள முடிந்தது.

இதேபோல ஒரு சம்பவம் 1985 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23 ஆம் திகதி நடைபெற்றது. தமிழகத்தை விட்டு வெளியேற வேண்டுமென தந்தை செல்வாவின் மகன் சந்திரஹாசன், பாலசிங்கம், சத்தி யேந்திரா ஆகியோருக்கு உத்தரவு பிறப் பிக்கப்பட்டது. அந்த உத்தரவும் அன்றிருந்த மாநில அரசின் வேண்டுகோள்படி தான் இடப்பட்டது எனக் கூறப்பட்டது. அதில், உண்மை எதுவோ எனக்குத் தெரியாது.

எங்களுக்குச் செய்தி கிடைத்து உடனடியாக, டெசோ அமைப்பின் சார்பாக சென்னையில் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, ரயில் மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டது. இதையொட்டி, 5 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். உடனடியாக, சந்திரஹாசன் மீதான உத்தரவு திரும்பப் பெறப்பட்டது. அதற்குப் பிறகு, பாலசிங்கம் மீதான நாடு கடத்தும் உத்தரவும் திரும்பப் பெறப்பட்டது.

பார்வதியம்மாள் தமிழகத்துக்கு வருவது பற்றி அவரிடமிருந்தோ, அவர்களுக்கு துணைபுரிய விரும்புகிறவர்களிடம் இருந்தோ தமிழக அரசுக்கு எந்த விதமான கடிதமோ, தக்வலோ நேரடியாக வரவே இல்லை.

மத்திய அரசுக்கும் பார்வதியம்மாளுக்கும் இடையேதான் இந்தப் பயணம் பற்றிய செய்தித் தொடர்பு இருந்திருக்கிறதே தவிர, தமிழக அரசுக்கு இதிலே எந்தவிதமான தொடர்பும் கிடையாது. கடந்த 2003 ஆம் ஆண்டில், தமிழக அரசின் சார்பில் மத்திய உள்துறைக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது. அந்தக் கடிதத்தின் 2 ஆவது பத்தியில், இலங்கைத் தமிழர்கள் வேலுப்பிள்ளை மற்றும் பார்வதியம்மாள் ஆகியோர் இந்தியாவுக்குள் சட்ட ரீதியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ நுழைவதற்குத் தடைவிதிக்க வேண்டும். அவர்களது பெயர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு கடிதம் எழுதி, அதன் காரணமாக தடை விதிக்க ஏற்பாடு செய்தவர்கள் - எங்கே அந்த உண்மை இங்கே வெளியிடப்பட்டு விடும் என்ற காரணத்தாலோ என்னவோ - மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில் - எல்லா கட்சியினரும் குரல் எழுப்புகின்ற இந்தப் பிரச்சினையில் - அவர்கள் (அ.தி.மு.க.) மாத்திரம் வராமல் இருந்து விட்டார்கள் என்பதைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம் -என்றார்.

# பிரபாவின் தாயாரை தமிழக அரசிடம் கேட்காமல் திருப்பியனுப்பியமை ஏன்?

## நாடாளுமன்றத்தில் தி.மு.க. கேள்வி

சென்னை, ஏப். 21

தமிழக அரசிடம் ஆலோசனை நடத்தாமல், பிரபாகரனின் தாயாரை மலேஷியாவுக்குத் திருப்பி அனுப்பியமை ஏன் - என்று நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.

இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு நேற்றுமுன்தினம் எழுப்பினார்.

அப்போது அவர் பேசியவை வருமாறு-

சென்னைக்கு விமானத்தில் வந்த பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை இந்திய அரசின் குடியுரிமை அதிகாரிகள் சென்னை விமான நிலையத்தில் தரை இறங்கவிடாமல் திரும்பவும் கோலாலம்பூருக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்தத் தகவலை தமிழக அரசுக்கு மத்திய அரசு தெரிவிக்க வில்லை.

சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் உள்ள மாநில அரசுடன், இந்தப் பிரச்சினை குறித்து கலந்தா லோசிக்கவில்லை. பார்வதி அம்மாள், 2003 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் வசித்தார். 2010 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை இலங்கையில் வசித்தார்.

எனவே, அவர் மீது எந்த குற்றப் பின்னணியும் இருப்பதாக இந்திய அரசோ, இலங்கை அரசோ கருதமுடியாது.

கடந்த 2003 ஆம் ஆண்டு பார்வதி அம்மாள், இலங்கை சென்ற பின் அவர் மீண்டும் இந்தியா விற்கு வந் தால் அனுமதிக்கக் கூடாது என மத்திய அரசுக்கு ஜெயலலிதா தலைமையிலான அன்றைய அ.தி.மு.க. அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது.



இப்படிப்பட்ட நிலையில், இப்போதுள்ள சூழ்நிலையில் மத்திய அரசு, மாநில அரசோடு கலந்து பேசி மறுபரி சீலனை செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இந்தியாவில் வந்து சிகிச்சை செய்து காள்ள ஒருவருக்கு விசா வழங்கி விட்டு, பின்னர் அவரை தரை இறங்க விடாமல் திருப்பி அனுப்பியமை ஏன்? இதுபற்றி மாநில அரசிடம் ஏன் கலந்தாலோசிக்கவில்லை? இது குறித்து மத்திய அரசு விளக்கம் தருமா? - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# மும்பைத் தீவிரவாதிக்கு சிகிச்சை; பார்வதி அம்மையாருக்கு மறுப்பா?

## சட்டசபையில் காங். - கம்யூ. கடும் மோதல்!

சென்னை, ஏப். 21

பிரபாகரனின் தாயார் சிகிச்சைக்காக சென்னை வந்தபோது மலேஷியாவுக்கு திப்பியனுப்பப்பட்ட பிரச்சினை குறித்து சட்டசபையில் நேற்றுமுன்தினம் காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் கட்சியிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

பார்வதி அம்மாள் திருப்பியனுப்பப்பட்ட சம்பவம் குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றை பா.ம.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி முதலிய கட்சிகளை சேர்ந்த பல உறுப்பினர்கள் கொண்டுவந்தனர்.

இதன்மீது சட்டசபை காங்கிரஸ் கட்சி தலைவர் சுதர்சனம் பேசியவை வருமாறு-

மறைந்த பிரபாகரனின் தாயார் திடீர் என்று சென்னை விமான நிலையத்திற்கு வந்துள்ளார். அப்போது அவர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார் - என்றார்.

அப்போது பா.ம.க. உறுப்பினர் வேல் முருகன் -

பிரபாகரன் மறைந்து விட்டார் என்று சட்டசபை காங்கிரஸ் கட்சி தலைவர் சுதர்சனம் குறிப்பிடுகிறார். அவர் இறந்ததற்கான சான்றிதழை இன்னும் இலங்கை அரசு இந்தியாவிற்கு சமர்ப்பிக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை அவர் உயிருடன்தான் இருக்கிறார் என்றுதான் நம்புகிறோம் - என்றார்.

தொடர்ந்து சுதர்சனம் -

எங்களைப் பொறுத்தவரை பிரபாகரன் இறந்ததாகத்தான் செய்தி கிடைத்துள்ளது. சுபாஸ் சந்திரபோஸ் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்று சிலர் சொல்வது போல, வேல்முருகனும் பிரபாகரன் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார் என்று சொல்கிறார்.

மலேஷியாவில் பல மருத்துவமனைகள் உள்ளன. ஆனால் பிரபாகரன் பெயரைச் சொல்லி கட்சி நடத்தும் சிலர்தான் பார்வதி அம்மையாரை அழைத்துவந் துள்ளனர். முதலமைச்சருக்கு தெரியாமல், தமிழக அரசுக்கு தெரியாமல் வந்தது எப்படி?.

ஆனால் வைகோ., பழ.நெடுமாறன் ஆகியோருக்கு மட்டும் பார்வதி அம்மாள் வந்தது எப்படித் தெரியும். மனிதாபிமான அடிப்படையில் அந்த அம்மையாருக்கு சிகிச்சை அளிப்பதில் காங்கிரஸ் கட்சிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் சர்வதேச பிரச்சினைக்கு உட்பட்ட அம்மையார் மத்திய மாநில - அரசுகளுக்கு தெரியாமல் எப்படி சென்னை வந்தார்.

எனக்கு வந்த செய்தி என்னவென்றால் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடக்கும் போது தமிழர் எழுச்சி மாநாட்டை அம்மையாரை வைத்து நடத்த திட்ட டுள்ளனர். அந்த மாநாட்டை வைத்து டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தி தமிழக அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தவேண்டும் என்பதே நோக்கமாகும். இந்த மாநாட்டை வைகோவும், நெடுமாறனும் நடத்தி மலிவான அரசியலை நடத்த முடிவு செய்துள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது. எனவே பார்வதி அம்மையாரை திரும்ப அனுப்பியது சரிதான் - என்றார்.

ஜி.கே.மணி (பா.ம.க.) -

ஒருநோயாளி என்றமுறையில் பார்வதி அம்மையாருக்கு சிகிச்சை அளிப்பதில் என்ன தவறு? மனிதநேயமின்றி ஈவு இரக்கம் இன்றி அவர் திருப்பி அனுப்பப் பட்டுள்ளார்.

அந்த அம்மாவை தடுத்து நிறுத்திய அதிகாரி யார்? திருப்பி அனுப்பவேண்டிய அவசியம் என்ன? அந்த அம்மையாருக்கு தமிழ்நாட்டில் சிகிச்சை அளிக்க தமிழக அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

பாலபாரதி (மார்க்சிஸ்ட்) -

பிரபாகரனின் தாயாருக்கு விசா கொடுத்தது இந்தியத் தூதரகம்தானே. விசா கொடுத்த அன்றே விசா செல்லாது என்றால் எப்படி?. இந்தச் சம்பவம் கண்டிக்கத்தக்கது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அந்த அம்மையாருக்கு தமிழகத்தில் சிகிச்சை அளிக்க தமிழக அரசும் இந்திய அர்சும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சிவபுண்ண்ியம் (இந்திய கம்யூ னிஸ்ட்) -

பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மையார் சென்னை விமான நிலையத்தில் இருந்து மீண்டும் மலேஷியாவுக்கு திரும்ப அனுப்பப்பட்டமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. இந்தியத் தூதரகம் விசா தவறாக வழங்கிவிட்டது என்றால் திருப்பி அனுப்பப்பட்டதும் தவறுதான். போர்க் குற்றவாளிகளுக்கு கூட சிகிச்சை அளிப்பது நடைமுறையில் உள்ளது. மும்பையில் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட தீவிரவாதிக்கு கூட சிகிச்சை அளிக்கப்பட்டது; ஆனால் பார்வதி அம்மையாருக்கு சிகிச்சை அளிக்க மறுப்பது கண்டனத்துக்குரியது. இதை அரசியல் பிரச்சினையாக கருத வேண்டாம்.

பீட்டர் அல்போன்ஸ் (காங்.) -

பிரபாகரனின் தாயார் சிகிச்சைக்காக அவரே விரும்பி சென்னை வந்தாரா? இல்லை அவர் அரசியல் வாதிகளால் வரவழைக்கப் பட்டாரா? அந்த அம்மையா ருக்கு தமிழகத் தில் சிகிச்சை அளிப்பது குறித்து காங்கிரஸ் கட்சிக்கு எந்த ஆட் சேபனையும் இல்லை - என்றார்.

சதன் திருமலைக்குமார் (ம.தி.மு.க.) -

பார்வதி அம்மாள் யாராலும் அழைத்து வரப்படவில்லை. அவர் உரிய முறையில் விசா பெற்றுதான் சென்னை வந்தார். ஆனால் அவர் சென்னையில் இருந்து மலேஷியாவுக்கு திரும்ப அனுப்பப்பட்டுள்ளமைக்கு ம.தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பார்வதி அம்மையாரை வைத்து அரசியல் செய்யவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான சேவைகள் ரத்தால் பிறநாடுகளில் பாதிப்புற்ற இலங்கையருக்கு உதவுங்கள்

## வெளிவிவகார அமைச்சிடம் அவசர வேண்டுகோள்

கொழும்பு, ஏப்.21

ஐஸ்லாந்தில் எரிமலை பெரும் புகையைக் கக்கி வருவதால் ஐரோப்பிய நாடுகளின் விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இலங்கை வரமுடியாமல் அந்நாடுகளில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு சரத் பொன்சேகாவின் கட்சி வெளிவிவகார அமைச்சிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான விஜித ஹேரத் இது தொடர்பாக நேற்று வெளிவிவகார அமைச்சுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐஸ்லாந்தில் ஏற்பட்டிருக்கும் எரிமலை வெடிப்புக் காரணமாக பல நாடுகளுக்கிடையிலான விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான பல விமான சேவைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளமையால் அந்நாடுகளில் இருந்து இலங்கை வருவதற்குத் தயாரான இலங்கையர்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

விமானசேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் வரை இலங்கையர்கள் அந்நாடுகளிலேயே தங்கவேண்டியேற்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்குப் பணத் தேவை ஏற்பட்டுள்ளது. அதிகமானவர்கள் கையிலிருக்கும் பணம் போதாமையால் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே, இது விடயத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சு தலையிட்டு அவர்களைக் காப்பாற்ற வேண்டும். எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதுவாக இருப்பினும் அது உடனடியாக விரைந்து எடுக்கப்பட வேண்டும். - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ-சி)

## ஒளி பெறப்போகும் வறுத்தோலை கிராமம்

மூளாய், ஏப். 21

சுழிபுரம் மேற்கு வறுத்தோலை கிராமத்துக்கு விரைவில் மின்சார வசதி கிடைத்து அந்தக் கிராமம் ஒளி பெறப் போகின்றது.

அங்கு தற்போது மின்சார சபையினர் மின்கம்பங்களை நட்டு வருவதுடன் மின்சாரக் கம்பிகளையும் இணைத்து வருகின்றனர்.

வறுத்தோலைக் கிராம மக்கள் பல வருடங்களாக மின்சார வசதி இன்றி மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-93)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 21

தென்மராட்சிக் கல்விவலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# பழக்கடைகளில் அசம்பாவிதம்; யாழ். மேயர் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 21

நேற்றைய 'உதயன்' பத்திரிகையில் 20 ஆம் பக்கத்தில் வெளியாகி இருந்த " இரவு நேரத்தில் வந்து பழக்கடைகளை அகற்ற எடுத்த முயற்சியால் நகரம் களேபரம்" என்ற தலைப்பில் செய்தி வெளியாகி இருந்தது.

இந்தச் செய்தி குறித்து மேயர் திருமதி யோ. பற்குணராஜா செய்திக்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் குறிப்பில் -

வாகனப் போக்குவரத்துக்கும் மக்களின் நடமாட்டத்துக்கும் இடையூறாக உள்ள இந்த பழக்கடைகளை உடன் அகற்றுமாறு வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. புத்தாண்டு வியாபாரம் முடிவுற்றதும் தாமாகவே அவ்விடத்தைவிட்டு அகலுவதாகவும் அது வரை கால அவகாசம் வழங்குமாறும் அவர்கள் கோரியிருந்தனர். அவர்களது நியாயபூர்வமான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, சித்திரைப் புத்தாண்டு முடிவுற்றதும் பழவியாபாரிகள் அனைவரும் குறிப்பிட்ட இடத்தை விட்டகலவேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நகரின் மத்தியில் பஸ் நிலையப் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகரித்ததன் காரணமாக, மேற்படி கடைகளை அகற்றுவதைத் தாமதப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டதனால் பழக்கடைகளை உடன் அகற்றுமாறு ஒலிபெருக்கி விளம்பரம் மூலமாகவும் நேரடியாகவும் அறிவித்தலும் கொடுக்கப்பட்டது.

எமது வேண்டுகோளை நிறைவேற்றத் தவறியர்களின் கடைகள் சபை ஊழியர்களினாலேயே அகற்றப்பட நேர்ந்தது. இதன் போது 2 லட்சம் ரூபா பெறுமதியான பழங்கள் நாசமாக்கப்பட்டதாக தாங்கள் வெளியிட்டசெய்தி மிகத்தவறானதாகும்.

நகரின் மையப்பகுதியில் தான்தோன்றித் தனமாக ஆரம்பிக்கப்பட்ட கடைகளை அகற்றி நகரின் போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்ய வேண்டிய பொறுப் பைத்தான் நேற்றிரவு (திங்கள் இரவு)எமது ஊழியர்கள் மேற்கொண்டனர்.

**ஆசிரியர் குறிப்பு:-** மேயர் கருதுவது போன்று மேற்படி செய்திக்கு நாம் முக்கியத்தும் தரவில்லை. குறிப்பிட்ட சம்பவத்தை மக்களுக்கு அறியத்தரும் பணியை மட்டுமே - இரவு வேளை நடந்த அசம்பாவி தத்தையே எமது வாசகர்களுக்குத் தெரி வித்துள்ளோம். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பழக்கடை வியாபாரிகள் எமது அலுவலகத்துக்கு வந்து தமக்கு நேர்ந்த கதியை முறையிட்டனர். இது வாசகர்கள் அறிந்துகொள்ள வேண்டிய தகவல்.

போக்குவரத்து நெருக்கடியை சீர்செய்வது, நகரை அழகுபடுத்துவது போன்ற நற்காரியங்கள் வேறு. இரவு வேளையில் அசம்பாவிதங்களை உருவாக்குவது வேறு.

# அமிதாப் பச்சன் கொழும்பு வந்தார்



கொழும்பு, ஏப்.21

இந்திய பொலிவூட் சூப்பர்ஸ்டார் அமிதாப் பச்சன் நேற்று கொழும்பு வந்தார். அடுத்த மாதம் இலங்கையில் இடம்பெறவிருக்கின்ற திரைப்பட விருது வழங்கல் விழா தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொள்வதற்காகவே அவர் இலங்கை வந்தார்.

நேற்றுக்காலை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தை வந்தடைந்த அமிதாப் பச்சனுக்கு விமான நிலையத்தில் வைத்து அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

மலர்மாலை அணிவிக்கப்பட்டு சிறுவர் களின் சிங்கள கலாசார நடனங்களுடன் அவர் விமான நிலையத்திற்கு வெளியே அழைத்து வரப்பட்டார். பிரபல இலங்கை நடிகர்கள் அவரை வரவேற்று அழைத்துச் சென் றனர்.

அடுத்த மாதம் இலங்கையில் இடம்பெறும் திரைப்பட விருது வழங்கல் விழாவில் ஹிந்தி நடிகர் ஷாருக்கான், அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் உட்படப் பல நடிகர், நடிகைகள் கலந்துகொள்ள விருக்கின்றனர் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவின் தேசிய இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 21

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகக் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட தேசிய இலக்கியப் போட்டி முடிவுகள் வருமாறு :-

**கட்டுரை -கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - தங்கராசா விதுசன் (விக்கினேஸ்வராக் கல்லூரி), 2ஆம் இடம் - ஜெயந்தினி சண்முகராசா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் - ரம்மியா பாலேந்திரம் (விக்கினேஸ்வராக் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - செள.கௌசல்யா (நெல்லியடி ம.ம.வி.), 2ஆம் இடம் - த. நிருஷா (விக்கினேஸ்வராக் கல்லூரி), 3ஆம் இடம் - சி. சிவசங்கர் (நெல்லியடி ம.ம.வி.)

**சிறுகதை (கனிஷ்ட பிரிவு)**

முதலாம் இடம் - தசாந்தினி ஜெயராசா (உடுப்பிட்டி மகளிர்), 2ஆம் இடம் - பைரவி பாலசுப்பிரமணியம் (உடுப்பிட்டி மகளிர்), 3ஆம் இடம் - அனோஜா சந்திரசேகர் (உடுப்பிட்டி மகளிர்)

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - ஜெசிதா ஜெகதீசன் (உடுப்பிட்டி மகளிர்), 2ஆம் இடம் - ஜெ. உஷானி (உடுப்பிட்டி மகளிர்), 3ஆம் இடம் - சி. மேரி ஜெனிற்றா (விக்கினேஸ்வராக் கல்லூரி)

**திறந்த பிரிவு**

முதலாம் இடம் - சி. செகராசசிங்கம் (வதிரி, கரவெட்டி), 2ஆம் இடம் - பொன் சுகந்தன் (நெல்லியடி), 3ஆம் இடம் - ஆ. இந்திராதேவி (கரவெட்டி மேற்கு)

**கவிதை (கனிஷ்ட பிரிவு)**

முதலாம் இடம் - பரமேஸ்வரன் ஸ்ரீ பிரணவன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்), 2ஆம் இடம் - தசாந்தினி ஜெயராசா (உடுப்பிட்டி மகளிர்), 2ஆம் இடம் - தர்சினி நகுலேஸ்வரன் (உடுப்பிட்டி மகளிர்), 3ஆம் இடம் - அனோஜா சந்திர சேகர் (உடுப்பிட்டி மகளிர்)

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - விஷ்ணுபிரியா விக்கினேஸ்வரமூர்த்தி (விக்கினேஸ்வராக் கல்லூரி), 2ஆம் இடம் - ஜெகசோதி லிங்கம் ஜெகசுகிர்தன் (நெல்லியடி ம.ம.வி.), 3ஆம் இடம் - விஜேந்திரன் விவேக் (நெல்லியடி ம.ம.வி.)

**திறந்த பிரிவு**

முதலாம் இடம் - திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் (துன்னாலை மத்தி), 2ஆம் இடம் - க. பாலன் (இமையாணன் கிழக்கு), 3ஆம் இடம் - சி. செகராசசிங்கம் (வதிரி)

**கவிதை (ஆங்கிலம்)**

முதலாம் இடம் - திருமதி பகீரதி கலைச்செல்வன் (துன்னாலை)

**பாடலாக்கம் (திறந்த பிரிவு)**

முதலாம் இடம் - சி. செகராசசிங்கம் (வதிரி), 2ஆம் இடம் - க. ஸ்ரீரங்கநாதன் (நெல்லியடி), 3ஆம் இடம் - விஜிதா ரகுநாதன் (அல்வாய் தெற்கு)

(ஒ-201)

## வியாபார, நிர்வாக முதுமாணி மாணவரின் பதிவுகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2010/2011ஆம் கல்வியாண்டில் வியாபார முதுமாணி (M.B.A.), நிர்வாக முதுமாணி (M.P.A.) கற்கைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குரிய பதிவுகள் நாளை வியாழன் பிற்பகல் 4 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் குறித்த தினத்தில் பதி வுகளை மேற்கொள்ளலாம் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

## தேநீர்க்கடை உரிமையாளரின் முன்மாதிரி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 21

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் வெளி நோயாளர்கள் மற்றும் விடுதிகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் உடல் நலத்தைக் கருத்திற்கொண்டு, இவ் வைத்தியசாலையின் முன்பாக இயங்கி வரும் தனியார் தேநீர்ச்சாலையில் சிகரெட், வெற்றிலை போன்றவற்றின் விற்பனை நிறுத்தப்பட்டுவிட்டன என்று அதன் உரிமையாளர் தெரிவிக்கின்றார்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் தமக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாகவே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக அவர் மேலும் கூறினார். (ஒ-300)

## ஊர்காவற்றுறை பஸ் தம்பாட்டி வரை செல்கிறது

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் யாவும் தற்போது தம்பாட்டி பெரியபுலம் அம்மன் கோயில் வரையில் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளன.

அந்தப்பகுதி மக்களின் பிரயாண வசதியைக் கருத்திற் கொண்டே பஸ் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக சபை யின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-300)

# வேட்பாளர்களிடம் இராஜினாமாக் கடிதம் பெற்றமைக்கு எதிராக ஐ.தே.மு. மீது வழக்கு

கொழும்பு, ஏப். 21

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து அவர்கள் தமது எம்.பி. பதவிகளை இராஜிநாமாச் செய்கிறார்கள் எனத் தெரிவிக்கும் வகையிலான - திகதியிடப்படாத - கடிதங்களைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐ.தே.முன்னணியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கும் நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்கப் பணித்திருக்கிறது.

இத்தகைய திகதியிடப்படாத இராஜிநாமாக் கடிதங்களைத் தடைசெய்யும் விதத்தில் நீதிமன்றம் ஏன் உத்தரவிடக்கூடாது என்பதற்கு எதிர்வரும் ஜூலை 18 ஆம் திகதிக்கு முன்னர் காரணம் காட்டும்படி ரணிலுக்கும், திஸ்ஸ அத்தநாயக்கவுக்கும் உத்தரவிட நேற்று முன்தினம் கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நீதிவான் லாபிர் நஹீர் உத்தரவு பிறப்பித்தார்.

இந்தத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களான ரஞ்சித் மத்துமபண்டார, அனந்த குமாரசிறி ஆகிய இருவரும் தாக்கல் செய்த மனு மீதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் மொனறாகலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள ரஞ்சித் மத்துமபண்டாரவின் வேட்புமனுத் தொடர்பில் சர்ச்சை கிளப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட ஐ.தே.க. தாக்கல் செய்த வேட்பு மனுவில் வேட்பாளர் ஒருவரின் பெயர் அழிக்கப்பட்டு பிறிதொரு பெயர் கடைசி நேரத்தில் க[illegible] மல் சேர்க்க[illegible] அந்த சர்ச்சை கிளப்பப்பட்டிருக்கின்றது.

# இராணுவ நீதிமன்ற விசாரணை மே 4ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

### ஜனாதிபதி நாடாளுமன்றில் உரையாற்றும்போது சபைக்கு பொன்சேகா சமுகம் தர முடியாத நிலை

கொழும்பு, ஏப். 21

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தின் விசாரணை நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற பின்னர் மே 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஆட்சேபித்து பொன்சேகா தரப்பில் கிளப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பான விசாரணை நேற்றும் நடைபெற்றது.

இவ்விடயத்தில் இரு தரப்பினரதும் எஞ்சிய வாதங்களை எழுத்து வடிவத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டு வழக்கை மே 4 ஆம் திகதிக்கு விசாரணையாளர்கள் ஒத்திவைத்தனர்.

இதற்கிடையில் நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜெனரல் பொன்சேகா, இராணுவக் காவலில் இருந்து நாளை நாடாளுமன்றத்துக்கு வருகை தருவதற்கு அனுமதிக்கப்பட்டு, எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டாலும்-

எதிர்வரும் 4 ஆம் திகதி அவருக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருப்பதால், அன்றையதினம் நாடாளுமன்ற அமர்வுக்கு ஜனாதிபதி வருகை தந்து, நாடாளுமன்றில் உரையாற்றும் நிகழ்ச்சியின்போது அவர் அங்கு பிரசன்னமாகியிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் முதலாம் வருட நிறைவை நினைவுகூரத் தயாராகின்றது பிரித்தானிய தமிழர் பேரவை

லண்டன், ஏப். 21

முள்ளிவாய்க்கால் பேரவலம் நடைபெற்று அடுத்த மாதத்தில் ஒரு வருடம் பூர்த்தி அடைவதை முன்னிட்டு அதனை நினைவுகூர பிரித்தானியா தமிழர் பேரவை தயாராகி வருகின்றது. இதற்காக அந்நாட்டு தமிழர்களை ஒன்று கூடுமாறும் அது அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்துத் தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது :-

மனிதாபிமானத்திற்கு எதிரான பெரும் குற்றமான முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்த்தப்பட்டு ஓராண்டு பூர்த்தி அடைகிறது. சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம் என்பவற்றை மீறி எமது பல்லாயிரக் கணக்கான உறவுகளைப் பட்டினி போட்டும், குண்டுகள் வீசியும் ஸ்ரீலங்கா அரசாங்கம் கொன்றபோது அவர்கள் எழுப்பிய அவலக்குரல் இன்னமும் எம் காதுகளை விட்டு நீங்கவில்லை.

இப்பேரவலத்தை நிறுத்துமாறு உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் சாத்வீகப் போராட்டங்களின் ஊடாக சர்வதேச சமூகத்தை மன்றாடிக் கேட்டதும் இன்னமும் எமது மனக்கண்களை விட்டு அகலவில்லை.

ஐ.நா.சபை தலையிடும், சர்வதேச சமூகம் தலையிடும் என நம்பிக்காத்திருந்த உறவுகள் அந்த எதிர்பார்ப்போடு அங்கேயே மடிந்து போனார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசின் தொடர்ச்சியான இனப்படு கொலையின் உச்சக்கட்ட நிகழ்வாக இதை வலியுறுத்துவதோடு, இந்த வரலாற்று உண்மையை மறுக்கும், திரிவுபடுத்தும் முயற்சிகளுக்கு எதிராக ஓங்கிக் குரல் கொடுப்போம்.

இதுதொடர்பான நினைவு கூரல் நிகழ்வுகள், கவனயீர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் நிகழ்வுகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும் - என்றுள்ளது. (அ-6)

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய அரசியற் கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் ஐந்து சதவீதத்துக்கு குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளதால் அவை ஆசனத்தெரிவில் இருந்த நிராகரிக்கப்பட்டன.

இந்த முடிவுகளின் பிரகாரம் விருப்பு வாக்குப் பெற்றவர்கள் விவரம் இன்று நண்பகலுக்கு முன்னர் அறிவிக்கப்படும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது, நாவலப்பிட்டிக் தொகுதியில் சில வாக்களிப்பு நிலையங்களில் மோசடிகள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அங்கு மீள்வாக்குப் பதிவு நேற்று இடம்பெற்றது.

அந்தத் தொகுதியின் முடிவுகளுடன் ஏனைய தொகுதிகளின் முடிவுகளையும் சேர்த்து மாவட்டமட்ட முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன. (அ-1)

## 35 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் தரப்பில் கம்பஹா மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற பஸில் ராஜபக்ஷவும் -

கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற விமல் விரவன்ஸவுமே புதிதாக அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்கப் போகின்றவர்கள் என்று அறியப்படுகின்றது.

இந்த இருவரையும் தவிர, ஏனைய அமைச்சர்கள் அனைவரும் முன்னர் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களாகவே இருப்பர் என்றும் கூறப்படுகின்றது.

பிரதமர் பதவிக்கு டி.எம்.ஜயரட்ண நியமிக்கப்பட்டாலும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், அவரது சகோதர ருமான பஸில் ராஜபக்ஷவுக்கு அமைச்சரவைக்குள் அதிகப்படியான சில பொறுப்புகள் வழங்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

'ஜனாதிபதியின் அலுவலக அமைச்சர்' என்ற கோதாவில் சில அமைச்சர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த வகையில் வெளிவிவகார விடயங்களையும் கண்காணிக்கும் பொறுப்புகள் பஸிலுக்கு வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதால் ஒவ்வொரு அமைச்சரின் கீழ் வரும் துறைகளின் விரிவும் பரப்பும் அதிகமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் சில காரணங் களுக்காக அது ஒத்திப் போடப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

நாளைய நாடாளுமன்ற அமர்வில் புதிய எம்.பிக்களின் சத்தியப்பிரமாணம் மற்றும் சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோரின் தெரிவு போன்றவை மாத்திரமே இடம்பெறும்.

நாளை காலை 8.45க்கு நாடாளுமன்றம் கூடுகின்றது. முதலில் சபாநாயகர் தெரிவு இடம்பெறும். அதனைத்தொடர்ந்து எம்.பிக்கள் அனைவரும் தெரிவுசெய்யப்பட்ட சபாநாயகரின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வர்.

இறுதி நிகழ்வாக பிரதி சபாநாயகர் தெரிவும் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சபை அடுத்த மாதம் 4ஆம் திகதிவரை சபாநாயகரால் ஒத்திவைக்கப்படும்.

நான்காம் திகதி மீண்டும் சபை கூடும் போதே அன்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் உரை நிகழ்த்துவார் என்று நாடாளுமன்ற செயற்குழு தெரிவிக்கின்றது.

இதேசமயம், ஆளும் தரப்பின் சிரேஷ்ட உறுப்பினரான ஜோன் செனிவிரத்ன புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படலாம் என அரசுத் தலைமையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரின் அலுவலக வட்டாரம் தெரிவிக்கின்றது.

இருவருக்குமிடையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போது ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தமையை அடுத்தே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என அறியப்படுகிறது.

பொன்சேகாவுக்கு நாடாளுமன்றம் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டாலும் கூட அவர் அங்கு சத்தியப்பிரமாணம் செய்து நாடாளுமன்ற அமர்வு முடிந்ததும் மீண்டும் பழையபடி தடுப்புக் காவலுக்குத் திரும்பவேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி கூறினார் என எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவிக்கின்றது.

ஆகவே, ஜெனரல் பொன்சேகா நாளை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று கூறப்படுகின்றது.(அ-சி)

# பழக்கடைகளில் வியாபாரம் வழமைபோல்!

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ். நகரப்பகுதியில் பஸ்நிலையத்துக்குப் பின்புறமாக மின்சாரநிலைய வீதியில் உள்ள அங்காடிப் பழக்கடைகள் நேற்று முன்தினம் இரவு திடீரென சேதமாக்கப்பட்ட நிலையிலும், அந்தப் பகுதியில் பழக்கடைகளில் வியாபாரம் நேற்று வழமை போல் இடம்பெற்றது.

சேதமாக்கப்பட்ட பழக்கடைகள் நேற்று மூடப்பட்டுக் கிடந்தன.அருகில் உள்ள அக்காடிக்கடைகளி லும் வழமைபோல் வியாபாரம் நடைபெற்றது.சேதமடைந்த கடை உரிமையாளர்கள் கடைகளைத் திருத்தும் பணி எதிலும் நேற்று ஈடுபடவில்லை.

அந்தப்பகுதியில் உள்ள ஏனைய கடைகளையும் மாநகரசபை ஊழியர்கள் அகற்றலாம் எனக்கருதி கடை உரிமையாளர்கள் நேற்றிரவு கடைப்பகுதியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (அ-1)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் எம்.எஸ்.தவ்பீக் 23 ஆயிரத்து 558 விருப்பு வாக்குகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும், ஐ.ம.சு.கூட்டமைப்பின் வேட்பாளர்களான சுசந்த புஞ்சி நிலமே 22 ஆயிரத்து 820 விருப்புவாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும், எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன 19 ஆயிரத்து 734 விருப்பு வாக்குகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும் உள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந் 8ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் வன்முறைகள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டு ரத்துச் செய்யப்பட்ட கும்புறுப்பிட்டி பிரதேசத்துக்கான வாக்குப்பதிவுகள் நேற்று மீளவும் நடத்தப்பட்டன.

அதன்படி திருகோணமலை தேர்தல் தொகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) 20 ஆயிரத்து 578 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 10 ஆயிரத்து 961 வாக்குகளையும், ஐக்கிய தேசியக்கட்சி 8 ஆயிரத்து 718 வாக்குகளையும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆயிரத்து 106 வாக்குகளையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 956 வாக்குகளையும், ஜனநாயகத் தேசிய முன்னணி 522 வாக்குகளையும் பெற்றுள்ளன.

முன்னர் வந்த தேர்தல் முடிவுகளின்படி மூதூர் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி 21 ஆயிரத்து 963 வாக்குகளையும், ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 18 ஆயிரத்து 576 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 ஆயிரத்து 68 வாக்குகளையும் பெற்றிருந்தன.

இதேபோன்று, சேருவில தொகுதியில் ஐ.ம.சு.கூட்டமைப்பு 22 ஆயிரத்து 756 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 6 ஆயிரத்து 936 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக்கட்சி 3 ஆயிரத்து 297 வாக்குகளையும் பெற்றிருந்தன.

இதன் பிரகாரம் ஐ.ம.சு.கூட்டமைப்பு 59 ஆயிரத்து 784 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக்கட்சி 39 ஆயிரத்து 691 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக்கட்சி 33 ஆயிரத்து 268 வாக்குகளையும் பெற்று தலா ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன. (அ-சி)

# நளினியின் அறையில் சோதனை

சென்னை, ஏப். 21

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நளினியின் அறையில் நேற்று திடீர் சோதனை நடத்திய பொலிஸார் கையடக்கத் தொலைபேசி ஒன்றைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக சிறை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகக் கூறப்பட்டது. (6)

## புதிய அரசாங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைவிடாது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச் சட்டம் மற்றும் அவசரகால விதிகள் என்பனவற்றைக் களைந்து மனித உரிமைகளைப் பேணும் சட்டங்களைப் புதிய அரசு உருவாக்க வேண்டும் என்று நேற்று சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நீண்ட பல வருடங்களாக இலங்கையில் நடைமுறையில் உள்ள மேற்படி அவசரகாலச் சட்டம் மக்களை நீண்டகாலம் தடுத்து வைக்கவும், இரகசிய சிறைச்சாலைகளை உருவாக்கவும் வழி செய்துள்ளது. அவை மட்டுமன்றி காணாமற் போதல், சித்திரவதை செய்தல், காவலில் வைப்பட்ட வேளை மரணங்கள் நேர்தல் போன்ற சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு முரணான சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

கடந்த 30வருடங்களில் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் நீதி விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆகப்பிந்தி மேற்சொன்ன கொடிய சட்டங்களை அரசாங்கம் ஊடகவியலாளர்களையும், அரசியல் எதிரிகளையும், தொழிற் சங்கங்களையும் அடக்கி ஒடுக்கப் பயன்படுத்தி வருகின்றது.

இலங்கை முன்னேறிச் செல்ல வேண்டுமானால் மக்களின் மனித உரிமைகளை மலினப்படுத்தி அவற்றை மீறி தட்டிப் பறிக்கும் இச் சட்டங்களை முற்றாகக் களைந்து. மனித உரிமை மீறல்களை ஊக்குவிக்கும் சட்ட விதிகளை நீக்க வேண்டும் - என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசிபிக் பிராந்திய உதவி இயக்குநர் மல்கோத்ரா நேற்றுத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், பொது சன பாதுகாப்புச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்ட விதிகள் என்பன இலங்கையின் பாதுகாப்புப் படைகள் மனித உரிமைகளை மீறத் தூண்டுதல் அளித்தும் உதவி புரிந்தும் வந்திருக்கின்றன - என்றும் மல்கோத்ரா கூறினார்.

இலங்கையில் போர் முடிந்து விட்டது. ஆனால் அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளை நசுக்குவதற்கும் மனிதாபிமான உரிமைகளை உரிய முறைப்படி நடைமுறைப்படுத்துவதை தடுப்பதற்கும் அவசர காலச் சட்டத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது - என்றும் அவர் மேலும் கூறினார். நீதித்துறை செயலற்றுப் போகும் விதத்தில் இதனை நடைமுறைப்படுத்துகின்றது. அவசரகாலச் சட்டத்தின் கீழாக விதிகளை அமைத்துள்ளது.

இப்போதுள்ள நடைமுறை நீக்கப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும்- என்றும் மல்கோத்ரா மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ-6)

BARATHY
சித்தன்கேணி
மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்
மீண்டும் சித்தன் கேணி மண்ணில்
பொருளியல்
திரு. மகேந்திரன்
A/L 2012 பிரிவு -2
ஆரம்பம் : 23.04.2010 வெள்ளி 5 P.M.
(சி/567105)

35ஆவது வருட சேவை
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
O/L Day Class இற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்
பிரிவு 03
O/L DAY CLASS
ஆரம்பம்: 23.04.2010 (8.30-2.30)
* பிரிவு 2 இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.
* இம்முறையும் பிரிவு 6மட்டுமே
* பிரிவு 4 மிக விரைவில்
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.
(சி/566980)

காணி விற்பனைக்கு
நாயன்மார் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒரு பரப்புக்காணி (யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : T. விவேகானந்தன்
137, செம்மணி றோட், நல்லூர்.

Deutsch, Dutch, French, Italian வகுப்புக்கள்
ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் ஜேர்மன் எம்பசி பரீட்சைக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மேலும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

SHAMROCK
ஈச்சமோட்டை,யாழ்.
A/L 2012
கலை, வர்த்தக,கணித, விஞ்ஞான பிரிவுடன் ஆங்கிலம் GIT வகுப்பும்
O/L
Day Class
English Paper Class
ஆரம்பமாகியுள்ளது.
(Best Staff)

எமது உயர்கல்விப் பிரிவின் மிகப்பெரும் சாதனை !
கடந்த ஆண்டு எம்மிடம் கற்ற
3 மாணவர்கள் 3A !
12 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர் !!
நீங்களும் பல்கலை செல்ல வேண்டுமா?
எம்முடன் இணையுங்கள்.
A/L 2012
கலைப்பிரிவு ஆரம்பித்துவிட்டது
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
மதுரம் இன்ஸ்ரிரியூட்
உயர்கல்விப் பிரிவு, கட்டப்பிராய்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ். [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org